SRI S. M. ANNAMALAI : போலீஸ் இலாகா ஊழியர்களில் 82 பேர்கள் இறந்திருப்பதாகவும், அவர்கள் குடும்பங்களுக்கு சர்க்கார் எவ்வித நஷ்டஈடும் கொடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். நஷ்டஈடு கொடுக்காததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : அரசாங்கம்தான் கொடுக்க வேண்டுமென்பதில்லை. Third Party Insurance இருக்கிறது. மற்றவர்களும் கொடுக்க முடியும்.

Supply of electricity to factories

* 686 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any possibility of the removal of restriction in the supply of electricity to factories like B & C Mills in the City of Madras?

THE HON. SRI V. RAMAIAH : It is not possible for the present to remove the existing restrictions in supply of electricity to B & C Mills and other factories receiving H.T. Supply in Madras City area.

SRI S. PAKKIRISAMI PILLAI : பி. அண்டு வி. தொழிலாளர்கள் சொல்வது போலவே மற்ற ஜில்லாக்களில் உள்ள சில விவசாயிகளுக்கு இந்த தொழிலாளர்களைக் கஷ்டப்படும்படி செய்து விட்டு மின்சாரக் கட்டுப்பாட்டை வைத்துவிட்டு கிராமப்புறங்களில் விஸ்தரிப்பதாகச் சொல்வது அநியாயமானது. இதை நீக்கி எல்லாத் தொழிலாளர்களுக்கும் கட்டுப்பாடற்ற வேலை நேரம் கிடைக்கும்படியாகச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பது அநியாயமானது என்று கனம் அங்கத்தினரைப் போல் எல்லா அங்கத்தினர்களும் கருதிவிட்டால் எனக்குக் கஷ்டமே இருக்காது. கிராமத்திற்குக் கொடுப்பதனால் நகரங்களில் பாதிக்கப்படவில்லை. நகரங்களிலேயே அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிற தொழில்கள் எல்லாவற்றிற்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்பதற்கு ஓர்வு இந்தக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோம்.

SRI P. S. CHINNADURAI : இந்த மாதிரியாக தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டுப்பாட்டை வைத்திருப்பதனால் தொழிலாளர்கள் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அதன் காரணமாக அவர்கள் குடும்ப வாழ்க்கையே பாதிக்கப்பட்டிருப்பதை கோவைமாவட்டத்தில் பல தொழிலாளர்களுடைய குடும்பங்களில் பார்க்கலாம். தொழிலாளர்களுடைய நன்மையை உத்தேசித்தாவது, தொழில் வளரவேண்டும் என்கிற எண்ணத்திலாவது தொழிற்சாலைக்கு விதிக்கப்படுகிற கட்டுப்பாட்டை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : நமது ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் தொழில்களும், தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் பெருகியிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்வது போல தொழிலாளர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படவில்லை. உற்பத்தியாகிய மின்சாரம் நல்ல முறையில் எல்லோருக்கும் விநியோகமாக வேண்டும் என்கிற அடிப்படையில் தொழிலாளர்களும் சம்மதித்திருப்பதன் காரணமாகத்தான் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறோம்.

Sugar Mills

* 687 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the terms and conditions under which the loan of rupees five lakhs was granted to Arooran Sugar Limited during 1958;

(*b*) when the loan amount was disbursed; and

10th March 1959]

(c) the purpose for which the loan was granted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The terms and conditions under which the loan to Thiru Arooran Sugars Limited was granted are :—

(i) The loan shall be repaid in full before the 31st March 1959 with interest at 5½ per cent per annum.

(ii) In case of default the debt shall be collected as an arrear of land revenue with penal interest at 7½ per cent per annum.

(iii) A promissory note shall be executed jointly by the Company as well as by Sri V. S. Tyagaraja Mudaliar and another guarantee agreement shall be executed by Sri V. S. Tyagaraja Mudaliar.

(b) The amount was disbursed on 12th August 1958.

(c) The loan was granted to the Company for an agricultural purpose, viz., to finance the purchase of chemical fertilizers for manuring sugarcane crop.

Paper toys

* 688 Q.—MR. SPEAKER: The Hon. Minister wants this question to be taken up next week. So, it will be taken up next week.

MR. SPEAKER: As the hon. Member Sri V. K. Kothandaraman is absent, question No. 689 and the answer will be printed in the official proceedings.

* 689 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) காஇத பொம்மைத் தொழில் வடாற்காடு ஜில்லா வேலூரில் ஆரம்பிக்கும் விஷயமாக பரிசீலனை முடிந்து விட்டதா ?

(ஆ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Government have decided not to pursue the proposal to establish a Training Centre for manufacture of paper toys, etc., at Vellore, due to the reduction in the provision for handicrfts in the Plan.

Lorries

* 690 Q.—SRI P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வாடகைக்கு சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடிய லாரிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை இருக்கின்றன ?

(ஆ) ஒவ்வொரு நாளும் எத்தனை மைல்கள் தூரம்வரை லாரிகளை ஓட்டிச் செல்லலாம் என்று சர்க்காரால் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The number of lorries plying for hire in each district is as follows :—

District.	*Number of lorries.*
Chingleput	225
Coimbatore	1,142
Kanyakumari	140
Madras	804
Madurai	517
The Nilgiris	426
North Arcot	443
Ramanathapuram	264
Salem	571
South Arcot	397
Tanjore	199
Tiruchirappalli	718
Tirunelveli	440
Total ...	6,286

(*b*) No, Sir.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO THE EXODUS OF PEOPLE FROM PARAMAKUDI AND MUDUKULATHUR TALUKS DUE TO FAMINE CONDITIONS.

MR. SPEAKER : The hon. Member, Sri K. Ramachandran, has given notice of a motion under rule 40 of the Assembly Rules, calling the attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance. Now he will explain it.

SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள முதுகுளத்தூர், பரமக்குடி போன்ற தாலுக்காக்களில் இருந்து அறுவடை மாதங்களான ஜனவரி பிப்ரவரி முதல் அதிகமான மக்கள் தஞ்சை ஜில்லாவுக்குப் போக ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் பகுதிகளில் சரியானபடி மழை இல்லாததன் காரணமாகவும், அதனால் விளைவு பொய்த்துப் போய் அறுவடை சொந்த ஊரில் செய்வதற்கு வழியில்லாது போய்விட்டதன் காரணமாகவும் இந்த மக்கள் வெளி ஜில்லாக்களுக்குப் போகிறார்கள். கிட்டத்தட்ட விவசாயத்தையே அந்தப் பகுதியில் நம்பிக்கொண்டு வாழ்ந்த மக்கள் 75 பேர்கள் இன்றைக்கு வயிற்றுப் பிழைப்பை நாடி இதர ஜில்லாக்களுக்கு—குறிப்பாக தஞ்சை ஜில்லாவிற்கு வெளியேறி வருகிறார்கள். இதைப்பற்றி ஆரம்பத்திலேயே **பத்**

10th March 1959] [Sri K. Ramachandran]

திரிகையில் வந்த ஒரு செய்தியில் முதன் மந்திரி போலத்தான் அவர்கள் போகிறார்களே தவிர வேறு என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. சரியான மழை ஊர் சாகுபடி நனருக இருந்தால் அவர்கள் போக வேண்டி இல்லை. போவதும் இல்லை. ஊரில் பிழைக்க வழி இல்லாதது மாகத்தான் அவர்கள் வெளியேறி வருகிறார்கள். விவசாயத்தை பிக்கொண்டிருந்து இப்படி ஏமாற்றம் அடைந்து போகிற மக்களுக்கு தல் உண்டாக்க உடனடியாக மாற்றுவேலை ஆர்களுக்குக் கிடைப்பது, அந்த ஜில்லாவில் எதாவது தொழிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். அறுவடை காலம் முடிந்து ஊருக்கு அவர்கள் திரும்பி வந்தாலும்—அடுத்த அறுவடை காலம் வரையில் அவர்களால் தங்களுக்கு வேண்டிய செல்வத்தை அங்கிருந்து ஈட்டிவர முடியாது. சிலபல மாதங்களுக்குள்ளேயே மீண்டும் அவர்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமைதான் உண்டாகும். ஆகவே அவர்களுடைய கஷ்டத்தை நிரந்தரமாக நீக்குவதற்கு அரசாங்கம் உடனே அந்தப் பகுதியில் வேறு ஒரு தொழிலே அவர்களுக்காக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக இத்தகைய ஐமீந்தாரிப் பிரதேசங்களில் பல கண்மாய்கள் செப்பனிடப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அங்கே 10,000 எக்கர்கள் வரை பாய்க்கூடிய பல கண்மாய்களுக்குச் செல்லும் கால்வாய்கள் பல நிரந்தரமாகத் தூர்ந்து போயிருக்கின்றன. மேலும் அங்கெல்லாம் ரோடு வசதிகள் மிகவும் குறைவு. இக் குறைகளை நீக்கும் காரியங்களை அங்கே செய்தால், வசதியற்ற மக்களுக்கு வசதிகள் கிடைப்பதுடன் பிற்பட்ட பகுதிகள் முன்னேறவும் முடியும். ஆகவே இந்தப் பகுதிகளில் இத்தகைய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டிய அவசியத்திற்கு அரசாங்கத்தின் கவனத்தை இழுக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேதான் இந்தப் பிரேரேபணையை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, there is no regular irrigation by perennial rivers or streams in the Ramanathapuram district and agricultural operations depend mainly on rainfall in September or October every year. It is an annual features in this district for agricultural labouring classes to go to the neighbouring districts during the harvest period for employment and then return to their villages as soon as the rains set in in the district. Owing to inadequate rainfall in 1958, in this district, during south-west or north-east monsoon periods, there was little or no prospect of getting a fair yield of crops with the result that agricultural labourers moved from the district to neighbouring districts in groups seeking livelihood there. This, as indicated above, is nothing new.

In the past, most of the people in this district had also openings for employment in Burma, Malaya and Ceylon with scope for better earnings. These avenues are now closed to them as no Indian emigration is allowed. Also, remittances from Malaya and Singapore to many of the labouring classes of this district have stopped. These things have aggravated the position, and the exodus of people to other districts has therefore been significant this year.

Proposals for the grant of special remissions of land revenue in the affected areas and the question of taking up relief measures for providing employment to the agricultural labourers are under the consideration of the Government.

III.—GOVERNMENT BILL.

...NT OF WAGES (MADRAS AMENDMENT) BILL, 1959.

...N. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to ... the Payment of Wages (Madras Amendment) Bill *,

MR. SPEAKER : The question is—

That leave be granted for the introduction of the Payment of Wages (Madras Amendment) Bill, 1959.

The motion was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1959-60—*cont.*

MR. SPEAKER : இன்றையதினம் கடைசி நாளாக பட்ஜெட்டின் மீது பொது விவாதம் நடைபெறும். இன்று முதலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரை 45 நிமிஷங்கள் பேசுவார். இப்போது அவர் பேசலாம்.

SRI S. B. ADITYAN : கனம் நிதி மந்திரி எப்போது பேசுவார் ?

MR. SPEAKER : அவர் 12 மணிக்குப் பேசுவார்.

SRI C. N. ANNADURAI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மேரில் கடைசி நாளாக இன்று பொது விவாதம் நடத்தப்படுகிறது. இந்த நிதி நிலை அறிக்கையின் பேரில் எங்கள் கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏற்கெனவே இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையொப்பி நானும் சில வார்த்தைகளைச் சொல்ல இங்கு நிற்கிறேன். ஆளும் கட்சியிலுள்ளவர்கள், தாங்கள் மேற்கொள்ளும் சீரிய முயற்சிகளிலெல்லாம் எல்லா அரசியல் கட்சிகளிலுள்ளவர்களும்—எல்லா எதிர் கட்சிகளிலுள்ளவர்களும்—தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த வேண்டுகோளை நல்லெண்ணத்துடனேயே விடுத்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் என் கருத்துக்களை இங்கே வைக்க முற்படுகிறேன். எல்லா அரசியல் கட்சிகளும் முக்கியமான பிரச்னைகளில் தங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் ஆளும் கட்சியினர் ஒன்றை மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர்கள், போடப்பட்ட திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோருகிறார்களே தவிர, திட்டங்கள் போடப்படும் நேரத்தில் மற்றெந்தக் கட்சியுடனும் கலந்தாலோசிப்பதில்லை ; அப்போது மற்றக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கும் பண்பை, இன்றுவரை, தேவையில்லை என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். மேலும், இதுவரையில், ஒத்துழைப்பு என்பதற்கு தகுந்த விளக்கங்களையும் தரவில்லை. நான் அறிந்த வரையில், ஒரு ஆட்சியிடம் அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பைத் தருவது என்பது, அவைகள் அந்த ஆட்சிக்கு எதிரிடையாக அதன்

* Published in the *Fort St. George Gazette*, Extraordinary dated 10th March 1959.

10th March 1959] [Sri C. N. Annadurai]

சட்டங்களை மீறும் இளர்ச்சிகளை நடத்தாமலிருப்பதும், அந்த ஆட்சி வரி விதிக்கும்போது வரி தரக்கூடாது என்று மக்களைத் தூண்டிவிடாமல் வரி கொடுக்கும் அளவிற்கு நல்ல மனப்பான்மையை மக்களிடம் வளர்ப்பதும் ஆகும். இவைதான் ஒரு ஆட்சியிடம் அரசியல் கட்சிகள் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதற்கு முக்கியமான அறிகுறிகள் என்று நான் கருதுகிறேன். இவை மட்டுமன்றி, வகுக்கப்படும் திட்டங்களும் செய்யப்படும் காரியங்களும் எத்தனை குறைகள் உள்ளனவாக இருந்த போதிலும் அவைகளைப் பற்றி குற்றம் குறைகள் சொல்லாமலும் இருக்க வேண்டும்— அவைகளைப் பற்றிக் குற்றம் குறைகள் சொல்வது கூடாது, அது தான் ஒத்துழைப்பு என்று ஆளும் கட்சியினர் கருதுவார்களானால், அத்தகைய ஒத்துழைப்பை ஜனநாயக நாட்டில் ஜனநாயக நாட்களில் எதிர்பார்ப்பதற் கில்லை என்பதை அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.— எதிர்க் கட்சிகளைப் பற்றி ஆளும் கட்சியினர் எப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதை, இந்த மன்றத்தில் அவர்கள் எடுத்துச் சொல்லும் பல கருத்துக்களை அறிவதிலிருந்தும் இம்மன்றத்திற்கு வெளி யில் அவர்கள் பேசுகிற பேச்சுக்களின் பத்திரிகைகளின் மூலம் அறிவதிலிருந் தும், எங்களால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. நாங்கள் ஆளும் கட்சியைப் பற்றி, அதிகமாகத் தாக்கிப் பேசாமல் இருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. நாங்களும் ஆளும் கட்சியை எவ்வளவு தாக்கிப் பேச இருமோ அதைவிட அதிகமாக ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேசுகிறார்கள். இப்போது இந்த மாநிலத்திலுள்ள எதிர்க் கட்சிகள் எதிர்க்கட்சிகளாகப் பணியாற்றுவதற்கு வேண்டிய நல்ல திறமையோடு இல்லை என்று, அண்மையில் கூட கனம் உள்நாட்டு அமைச்சர் ஒரிடத்தில் சொல்லியிருக்கிறார். ராஜ்யத்தில் நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லும் கனம் உள்நாட்டு அமைச்சரின் ஜனநாயகப் பண்பு எந்த வழியில் செல்கிறது என்று நான் பார்க்கிறேன். அவர், ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும், ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்று சொல்வ தன் மூலம் இப்போது நல்ல எதிர்க்கட்சி இல்லை, நல்ல எதிர்க்கட்சி இல்லை என்று இப்போதுள்ள எதிர்க்கட்சிகளை மட்டந்தட்ட எண்ணுகிறார் என்றே நான் கருதுகிறேன். அவர்தான் அவ்வாறு பேசுகிறார் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போது, நான் இங்கே வந்தவுடன் என்னுடைய கனம் நண்பர்கள், கனம் முதல் அமைச்சர் கூறிய ஒரு விஷயத்தையும் எனக்குத் தெரிவித்தனர். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் செய்து வரும் பிரசாரமானது பிச்சைக்காரர்கள் அங்கங்கே சென்று பிச்சை கேட்பதைப் போலத்தான் இருக்கிறது என்று நமது முதல் அமைச்சர் ஒரிடத்தில் சொல்லியிருப்பதாக என்னுடைய கனம் நண்பர்கள் என்னிடம் தெரிவித்தனர். நாட்டில் பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடாதவர்கள் புண்ணியவான்கள் என்று சொல்லப்படுவதில்லை. அப்படி இருக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிச்சை கேட்கிறார்கள் என்று ஆட்சி யாளர்கள் சொல்லும்போது, எச்சில்தையால் கூடக் காக்கையை ஓட்டத் தயங் கக் கூடிய இவர்கள் எங்கள் ஒத்துழைப்புக் கோரி விடுத்த வேண்டு கோளை உண்மையான மனப்பூர்வமான, வேண்டுகோள் என்று என்னால் கருத முடியவில்லை; தங்கள் திட்டங்களுக்கு எங்கள் ஒத்துழைப்பை உள்ளன்போடு இவர்கள் கேட்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும்கூட இந்த ஆட்சியாளர்கள் மேற்கொண் டுள்ள சீரிய முயற்சிகளுக்கு நாங்கள் எங்கள் ஒத்துழைப்பைத் தந்திருக் கிறோம். அதனை கனம் உள்நாட்டு அமைச்சர் நன்றாக அறிவார். மது விலக்குத் திட்டம் நிச்சயமாக வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத் திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இம்மன்றத்திலும் இம்மன்றத் திற்கு வெளியிலும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்திருக்கிறார்கள். எங்கள் மீது ஆளும் கட்சியினர் எதாவது குற்றம் சுமத்த விரும்பினால், நாங்கள் எங்கள் ஒத்துழைப்பை தருந்த முறையில் தரவில்லை என்று அவர்கள் சொல்ல முடியுமே தவிர கேட்ட நேரத்தில் ஒத்துழைப்பைத் தரவில்லை என்று அவர்கள் சொல்ல முடியாது. ஆளும் கட்சியினர் எங்களைப் பற்றி மிகவும் தாக்கிப் பேசுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் எண்ணிக்கை பலம்தான் என்று சொல்லவேண்டுமே தவிர, அது அவர்களுடைய வாதத் திறமையைக் காட்டுகிறது என்று கூடச்

[Sri C. N. Annadurai] [10th March 1959

சொல்ல முடியாது. நிதி நிலை அறிக்கையின் பேரில் நான் தெரிவிக்கும் கருத்துக்கள் புறக்கணிக்கப்படும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தாலும், அவைகளைப் பற்றி கேலிமொழி பேசி அவைகளை அடக்கி விடலாம் என்ற மனப்பான்மை கொண்டவராக கனம் நிதி அமைச்சர் இருக்கிறார் என்பதும் எனக்குத் திட்டவட்டமாகத் தெரிந்திருந்தாலும், இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள் நாட்டு மக்கள் மிடமும் போய்ச் சேரும் என்ற நம்பிக்கையில்தான் பேச முற்படுகிறேன். நான் இங்கே பேசுவது, என் வாதத்திற்கு கனம் நிதி அமைச்சரிடம் நியாயம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் அல்ல.

இந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் பேசியவர்களில் இதைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாகிய ஆளும் கட்சி அங்கத்தினர்கள் இதில் மூன்று முக்கியமான அம்சங்களைப் பாராட்டினார்கள். அவைகளில் ஒன்று, இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரி எதுவும் போடப்படவில்லை என்பது; மற்றொன்று, இந்த வருஷம் உபரி பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பது; மற்றுமொன்று, ஒவ்வொரு துறையிலும் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை முந்தைய வருஷங்களில் ஒதுக்கப்பட்டுள்ளதைவிட அதிகமாக இருக்கிறது, எனவே எல்லாத் துறைகளிலும் மேலும் மேலும் முன்னேற்றம் காணுவதற்கேற்ற வகையில் அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது. இந்த மூன்று விஷயங்களையும் 'இல்லை' என்று யாரும் மறுப்பதற்கில்லை. ஏனென்றால், ஒவ்வொரு ஆண்டும், கல்வித் துறையானாலும் சரி, ஹரிஜன நலத் துறையானாலும் சரி, சமூதாய நலத் திட்டத் துறையானாலும் சரி, ஒவ்வொரு துறையிலும், செலவிற்காக ஒதுக்கப்படும் தொகை ஏறிக்கொண்டே போகிறது; முந்தைய ஆண்டு செலவழித்ததை விட அதிகத் தொகையே ஒதுக்கப்படுகிறது. இதை, எதோ, உலகத்தில் வேறு எங்குமே நடக்காத அதிசயம் போலவும், வேறு எந்த மாநிலத்திலும் நடக்காதது போலவும், மற்ற மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களுக்கு முந்தைய வருடம் 50 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்க இந்த ஆண்டு 25 லட்ச ரூபாயாக அதைக் குறைத்திருக்கும்போது இந்த மாநிலத்தில் இவ்வாறு நடப்பது போலவும் கருதும் மனப்பான்மை யாருக்கும் இருக்கக்கூடாது என்று நான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

10–00 a.m. மேலும், சென்ற ஆண்டில் ஒரு காரியத்திற்காக பத்து ரூபாய் செலவழித்திருந்தால், இந்த ஆண்டு பண வீக்கம் காரணமாக அதே காரியத்தை, அதே தரத்தோடு, அதே அளவோடு நாம் செய்யவேண்டுமென்றால், இயற்கையாகவே பதினைந்து ரூபாய் செலவு செய்தாக வேண்டும். நான் இப்பொழுது உருக்கும் பண வீக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அதற்கான பரிகாரங்களை இந்த நேரத்தில் பேசவில்லை. நான் எடுத்துக் காட்ட விரும்புவதெல்லாம், சென்ற ஆண்டு ஒரு காரியத்திற்காக பத்து ரூபாய் போதுமானதாக இருந்தால், அதே காரியத்தை, அதே தரத்தில், அதே அளவில் இந்த ஆண்டு செய்ய வேண்டுமென்றால் இயற்கையாகவே அது பதினைந்து ரூபாயாகத்தான் கூடி இருக்க வேண்டும். அந்நிலை இன்றையதினம் ஏற்பட்டுள்ள பண வீக்கத்தால் ஏற்பட்டுள்ளது. ஆகவே திட்டங்களுக்காக செலவிடப்படும் தொகை ஆண்டுக்கு ஆண்டு ஏறிக்கொண்டு வருகிறதென்றால், அது தாராளத்தின் விளைவு என்று நான் நம்பவில்லை. பண வீக்கம் காரணமாகத்தான் அப்படி ஏற்றிக்கொண்டு போக வேண்டி வருகிறது என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படி ஒவ்வொரு துறையிலும், இன்றையதினம் அதிகப்படியான தொகைகளை ஒதுக்கி இருக்கிறார்கள் என்றால், அப்படி அதிகப்படுத்தியிருக்கும் நிலையில், அதை எப்படி ஈடுகட்டியிருக்கிறார்கள் என்பதிலிருந்துதான் ஒரு சர்க்காரின் நல்லெண்ணம், ஒரு சர்க்காரின் கொள்கை விளக்கம், ஒரு சர்க்கார் எந்த வழியில் செல்கிறது என்பதை நிர்ணயிக்க முடியும். அப்படிப் பார்க்கும்போது, நமது ஆட்சியாளர்கள், வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகப் பணம் தேவை, தேவை என்று சொல்லும்போது, வரிகளைக் கூட்டினுல்தான் அதற்கான பணத்தைப் பெற முடியும் என்பதனை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். அது பற்றி நான் இந்த மன்றத்

10th March 1959] [Sri C. N. Annadurai]

தில் பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வருவாயைத் தேடிக் கொள்ள ஆட்சியாளர்கள் வழிவகைகள் கண்டு பிடித்தால் ஒழிய, பிமலும் மேலும் வரிகளைமட்டும் போட்டுப் பணத்தைப் பெருக்கிக் கொள்வதைவிட வேறு விதங்களில் நமது வருவாயை அதிகரித்துக்கொள்ள திட்டங்கள் தீட்டி, வளர்ச்சித் திட்டங்களை ஏற்றெடுத்து நடத்த வேண்டுமென்று பல தடவை கள் சொன்னோம். இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால், நான் சொன்ன அத்தனை யோசனைகளும் நமது நிதி அமைச்சர் அவர்களுடைய கேலிக்காகப் பயன்படுத்தப்பட்டதே தவிர, இவைகள் எல்லாம் நடைபெறுது என்று சொல்லப்பட்டதே தவிர, இவைகள் நடைபெறுது நாங்கள் வேறு நல்ல திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று எடுத்துக்காட்ட பயன்பட்டதா என்றால் இல்லை. கேள்வி நேரத்தில் பதிலளிக்கப்பட்டபோது மோட்டார் பஸ்களை எவத்தில் விடலாமே, அதனால் லாபம் தேடலாமே அதனால் நமது வருவாயை அதிகரிக்கலாமே என்பதற்கு அளிக்கப்பட்ட பதிலை நான் கேட்டுக்கொண்டே இருந்தேன் இன்றைய தினம் மோட்டார் பஸ் முதலாளிகள், தமிழ் நாட்டில் ஒரு புதிய முதலாளி வர்க்கமாக மாறிக்கொண்டு வருகிறார்கள் என்பதனை அறியாதவர்கள் இல்லை. அவர்கள் எந்தக் கட்சிக்கு வேண்டியவர்கள் என்பவல்ல பிரச்னை. அதனால் அவர்களுக்கு லாபமா அல்லது அவர்கள் ஆதரிக்கக் கூடிய கட்சிக்கு லாபமா என்பதல்ல பிரச்னை. ஆனால் நாடறிந்த உண்மை இன்றைய தினம் கள்ளுக்கடைகள் மூடப்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும் பணத்தைக் குவித்து, லாபத்தை அதிகரித்துக்கொண்டு போகும் புதிய தொரு முதலாளி வர்க்கமாகத்தான் இன்று மோட்டார் பஸ் தொழில் அமைந்திருக்கிறது. இன்றைய தினம் பல ராஜ்யங்களிலுமுள்ள அமைச்சர்கள் இந்த மோட்டார் பஸ் தொழிலை தேசிய உடமையாக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. பக்கத்திலுள்ள ஆந்திர ராஜ்யத்திலும் இதில் பல சிக்கல்கள் எற்பட்டு இருப்பதை நான் அறியாமல் இல்லை. ஆக, அவர்கள் இன்றையதினம் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, இன்றைய தினம் கேள்வி நேரத்தின்போது பதிலளிக்கப்பட்டபோது அப்படிப்பட்ட தொரு உத்தேசம் நமது சர்க்காருக்கு உண்டு என்று சொல்வதற்குக் கூட மனமில்லாத அளவிற்கு இன்றையதினம் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கும் மோட்டார் பஸ் முதலாளிகளுக்கும் இடையே உள்ள உறவுதான் அதற்குக் காரணமா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மோட்டார் பஸ்களை சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவதின் மூலம் நமது வருவாயை நாம் அதிகரித்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்றையதினம் பஸ் தொழிலில் ஈடுபட்டிருக்கும் முதலாளிகளை நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால் அந்த முதலாளிகளுக்கு சுமார் 20 அல்லது 25 வருடங்களுக்கு முன்னால் என்ன சொத்து இருந்தது, அவர்கள் எவ்வளவு சொத்துக்கு உரியவர்களாக இருந்தார்கள், இன்றைய தினம் அவர்கள் எந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கை எடுத்துப் பார்த்தால் அந்தத் தொழிலில் எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்பதை நாம் கணக்கிட்டுக் கொள்ள முடியும். அவர்கள் வெளிக்கு கணக்கு எழுதும் முறைப்படி, காஸ்ட் ஆப் மெயின்டினென்ஸ், சர்க்காருக்கு வரி கொடுப்பது, புதிய பஸ்கள் வாங்குவது இவைகளுக்காக இவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்று சொல்லி கொஞ்சம்தான் மிச்சம் இருக்கிறது என்றுதான் அவர்கள் வாதாடுவார்கள். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் திருவல்லிக்கேணி தொகுதி அங்கத்தினர் ஹாஜி ஷெரிப் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் மிக அழகாக எடுத்துச் சொன்னார், தொழில்கள் நடத்தும் முதலாளிகள் லாபமே இல்லாமல், "மார்ஜின் ஆப் பிராபிட்"டில் லாபத்தின் ஒரு அருஞ்சிறுதான் இருக்கிறார்கள், லாபம் மிகச் சிறிதுதான் கிடைக்கிறது என்றும், முதலாளிகள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டும், தவித்துக்கொண்டும் இருக்கிறார்கள், ஆகவே, தொழில் இந்நாட்டில் வளர வேண்டுமென்றால், விலைவாசிகள் குறைய வேண்டுமென்றால், தொழிலாளிகள் கூலி உயர்வு கேட்கக் கூடாதென்றும், தொழிலாளர்கள் பிரச்னையே இருக்கக் கூடாதென்றும், அப்படியானால் தான் விலைவாசிகள் விழும் என்றும் அவர்கள் சொன்னார்கள். கூலித் திட்டத்தைக் கட்டுப்படுத்தினால்தான் விலைவாசி குறையும் என்றும் கூறி

[Sri C. N. Annadurai] [10th March 1959

ஞர்கள். அப்பொழுதுதான் தொழில் வளரும் என்றும் ஹாஜா ஷெரிப் அவர்கள் கூறினார்கள். முதலாளிமார்கள் தொழிலே நடத்துகிறவர்கள் இந்த வகையில்தான் வாதாடுவார்கள் என்பதை அறிந்துகொள்ள இந்த மன்றம் ஒரு சிறந்த வாய்ப்பினை அளிக்கிறது என்றுதான் எனக்குப் பட்டது. அந்த வாதங்களை மட்டும் நமது ஆட்சியாளர்கள் எடுத்துக்கொள்வார்களேயானால், நாம் தேடிக்கொள்ளக் கூடிய வருவாயை நாம் இழக்கிறோம் என்றுதான் பொருள்படும். போக்கு வரத்து அமைச்சர் ஸ்ரீ ராமையா அவர்கள் சொன்னார்கள், லாப நோக்கத்தோடு இந்தத் தொழிலே நடத்தவில்லை என்றும், மக்களுக்கு வசதி செய்து தருவதற்காகத்தான் இந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்றும் சொன்னார்கள். மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதோடு சர்க்காருக்கும் லாபம் கிடைக்க கூடுமானால் என் அந்தத் தொழிலை ஏற்றெடுத்து நடத்தக் கூடாதென்று நான் கேட்கிறேன்? தமிழ் நாடு பூராவும் உள்ள மோட்டார் பஸ் தொழிலை ஏற்றெடுத்து நடத்தினால் எத்தனை கோடி ரூபாய் சர்க்காருக்குக் கிடைக்கும் என்பது யாருக்குத் தெரியாத விந்தை? இன்றையதினம் ஒவ்வொரு ரூட்டும் அதிக விலைக்கு எடுக்கப்படவில்லையா என்று ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு, என்னிடம் தகவல் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். நிச்சயமாக அவர்களிடம் தகவல் இருந்திருக்க முடியாது. அப்படி தகவல் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வந்திருக்கும். ஆனால் நாட்டில் என்னென்ன நடக்கின்றன என்று அங்காடிகளில் பேசிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பேசிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு தொழில் துறையில் உள்ளவர்களும் அதைப்பற்றி பேசிக்கொள்ளுகிறார்கள். காஞ்சீபுரத்திற்கும் வேலூருக்கும் இடையில் இருக்கிற ஒரு மோட்டார் பஸ் ரூட், போன மாதமோ அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்னரோ ஒரு முதலாளி கையில் இருந்து இன்னொரு முதலாளி கைக்கு மாற வேண்டி வந்தது. அதற்கு ஒரு லட்சம் ரூபாய் கேட்டார்கள் என்று அங்காடியில் பேசப்பட்டது. அங்காடிப் பேச்சு சட்டமன்றத்தில் பேசுவதற்கு லாயக்குள்ளதா என்று கருதலாம். ஆனால் அங்காடிகளில் பேசப்படுவதை நாம் அடியோடு புறக்கணிப்பதற்கில்லை. அப்படிப் புறக்கணித்தால் ஆட்சியாளர்கள் பாதுகாப்பாக இருக்க முடியாது. இந்த மோட்டார் பஸ் தொழிலே சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துகிற நேரத்தில் அதை நன்கு திறம்பட நடத்த முடியும், மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து அவைகளை நடத்த முடியும், அதே நேரத்தில் நல்ல லாபமும் சம்பாதிக்க முடியும் என்பதை சென்னை நகரில் நாம் பஸ்களை ஏற்றெடுத்து நடத்துவதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். சர்க்கார் மோட்டார் பஸ்களை ஏற்றெடுத்து நடத்திறபோது வருவாய் குறைவாக இருந்தாலும், தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும்போது கிடைக்கக் கூடிய லாபத்தை விட குறைவாக இருந்தானும், அந்த லாபம் சர்க்காருக்குக் கிடைத்து இது மக்களுடைய உடமையாகிறது. ஆகவே, அப்படி நம் வருவாயை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி வந்திருக்கும் ஒரு யோசனையாகும். திட்டங்களை கொடுங்கள், திட்டங்களைக் கொடுங்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி கேட்பதின் நோக்கம் என்னவென்றால், அவர்கள் நாம் சொல்லக் கூடிய யோசனைகளைக் கேட்டுவிட்டு வெளியில் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு புரிந்து கொள்ள முடிகிறது. திட்டங்களைக் கொடுங்கள் என்று கேட்டபோது இந்த திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள், இது எப்படி முடியும், திட்டங்களை எடுத்துச் சொல்ல லாயக்கற்றவர்கள் சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று வெளியில் சொல்லி மிழ்ச்சி அடைய, திருப்தி அடைய அவைகளை ஒரு வாய்ப்பாகக் கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குத் திருப்தி ஏற்படுமானால், அதற்கு குறுக்கே நிற்க நான் தயாரில்லை. அப்படி ஆயிரக் கணக்கான திருப்திகளைப் பொது வாழ்க்கையில் 20 ஆண்டு காலமாக பல தடவைகள் நான் கொடுத்து இருக்கிறேன். ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் இந்நேரத்தில் அந்தத் திருப்தியை அடைந்து கொள்வதில் எனக்கு கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால் எப்பொழுது வெட்கம் ஏற்படும் என்றால் நிதி அமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை திறமையாகக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற நிலை ஏற்படும்போது, அண்ணாதுரை, நீ சொன்ன

10th March 1959] [Sri C. N. Annadurai]

திட்டம் அபத்தமானது, இதோ பார், ஒரு புதிய திட்டத்தை வைத்திருக் கிறேன், இதனுல் இவ்வளவு வருவாய் வரப்போகிறது, இதை இப்பொழுதே துவங்க இருக்கிறோம் என்று அவர்கள் எடுத்துக் காட்டுவார்களேயானுல் ஆஹா, ஆஹா இவ்வளவு அழகான ஒரு திட்டத்தை நிதி அமைச்சர், கொண்டு வந்திருக்கிறார்களே, நமக்கு திட்டம் திட்டம் தெரியாமல் போய் விட்டதே என்று ஒரு பக்கம் எனக்கு வெட்கம் ஏற்பட்டாலும் இப்படிப்பட்ட தொரு அழகான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்ற வியப் பும் எனக்கு ஏற்படும். அதோடு இப்படிப்பட்டவர் அல்லவா நமது நிதி அமைச்சராக இருக்க வேண்டும், எட்டு தடவை அல்லது எண்பது தடவை யானுலும் இவரல்லவா நிதி நீலே அறிக்கையை தயாரிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பேன். நிதி அமைச்சர் அவர்கள் எட்டு தடவை நிதி நீலே அறிக்கையை படித்திருக்கிறார்கள் என்று சில நபர்கள் சொன்னுர்கள். அதை அவர்களும் எடுத்துச் சொன்னர்கள். ஆனுல் எனக்கு இருக்கிற வருத்தம், எட்டு தடவையாக நிதி நீலே அறிக்கையை படிக்கு வருகிறார்களே அதனுல் உயிருடும் வகையில் ஒரு நல்ல அறிக்கையை படிப்பதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லையே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். எட்டு தடவை நிதி நீலே அறிக்கையைப் படிப்பதில் லாபமும் இருக்கிறது, வலிவும் இருக்கிறது. அதே நேரத்தில், அதில் பலஹீனமும் இருக்கிறது. வலிவு எதில் இருக்கிறது என்றால், அனுபவம் ஏறி இருக்கிற காரணத்தினுல் எதை மறைக்கலாம், எதைக் காட்டலாம், எந்தக் கணக்கை எந்தப் பக்கத்தில் தள்ளலாம் எதெதை எந்தெந்த வரிசையில் வைக்கலாம், எப்படி அதைப் படிக்கிறவர்களைத் திணறடிக்கலாம் என்பது அனுபவத்திலிருந்து பெறும் லாபம். சாதாரண ஒரு அனுவலகத்தில் வேலே பார்க்கும் ஒரு குமாஸ்தா கூட பத்து வருடத்தில் வேண்டிய அனுப வம் பெற்றுவிடுகிறார், எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று. ஒரு ஆண்டு நிதி நீலே அறிக்கைக்கும் மறு ஆண்டு நிதி நீலே அறிக்கைக்கும் ஒப்பிட்டு பார்ப்பதற்கு முடியாத நீலேமையில் ஒவ்வொரு ஆண்டு நிதி நீலே அறிக்கையின் கோணங்கள் (ஆங்கிலேஸ்) ஒவ்வொரு பக்கத்தில் திருப்பப்படுகின்றன. இப்படி திருப்பப்படுவதின் முக்கிய நோக்கம்—நான் கருதுகிறேன்—தொடர்ந்து மதிப்பீடு போடுவதற்கு வழி வகை செய்யா மால் இருக்க வேண்டுமென்பதற்காக, அந்த வித்தில் நிதி நீலே அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் வேறுபடுவதை வகை மாற்றப்படுகிறது என்று நான் அஞ்சுகிறேன். எந்த ஒரு நிலே இருந்தாலும் 8-வது தடவையாக அவர்கள் நிதி நீலே அறிக்கையை சமர்ப்பிக்கிற காரணத்தினுல் அனுபவத் தைப் பெற்றிருக்கிறார்கள். அது வலிவு என்று நான் சொன்னேன். மற்றொன்று பலஹீனம். பலஹீனம் எதிலே இருக்கிறது என்று சொன் னுல், 7 தடவை நிதி நீலே அறிக்கை கொடுத்த நமக்கு என்ன நடக்கப் போகிறது என்ற அலட்சிய சுபாவம் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும். ஏழு தடவை நிதி நீலே அறிக்கை கொடுத்து, யார் எதிர்த்தாலும் எதிர்ப்புக்களே கண்ட துண்டமாக்கி, சண்டமாருதப் பிரசாரம் செய்து, புள்ளி விவரங்களே அள்ளி வீசி, எதிர்ப்பவர்களின் வாய்களே அடக்கிவிட்ட நாம் ஆயிற்றே, இப்பொழுது மட்டும் என்ன என்ற எண்ணம், அலட்சிய சுபாவம் நிச்சயம் ஏற்படும். அதனுல்தான் 8 தடவைகள் ஒரு காரியத்திலே ஈடுபடுகின்ற அவர்களுக்கு வலிவும் இருக்கிறது, அதே நேரத்தில் பலஹீனமும் இருக் கிறது. அந்த இரண்டும் நிதி நீலே அறிக்கையிலே பல இடங்களிலே நன் ருகக் காட்சி அளிக்கின்றன. அவர்கள் சொல்லுகிறார்கள் தன்னுடைய நிதி நீலே அறிக்கையிலே :

" .....நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய பல்வேறு தொழில் வாய்ப் புக்களையும் ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியை டெல்லியில் இருக்கும் ஒரு ஸ்தாபனம்—தேசிய பொரு ளாதார ஆராய்ச்சிக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது. பல அன்னிய நாட்டு நிபுணர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏப்ரல் மாத இறுதியில் இந்த அறிக்கை நமக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம் " என்று தொழில் வளத்தைப் பற்றிய ஆராய்ச்சியை ஒரு இடத்திலே ஒப்படைத்து அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதைப் படிக்கின்ற

[Sri C. N. Annadurai] [10th March 1959

நேரத்தில், டெல்லியில் உள்ள ஸ்தாபனம் என்று படித்தேன். அதன் காணமாக என் டெல்லியில் ஒப்படைத்தீர்கள் என்று நான் கேட்கப்போகிறன் என்று நீங்கள் யாரும் கருதத் தேவையில்லே, நீங்கள் உங்களேயே டெல்லியில் ஒப்படைத்திருக்கும்பொழுது இந்தத் திட்டத்தை அங்கு இருக்கும் ஸ்தாபனத்தினிடம் ஒப்படைத்திருப்பது பற்றி நான் ஆச்சரியப்படுவதற்கில்லே. நான் சொல்லுவது உங்களுக்கு இப்பாழுது புதியதாக பொருளாதார ஆராய்ச்சி தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இந்த மாநிலத்தில் இருக்கிற தாதுப் பொருள்கள் உங்களுக்குத் தெரியாதா? இந்த மாநிலத்தில் எந்தத் தொழில் வளர்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பது நீங்கள் அறியாத விந்தையா? அது பற்றி தகவல்கள் இந்த சர்க்காரிடத்திலே இல்லேயா? அல்லது அது பற்றி தகவல்களேச் சேகரிப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வில்லேயா? இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி நம்முடைய சர்க்கார் தயாரித்திருக்கின்ற மகத்தான அறிக்கையில்—மகத்தான அறிக்கையென்று நான் சொல்லுகின்றபோது, தயாரிப்பிலேதான் மகத்தான அறிக்கை, ஏற்றுக்கொள்ளப்படுவதிலே அல்ல. ஏனென்றால், பல மத்திய சர்க்காரிலே தள்ளப்பட்டு விட்டன—தொழில் வளம் பற்றி கொடுத்திருக்கிற தகவல்களேவிட இனி எந்த ஆராய்ச்சியாளர்களும் புதியதாக தகவல்களேச் சேகரித்துத் தர முடியாது. ஆனால் என் இப்பொழுது எப்ரல் மாதம் வரையில் பொறுக்கச் சொல்கிறார்கள் என்றால், ஏவ்வொரு ஆண்டுக்கும் எதாவது நப்பாசை காட்ட வேண்டும், பொதுமக்களிடையே பேசுகின்ற நேரத்தில், இந்த ஆண்டுக்கு நாங்கள் இவ்வளவு திட்டங்கள் தீட்டியிருக்கிறோம், தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு ஒரு ஆய்வுக் குழு பணியாற்றிக்கொண்டு வருகிறது, என்று சொல்ல வேண்டும். இப்படி அடிக்கடி பொருளாதார ஆய்வு தேவை என்றிருந்தால், இந்த மாநிலத்தில் இருந்த 'எக்னமிக் அட்வைஸர்' என்ற ஸ்தாபனத்தை என் கலேக்க நேர்ந்தது? தொடர்ந்து ஆராய்ச்சி செய்து, நாட்டில் அதனுல் தொழில் வளத்தைப் பெருக்க முடியும் என்பது உண்மையானுல், 'எக்னமிக் அட்வைஸர், என்ற பதவியை காரணம் இல்லாமல் நீங்கள் நீக்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லேயே? ஆனுல், எனக்குப் படுகின்ற வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு என்னென்ன தேவை, நம்முடைய மாநிலத்தில் எதெதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தரப்பட்டிருக்கிற ஒன்றைக் கூட, அவர்கள் இதுவரையில் நிறைவேற்றவும் இல்லே, நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களே இன்னும் பெறவுமில்லே. இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்: 'At present there is no paper mills in the State. The annual consumption of paper of the Madras Government alone amounts to four to five thousand tons.' என்று போட்டு இதை நீலகிரியில் ஆரம்பிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காகத் திட்டப்பட்ட இந்த அறிக்கையில் உங்களுக்குத் தெரிந்திருக்கும்போது, இப்பொழுது புதியதாக இந்தத் துறையிலே நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புவது என்ன? என்ன புதை பொருள் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறீர்கள்? இன்னமும் பார்க்கப் போனுல், இந்த சர்க்காரிடத்திலே இருக்குமென்று நினேக்கிறேன். மத்திய சர்க்காரிடத்திலும் இருக்கவேண்டும். 'போஸ்டு-வார் ரிகன்ஸ்ட்ரக்ஷன் பிளான்' என்று வெள்ளேயர் ஆட்சியாளராக இருந்த காலத்திலேயே யுத்தத்திற்குப் பிறகு நாட்டில் என்னென்ன செய்யலாம் என்று அவர்கள் போட்டு வைத்திருக்கிற திட்ட அளவுக்குக் கூட—நாம் புதியதாக ஆராய்ச்சி ஒன்றும் இன்றையதினம் செய்ய வேண்டிய தேவை இல்லே—நாம் அதை நிறைவேற்றி இருந்தால், நம்முடைய வாழ்க்கைத்தரம் அந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியும். ஆனுல், அவைகளே எல்லாம் செய்யாமல், ஆண்டுக்கு ஒரு புதிய திட்டத்தை வைத்திருக்கிறோம் என்று கூறும் முறையில் இப்பொழுது இப்பணியை டெல்லியில் இருக்கும் ஒரு ஸ்தாபனம்—தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் குழு ஏற்றுக்கொண்டுள்ளது. பல அன்னிய நாட்டு நிபுணர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று சொல்லியிருக்கிறார்கள். பல அன்னிய நாடுகளில்.....

10th March 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM: டெல்லியில் அந்த ஸ்தாபனம் இருந்தால் கூட அவர்கள் நம்முடைய ஆட்கள்தான். இது மாதிரி இருப்பு தெல்லாம் டெல்லி என்று நீனைக்கிறார்கள். அங்கு இருக்கின்ற ஆட்களும் நம்முடைய ஆட்கள்தான்.

SRI C. N. ANNADURAI: நமது நிதி அமைச்சருக்கு டெல்லி பேரிலுள்ள பற்றையும், பாசத்தையும் நானே எடுத்துச் சொல்லிவிட்டேன். நான் சொல்லுவது டெல்லியைப் பற்றி அல்ல. அங்குள்ள அந்த ஸ்தாபனத்தின் மூலம் புதிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே நான் தெரிவித்தபடி, இந்தத் தொழில் நுட்பங்கள், தொழில் நுணுக்கங்கள், இவைகளை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால், திட்டங்களைப் பற்றி எடுகளில் இருக்கின்றனவே தவிர, மேலும் திட்டங்கள் எட்டிலே எழுதப்படுகின்றனவே தவிர, நாட்டு மக்களுக்கு எட்டிலே 'சர்க்கரை' என்று எழுதிக் காட்டுகின்றீர்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இன்னும் முதல் அமைச்சர் அவர்கள் பேசிய பாஷையில் பேசப் போனால் பகோடி பிச்சை கேட்க வந்த வனைப் பார்த்து, 'அடுத்த வீட்டைப் பார்' என்று சொல்லக் கூடிய புண்ய வான்களாக இருக்கிறீர்களே தவிர, ஒரு கவளம் கொடுப்பவர்களாக இல்லை. உங்களுக்கே இல்லையோ என்னவோ, அதுவும் எனக்குத் தெரியாது. (சிரிப்பு).

புதியதாக ஆராய்ச்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவது மக்களை தவறான நம்பிக்கை கொள்ளச் செய்வதற்குத்தான் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தவறான நம்பிக்கை என்ற தன்மையிலே இந்த நிதி நீலை அறிக்கையிலே ஒவ்வொரு பக்கத்திலும் புள்ளி விவரங்கள் பேசுகின்றன. இந்தத் தடவை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தொழில் எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லுவதற்கு குறிப்புக்களை தந்திருக்கிறார்கள். தந்திருக்கின்ற அந்தக் குறிப்புகளிலே என்னுடைய நண்பர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கலியாணசுந்தரம் அவர்கள் இதிலே முதலாளிகள் பெற்ற லாபம் என்னவென்று கேட்டார்கள். "அது பற்றி இப்பொழுது ஒன்றும் அவசியமில்லை. நான் சொல்லுவது, தொழில் வளர்கிறது. அதிக ஆட்கள் இப்போது வேலைக்குப் போகிறார்கள். நேற்று இருந்ததை விட இன்று அதிகம் பேர்கள் வேலை செய்கிறார்கள். நேற்று கிடைத்ததைவிட, இன்று அதிக ஊதியம் கிடைக்கிறது. ஆகவே, முன்னேற்றம் இருக்கிறதா, இல்லையா" என்று அந்த வாதத்தில் நிதி அமைச்சர் அவர்கள் இறங்கினார்கள். அந்த வாதத்தைத் தொடர்ந்து நான் ஊகித்துக் கொண்டேன். கனம் ஹாஜா ஷெரிப் அவர்கள் 'தொழில் வளர வேண்டுமானால், கூலியையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். தொழில் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால், கூலிப் பிரச்னை எழலாகாது, என்று சொன்னார்கள். இப்படி 'கான்விக்ட் லேபர்', அதாவது, சிறைச்சாலைக் கைதிகளை வேலை வாங்குவது போல் தொழிலாளர்களை பாதி பட்டினி போட்டு தொழிலை வளர்ப்பதினாலே யாருக்கு லாபம்? அப்படி வளர்க்கப்படுகின்ற தொழில் எந்த வகையிலே நாட்டுச் செல்வத்தை உயர்த்தும் என்று கருதுகிறார்கள்?

நமது நிதி அமைச்சர் அவர்கள் வாசகத்தை, டெல்லி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர் சொல்லிய வாசகத்தை நான் படித்துப் படித்து இன்புற்றேன். அவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள் தொழில் வளர்ந்தால் மட்டும் போதாது. தொழில் வளர்கின்ற அளவுக்கு தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். "I am recommending a profit-sharing scheme knowing the full consequences" என்ற வாசகத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி பாராளும் மன்றத்தில் உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். தொழிலில் லாபம் கிடைக்க கிடைக்க, தொழிலாளர்களுக்கு அதிலே பங்கு கிடைக்க வேண்டும், அப்பொழுதுதான் நிம்மதி ஏற்படும் என்று அவர்கள் எடுத்துச்

[Sri C. N. Annadurai] [10th March 1959

சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் தனி உறுப்பினராக இருந்த காலத்தில் அப்படி எடுத்து சொன்னார்கள் என்று கருதுகிறேன். இப்பொழுது எதாவது சொல்லிவிட்டால், செய்து நீர வேண்டிய கடமை அவர்களைக் கட்டுப் படுத்துகிறது. ஆகவே, மிக மிக ஜாக்கிரதையாக பழைய நினைவை மறந்து விட்டுப் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். என்னைப் பற்றிய பூர்வோத் திரத்தை குறித்து பேசக் கூடிய பண்பு நிறைந்த அவருடைய பூர்வோத் திரத்தைப் பற்றி அவர் மிகவும் நல்லவர் என்பதற்காக நான் பேசுகிறேன். அவர் கெட்டவர் என்பதற்காக அல்ல. அதற்காக அவருடைய பூர்வோத் திரத்தை ஆராய வேண்டிய அவசியம் இல்லை. ஆராய்ந்தால், கிடைக்காம லும் போகாது. (சிரிப்பு). நான் எடுத்துச் சொல்வதெல்லாம் டெல்லி பாராளுமன்றத்திலே அவர் கூறிய நல்ல வாசகங்களேத்தான். இன்றைய தினம் தொழில் வளர்ச்சிக்குத் திட்டங்கள் தேவை என்றால், இந்தத் தொழில் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று காட்டுவதோடு கூட, தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு பங்கு கிடைத்திருக்கிறது, தொழி லாளர்களுடைய வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டவேண்டும். தொழில் வளர்ந்திருக்கிறது என்று காட்டுகின்ற அந்த நேரத்தில், தொழிலாளர்களுக்குக் கிடைத்திருக் கக் கூடிய பங்கையும் அவர்கள் காட்ட வேண்டும். தொழில் நம்முடைய மாநிலத்தில் வளர்ந்திருப்பதை விட பிற மாநிலத்தில் வளர்ந்திருப்பதற்கு அவர்கள் என்ன காரணம் சொல்லுகிறார்கள். என்ன சொல்ல இருக்கிறார் கள் என்று நான் அறிய விரும்புகிறேன். அப்படிச் சொல்லுகின்ற நேரத் தில்—சட்ட மன்றத்தில் அல்ல—வெளியிலே—நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பம்பாயை நீக்கிவிடுங்கள், மேற்கு வங்காளத்தை நீக்கிவிடுங்கள் மற்ற மாநிலங்களையும் இந்த மாநிலத்தையும் ஒப்பிடுங்கள் என்று அவர் வெளியிலே பேயெதாகப் பத்திரிகையிலே படித்தேன். ஒருவர் பணக்காரர் என்று குறிப்பிடுகிறபொழுது, அவர் விரலிலே போட்டிருக்கிற வைர மோதி ரத்தையும், காதிலே அணிந்திருக்கிற வைரக் கடுக்கனையும் காட்டி, இதோ பாருங்கள் பணக்காரர் என்று சொன்னால், காதை மறந்து, விரலை மறந்து, ஆள் மட்டும் பாருங்கள் என்று சொல்லி, அவர்களுக்கும் எனக் கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று கேட்பது போல, நிதி அமைச் சர் அவர்கள் பம்பாயை மறந்து, மேற்கு வங்காளத்தை மறந்து, வேண்டு மானால் உத்திரப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் நாம் தான் வளர்ச்சி அடைந்திருக்கிறோமே தவிர, அவர்கள் அல்ல என்று வாதாடு கிறார்கள். ஆனால், நெசவுத் தொழிலை (டெக்ஸ்டைல்ஸ்) பொறுத்தவரை யிலே பம்பாய் மாநிலம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும், சென்னை மாநிலம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் தாரதம்மியப்படுத்திப் பார்த் தால், இந்த சர்க்கார் திருப்தி அடைகிறார்களா என்று கேட்கிறேன். இந்த நெசவுத் தொழில் (டெக்ஸ்டைல்) எந்த வகையிலே வளர்க்கப் பட்டது என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வெளி நாட்டு ஜவுளி, வெளி நாட்டு ஆடைகள் இந்த நாட்டில் இறக்குமதி ஆவதை சில வகையிலே தடை செய்திருக்கிறோம். சில நேரத்தில் அவைகளுக்கெல்லாம் அதிகமாக வரி போட்டு, உள்நாட்டு ஜவுளிக்குப் பாதுகாப்பு அளித்து, 'டாரிப் வால்' கட்டி, அதற்குப் பிறகு நெசவுத் தொழிலை நாம் வளர்த்தி திருக்கிறோம்.

இவ்விதமான பாதுகாப்புச் சுவர்கள் எழுப்புகின்ற நேரத்தில் அதன் மூல மாக முதலாளிகளுக்கு லாபத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்களா அல்லது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொடுக்கின்றார்களா என் பதைத்தான் இப்போது நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல, உள்நாட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற காரியத் தில் பம்பாயில் ஆலைகளுக்கு பாதுகாப்புக் கொடுத்து வருவதைப் போல் நமது மாநிலத்தில் கைத்தறித் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகின் றதா என்பதைப் பார்த்தால் இல்லை என்றுதான் நினைக்க வேண்டி இருக் கிறது. அதுதான் இல்லாவிட்டால் போகிறது, பம்பாய் ஆலைத் தொழில் முன்னேறி இருப்பது போன்று நாம் கைத்தறித் தொழிலிலாவது முன் னேறி இருக்கிறோமா என்று பார்த்தால்—நமது முதலமைச்சர் அவர் களுடைய பாஷையில் கூறுவதாக இருந்தால்—எதோ பிச்சை போடுகிற

10th March 1959] [Sri C. N. Annadurai]

இடத்தில் கொடுப்பதை வாங்கிக் கொடுக்கின்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. பிச்சை எடுத்து நமக்குத் தரக் கூடிய பழக்கம்தான் இருந்து கொண்டிருக்கிறது, மில்லினிடத்திலிருந்து வாங்கி கைத்தறிக்குக் கொடுப்பது என்கின்ற முறைதான் இருந்துவருகின்றதை நாம் பார்க்கிறோம். சமீபத்தில் நமது தொழிலமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பார்த்தேன்—கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் மார்க்கட் கண்டுபிடித்து கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு, அந்தப் பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்தது அல்ல, அந்தப் பொறுப்பை நாட்டு மக்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற அளவில் கூறியிருப்பதாக அறிந்தேன். எல்லாக் காரியங்களிலும், நூல் வேண்டும் என்று கேட்டால்—ஆலையிலிருந்து இடைதான்—நூல் தருகிறோம், கூலி உயர்வு வேண்டும் என்று கேட்டால் முதலாளிகள் தந்தால் வாங்கிக்கொள்ளுங்கள், அதிலும் திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் சொல்வதைப் போன்று தொழில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் இன்னும் பத்து வருடங்களுக்குக் கூலி உயர்வு கேட்கக் கூடாது, வெளிநாடுகளில் கைத்தறித் துணிக்கு மார்க்கட் தேடித் தாருங்கள் என்று கேட்டால் அதற்கு நீங்களே வழி வகை செய்துகொள்ளுங்கள் என்றெல்லாம் பதில்கள் தரப்படுகின்றன. அந்த முறையில் பம்பாயில் தொழில்கள் வளருவது போன்று இந்த நாட்டில் தொழில்கள் வளருகின்றதா என்பதைப் பார்த்து செலவுகள் எல்லாம் எங்கே குவிகின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள் எடுத்துச் சொல்லுகின்றோம். அவ்விதம் இவைகளை எல்லாம் எடுத்துப் பார்க்கும்போது தான் வடக்கே செல்வம் குவிகின்றது என்பதைப் பார்த்துத்தான்—வடக்கு வாழ்கின்றது, தெற்கு தேய்கின்றது—என்று நாங்கள் சொல்லுகிற நேரத்தில் எல்லாம் எதைக் கேட்டு ஆத்திரப்பட்ட அன்பர்கள்—ஆத்திரப்பட்ட காங்கிரஸ் அங்கத்தினர்கள்—இந்த ஆலை நெசவு தொழிலைப் பொறுத்த மட்டில் எங்கே இந்தத் தொழில் வாழ்கின்றது? எங்கே இந்தத்தொழில் மேம்பாடு அடைகின்றது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்பார்களானால், இங்கே தொழில் வளர்ச்சி என்பது கண் துடைப்பு என்கின்ற அளவிலதான் வளர்ந்திருக்கிறதே தவிர, உண்மையான அளவில் முன்னேற்றம் அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்வார்கள். அதே நேரத்தில் தொழில் வாய்ப்புகள் அதிகமாகக் கண்டறிவதற்காக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் நேரத்தில் நமக்கு இருந்துகொண்டிருக்கின்ற குழப்பத்தை நான் நீக்க விரும்புகிறேன். பல தடவை நான் இந்த சட்ட மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்களைத் திறமை சாலி திறமைசாலி என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதே நேரத்தில் எனது கழகத்தைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் இங்கு பேசுகின்ற நேரத்தில்—தங்களுடைய எண்ணத்தை தெரிவிக்கின்ற நேரத்தில்—நிதி அமைச்சர் அவர்களுக்கு திறமையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது நமது நிதி அமைச்சர் அவர்கள் எனது கழக அங்கத்தினர்களைப் பார்த்து, "உங்கள் தலைவர் என்னைத் திறமைசாலி என்று சொல்லுகின்றார், ஆனால் நீங்கள் எனக்குத் திறமையில்லை என்று சொல்லுகிறீர்கள், நீங்கள் உங்கள் தலைவர் கருத்துப்படி நடப்பவர்கள் இல்லையோ" என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது நான் சொல்லுகிறேன், நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் திறமையும் இருக்கிறது, திறமையும் இல்லை, அவர்களுக்கு எதில் திறமை இருக்கிறது என்றால்—நமது முதல் அமைச்சர் அவர்களுடைய பாஷையில் சொன்னால், கொடுக்கக் கூடிய பிச்சை டெல்லிக்குச் சென்று கொடுக்கின்ற காசு போதாது, கூடுதல் வேண்டும் என்று கேட்பதில் அவர்களுக்குத் திறமை இருக்கிறது, ஆனால், எதில் திறமையில்லை என்றால், நம்முடைய வாதத்தை எடுத்துக் கூறி—நம்முடைய உரிமையை எடுத்துக் கூறி—நம் தொழில் வளர்ச்சி முன்னேற்றம் அடையாமல் இருப்பதை அவர்கள் உணரும்படியாக எடுத்துக் கூறி—அவர்களிடமிருந்து உதவி பெறுவதிலும், அவர்கள் அதற்கு மறுத்தால், அவ்விதம் மறுக்கின்ற பெல்லி அரசாங்கம் உணருகின்ற வகையில் இங்கிருக்கின்ற அரசியல் சக்திகளை எல்லாம் ஒன்று சேர்த்து இழுத்து வைத்துக்கொண்டு—இந்த மாநிலத்திற்கு தொழில் வளர்ச்சிக்கு உடனடியாக வழி வகை செய்யாவிட்டால் இந்த மாநிலம் பிரிந்து போகும் என்று அவர்களுக்குச் சொல்லுவதில்—நமது அமைச்சர் அவர்களுக்குத் திறமையில்லை—இந்தத்

[Sri C. N. Annadurai] [10th March 1959

திறமை கேரள நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு—பாரதம் எல்லாம் ஒன்று, பாரத நாட்டு மக்கள் எல்லாம் ஒன்று என்று சொல்லுகின்ற கேரள முதலமைச்சர் அவர்களுக்கு இருப்பதை நாம் பார்க்கின்றோம். தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களில் கேரளம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொல்வதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார் கேரள முதலமைச்சர். கொச்சித் துறைமுகத்தை மத்திய சர்க்கார் எந்த விதத்தில் பெரிய தொழில் வளர்ச்சிக்காக பயன்படுத்துகிறார்கள் என் பதைப்பார்த்துத்தான், கோளத்தின் மீது, மத்திய சர்க்காருக்கு இருக்கின்ற நல்லெண்ணத்தை முடிவு செய்ய முடியும் "**The cochin Harbour is a touch stone**" என்று சொல்லியிருக்கின்றார். அதைப்போலவே ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் தங்களுடைய மாநிலத் திற்கு தொழில் வளர்ச்சிக்கு போதிய அளவு மத்திய அரசாங்கம் ஆதரவு தரவில்லை என்று சொல்லுகின்ற நேரத்தில் நாங்கள் இன்புக்கனவு காண் கின்ற இன்பத்தீராவிடத்தின் பகுதிகளாக இருக்கின்ற கேரளம், கன்னடம், ஆந்திரம் இந்த மாநிலங்கள் எல்லாம் தங்களுக்கு மத்திய அரசாங்கத் தால் போதிய ஆதரவு தரப்படவில்லை என்று சொல்லுகின்ற நேரத்தில் நம் நாட்டுக்கு மட்டும் போதிய ஆதரவை தந்திருக்கிறார்கள் என்று நாம் சொல்லிக்கொண்டு வருவதை நான் பார்க்கின்றேன். இந்த அறிக்கையைப் படித்த உடனேயே எனக்கு எற்பட்ட திகைப்பு, எற்பட்ட வருத்தம், இது வரையிலும் பேசாமல் இருந்த மற்ற மாநிலத்திலுள்ள முதலமைச்சர்கள் எல்லாம் டெல்லியைப்பார்த்து பேச ஆரம்பித்து அவர்களைப் பார்த்து தங்கள் நாட்டுக்கு போதுமான அளவு ஆதரவு என் தரவில்லை என்று தட்டிக்கேட்கின்ற இந்த நேரத்தில் எங்கள் நாட்டில் தொழில்கள் எல்லாம் திருப்தியாக நடந்தேறியிருக்கிறது என்று கூறுவது மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் தங்கள் மாநிலத்திற்கு போதுமான ஆதரவு தரப்பட வேண்டும் என்று கேட்கின்ற ஒருமித்த குரலுக்கு நீங்கள் (இந்த அரசாங்கம்) துரோகம் செய்வதாகும் என்று நான் நம்புகிறேன். கேரள முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய மாநிலத்திற்கு திட்டத்தில் சரியான பங்கு தரவேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் (ஆண்டு ஒன்றுக்கு 50 கோடி ரூபாய்க்கு அந்நிய செலாவணிக்கு வழி செய்கின்ற) மாநிலத் திற்கு தொழில் வளர்ச்சிக்கு போதிய ஆதரவு, தரப்பட வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில், நாமும் நம்முடைய தேவையை கேட்கவேண்டியது நம்முடைய கடமையாகும். அந்த முறையில் நாமும் கேட்கின்ற நேரத் தில்—அந்த கோரிக்கைகளை எல்லாம் பள்ளிக்கூடத்தில் சட்டாம்பிள்ளை வகுப்பிலுள்ள மாணவர்களை எந்த விதமாக அடக்கி ஒழுங்காக வைத் திருப்பாரோ—அதே போன்று இங்குள்ளவர்களை இந்த அரசாங்கம் அடக்கி வைத்திருக்கின்றது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பிற மாகா ணங்களில் கூட அமைச்சர்களிடத்தில் ஒற்றுமை கிடையாது. இரண்டு பேர் கள் சேர்ந்து படுத்தால் ஒருவர் தான் எழுந்து வருவார், மற்றொருவர் மறைந்து விடுவார் என்ற அளவுக்கு பிற இடங்களில் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் இங்கு நீங்கள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கின்றீர்கள்.—இவ்விதம் உங்களுக்குள் இருக்கும் ஒற்றுமை—அதோடு உங்கள் மீது எங்களுக்கு இருக்கும் ஆசை—இந்த இரண்டையும் பயன் படுத்தி மத்திய சர்க்காரிடத்தில் உங்கள் உரிமையைப்பற்றி கேட்பதற்கு ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா என்று பார்த்தால் அவ்விதம் ஒன்றும் இருப்பதாக என்னுல் இதில் காண முடியவில்லை. அதே நேரத்தில் நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் 8-வது பக்கத்தைப் பாருங்கள், அதில் நம்முடைய தொழில் முன்னேற்றம் தெரிகிறது, 12-வது பக்கத் தைப்பாருங்கள் அதிலுள்ள குறிப்பு நமக்கு திருப்தியை கொடுக்கின்றது, 16-வது பக்கத்தைப்பாருங்கள், அதிலுள்ள குறிப்பு நமக்கு மகிழ்ச்சியை கொடுக்கின்றது என்று எல்லாம் குறிப்பிடுகிறார்கள். இவையெல்லாம் தான் இந்த மாநிலம் வளர்ச்சி அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருக் கின்றன என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அதிலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நீங்கள் கேட்ட தொகைக்கும், டெல்லி அரசாங்கம் கொடுத்த தொகைக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை யாரும் மறுப்பதற் கில்லை. கேட்கின்ற தொகை நமக்கு கிடைக்காத காரணத்தால்தான் நமக்கு முன்னேறுவதற்குள்ள வழிவகையை கண்டு பிடிக்க முடியவில்லை

என்பதை பார்த்தோம். இவ்விதம் கேட்ட தொகைக்கும் அவர்கள் கொடுத்திருக்கும் தொகைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைப் பார்த்தே—நான் இதைப் பார்த்திருக்க மாட்டேன், நிதி அமைச்சர் அவர்கள் இதைப் படியுங்கள், இந்த புதிய புத்தகத்தைப் படியுங்கள் என்றெல்லாம் சொன்னார்கள், அடிக்கடி சொல்லியும் வருகிறார்கள், ஆசிரியர்கள் மாணவர்களைப் பார்த்து இந்த புத்தகத்தைப் படியுங்கள், அந்த புத்தகத்தைப் படியுங்கள் என்று சொல்வது போல சொன்னார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் கல்லூரி பேராசிரியராக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்த வேலை போனாலும் வேறு ஒரு வேலைக்கு வழி காண்பித்து தந்ததற்காக மிகவும் நன்றி.

Sri C. N. ANNADURAI: நிதி அமைச்சர் அவர்களுக்கு பேராசிரியர் வேலைத் தேவையில்லை, அவர்கள் சிறந்த வழக்கறிஞர், கொலை செய்தவரை தப்புவிக்க வைப்பார், கொலை செய்யாதவரை குற்றவாளியாக்குவார், அவ்வளவு சிறந்த வழக்கறிஞர். அது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. நான் இங்கு குறிப்பிட விரும்புவது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நமக்கு தரப்பட்டிருக்கின்ற அளவு போதாது என்பதை தான். இவ்வளவு குறைவாக நமக்கு கிடைத்திருந்தும் இந்த அறிக்கையை நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற நினைப்பில் திட்டங்கள் எல்லாம் போதிய அளவு திருப்திகரமாக நிறைவேறியிருக்கிறது என்ற தொனி பெறும்படியான அளவில் இந்த அறிக்கையில் பல விபரங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றிய விவரங்களை குறிப்பிட்டிருக்கிற இந்த புத்தகத்தில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நமக்கு எந்த அளவுக்கு பங்கு கிடைத்திருக்கிறது என்பதை நாம் பார்த்தால்—அகிகல்ச்சரல் அண்ட் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் என்கிற இனத்தில் மொத்தம் ஒதுக்கியிருப்பது 568 கோடி ரூபாய், அதில் நமக்கு கிடைத்திருப்பது 29 கோடி ரூபாய், இது 5 சதமானம்—அதே போன்று இரிகேஷன் அண்ட் பவர் என்கிற இனத்தில் மொத்தம் ஒதுக்கியிருப்பது 913 கோடி ரூபாய், அதில் நமக்கு கிடைத்திருப்பது 65 கோடி ரூபாய், இது 7 சதமானம் ஆகிறது—அதே போன்று தான் இண்டஸ்ட்ரீஸ் இனத்தில் மொத்தம் ஒதுக்கியிருப்பது 890 கோடி ரூபாய். அதில் நமக்குக் கிடைத்திருப்பது—இதில் நமக்கு நிறமையிக்க அமைச்சர் அவர்கள் இருந்தும் கூட—நமக்கு கிடைத்திருப்பது 10 கோடி ரூபாய், இது சுமார் ஒரு சதமானம் ஆகிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்தத் தொகையை இரண்டு பாகங்களாக பிரித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று, ராஜ்யங்களுக்கு எல்லாம் சேர்ந்து எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்க்கவேண்டும், அதே போன்று ஸெண்டலிலிருந்து நேரடியாக செலவு செய்வது எவ்வளவு என்பதையும் பார்க்க வேண்டும். இரண்டும் சேர்த்துத் தான் இதில் 890 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே ராஜ்யங்களுக்கு ஒதுக்கியிருப்பதில் நமக்கு கிடைத்திருப்பது ராஜ்யவாரியாக எத்தனை சதமானம் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அதல்லாமல் வேறு விதமாக தப்புக்கணக்கு போடுவதில் பிரயோசனமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri C. N. ANNADURAI: தப்புக்கணக்கு அல்ல, மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு எந்த அளவுக்கு உதவி செய்து வருகிறது என்பதைப் பற்றி நாம் பல தடவை இந்த மன்றத்தில் பேசியிருக்கிறோம். நெய்வேலி திட்டத்தையும் பெரம்பூர் கோச் பாக்டரி திட்டத்தையும் மத்திய சர்க்கார் நடத்துவதினால் நமது மாநிலத்திலுள்ள சில ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கிறதே தவிர அதிலேயிருந்து வரும் லாபத்தை நாம் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கில்லை. பாதகைகளுக்கு 263 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதிலே நமக்குக் கிடைத்திருப்பது 7 கோடி ரூபாய்; கல்விக்கு 307 கோடி ரூபாய் போட்டிருப்பதிலே நமக்குக் கிடைத்திருப்பது 11 கோடி ரூபாய்; சுகாதாரத்திற்கு 274 கோடி ரூபாய், அதிலே நமக்குக் கிடைத் 10–30 a.m.

[Sri C. N. Annadurai] [10th March 1959

திருப்பது 14 கோடி ரூபாய்; வீட்டு வசதிக்கு 120 கோடி ரூபாய் செலவிட்டு திட்டமிட்டிருப்பதிலே நமக்குத் தரப்படுவது 3 கோடி ரூபாய்; பிற பட்ட சமூகத்தினருடைய நலனுக்காக 91 கோடி ரூபாய் ஒதுக்கியதிலே நமக்குக் கிடைத்திருப்பது 5 கோடி ரூபாய். இப்படித்தான் ஒவ்வொரு துறையிலே பார்த்தால், நமது நாட்டுக்கு—ஜனத்தொகை அளவில் கணக்குப் பார்த்தாலும்— நிலப் பரப்பு அளவில் கணக்குப் பார்த்தாலும்—ஒரு நாகரீக சர்க்கார்—ஜனத்தொகை அளவு, நிலப்பரப்பு அளவு என்பது மட்டுமல்லாமல்—எந்த மாநிலங்கள் எந்த அளவு பின் தங்கி இருக்கின்றன என்று பார்த்துத்தான் தொகை ஒதுக்கியிருக்க வேண்டும். வடக்கே பெரிய பெரிய அணைக்கட்டுகள், பெரிய பெரிய மின்சாரத் திட்டங்கள், பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் எற்பட்டு, உலகத்திலே இருக்கின்ற தலைவர்கள் வரும்போதெல்லாம் பார்த்து மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படத் தக்க அளவுக்கு கட்டப்பட்டிருக்கின்ற பக்ரா—நங்கல் திட்டங்க ளெல்லாம் இருக்கின்ற பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை விட, பிற்பட்ட பகுதிகளுக்கு—தொழில் வளத்தைப் பெருக்க—மற்ற வளத்தைப் பெருக்க —அதிகப் பணத்தைக் கேட்டுக் பெற்றிருக்க வேண்டிய நிலைமை நிதி அமைச்சருக்கு இருந்தது—அதிலே அவருக்குத் திறமை இல்லே. எதிலே திறமை இருக்கிறது என்று சொன்னால்—சில மாநிலங்களிலே 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டும், அதிலே 8 கோடி ரூபாயைத் தான் செலவழித் திருக்கிறார்கள்—அதைப்போலல்லாமல், ஒட்டப் பால் தரப்பதைப் போல்— ஒரு சொட்டுக் கூட விடாமல்—வாங்கி வருகிறார் என்று, அந்த வகையிலே அவருடைய திறமையைப் பாராட்டுகிறேன். இன்னொன்று நான் சொல் வேன்—எதிர்க் கட்சியிலிருந்தாலும், பிற மாநிலங்களில் செலவழிக்கப் படுகின்ற பணம் எந்த அளவு பலன் தருகிறதோ அதை விட அதிகப் பலன் பெருகிற தன்மையில் இங்கே இருக்கிற ஆட்சியாளர்கள் பணத்தை பூரணமான பலன் வரத்தக்க அளவு செலவழித்து ஆட்சி நடத்திக் கொண்டு போகிறார்கள். எதையும் நான் ஒளிக்க விரும்பவில்லே—எதை யும் மிகைப்படுத்திப் பேசவும் விரும்பவில்லே. அதிகமாகக் கேட்டுப் பெற்று அதிக அளவு வளத்தைப் பெருக்க அவர்களுக்குத் திறமை இல்லாமல் போய் விட்டது. திறமை யில்லாததற்குக் காரணம் மனம் முதலிலே இல்லே. மனம் அவர்களுக்கு இல்லாததற்குக் காரணம் நான் சொல்வது, நாங்கள் சொல்வது என்ற காரணத்தினுல் அதையெல்லாம் எடுக்கக் கூடாது என்று கருதித்தான்—முன்னுலே இங்கே புதிதாக ஏதாவது தொழில் ஆரம்பிக்கலாமே என்று கேட்டதற்கு ஆட்டிஸைச்சித் தொழில் ஆரம்பிக்கலாம் என்று நான் சொன்னேன். அதற்கு நிதி அமைச்சர் அவர்கள்—எங்கள் ஊரில் வந்து பேசினர் என்று எங்கள் நண்பர்கள் கேட்டு வந்து சொன்னார்கள் அது வேடிக்கையாக இருந்தது என்று சந்தோஷப் பட்டார்கள்—அண்ணுதுரை கசாப்புக் கடை வைக்கச் சொல்லுகிறரே, இது நியாயமா என்று கேட்டார். நான் கசாப்புக் கடை வைக்கச் சொல்ல வில்லே. ஆடு வெட்டுகின்ற அளவுக்கு வலிவு நிதி அமைச்சருக்குக் கிடையாது. முதல் அமைச்சருக்கு வேண்டுமானுல் சொல்வேன்—அவர் வெட்டலாம். உங்களே அந்தத் தொழிலில் ஈடுபடச் சொல்ல முடியாது. நான் சொல்வது—ஒரு கடை வைத்தால் அது கசாப்புத் தொழில்—ஆயிரம் கடைகளே வைத்து சர்க்கார் நடத்தினுல் அதற்குப் பெயர் மீட் இண்டஸ்ட்ரி. ஒரு தொழில் பெரிதா, அல்லது ஒரு தொழில் சிறிதா என்பதைப் பொறுத்து அந்தத் தொழிலின் தரம் உயராது—என்று. ஏத்தனையோ எடுகளே எடுத்துக் காட்டி எங்களேப் படிக்கச் சொல்லியிருக்கிறார்கள் நிதி அமைச்சர் அவர் கள். நான் சொல்லுகிற ஒரு எட்டிலே—"நான் நிதி அமைச்சர், கல்விக் கும் அமைச்சர் நீதிக்கும் அமைச்சர், ஆகையால் படிக்கக் காலம் எது" என்று அவர்கள் சொல்லலாம்—அமெரிக்க நாட்டிலேயுள்ள எழுத்தாளர் ஒருவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தைப் பார்த்தால்—மீட் இண்டஸ்ட்ரி எந்த அளவுக்கு இருக்கிறது என்று அவர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். நான் இறைச்சித் தொழில் செய்யலாம் என்று சொன்னதை கசாப்புக் கடை என்று கேலிக்குரிய முறையில் அவர்களுடைய கட்சிக்காரர்களின் மாலே நேரப் பொழுது போக்கு அளவிலே சொன்னர்களே தவிர, எந்த வகையிலே லாபகரமில்லே என்று அவர் பதிலளிக்கவில்லே. கசாப்புத் தொழில் தேவையில்லே என்று அவர் கருதுவார்களானுல் நான் அதைப்

10th March 1959] [Sri C. N. Annadurai]

பற்றி இருக்கிற புள்ளி விவரங்களை இன்றைய தினம் சொல்லுகிறேன். கசாப்புத் தொழில் நடத்துவதன் மூலமாக இன்றைய தினம் டென்மார்க் நாட்டிலே ஆண்டொன்றுக்கு அவர்களுடைய தேவைக்குப் போக 300 கோடி ரூபாய் அளவுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் வருமானம் கிடைக்கிறது. அதே போல ஆஸ்டிரேலியா கண்டத்திலே இதைவிட அதிகமாகக் கிடைக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வெளியிலே கேலியாகப் பேசுவதைப் போல் என்ன பலன் இருக்கிறது என்று இங்கே சுருதியை மாற்றி ஒரு கடவை சொன்னார்கள். "இது ஒரு கேவலமான தொழில் அல்ல, ஆனால் மேய்ச்சல் நிலம் எங்கே இருக்கிறது" என்று கேட்டார்கள். மேய்ச்சல் நிலம் எங்கே இருக்கிறது என்று கேட்டதற்கு நான் இரண்டு பதில்கள் சொல்வேன். ஒன்று, இப்போதே கூட நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆடு மாடுகளின் அளவு இங்கே இருக்கக்கூடிய மேய்ச்சல் நிலத்தைப் பொறுத்து இல்லை—ஏராளமான ஆடு, மாடுகள் இருக்கின்றன. மற்றொன்று நீங்கள் மேய்ச்சல் நிலத்தை அதிகமான அளவு வைத்துக் கொண்டிருந்தால்தான் ஆடு, மாடுகளை வளர்க்க முடியும் என்று எண்ணுவது பொருளாதாரத் தியைமிலே இருக்கும் வைதிகக் கருத்தாகும். டென்மார்க் நாட்டின் அளவை சென்னை மாநிலத்தின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எது பெரிது, எது சிறிது என்று யாரும் விளக்கத் தேவையில்லை. டென்மார்க் நாட்டிலே இருக்கின்ற மேய்ச்சல் நிலம் எவ்வளவு, டென்மார்க் நாட்டிலே இருக்கின்ற மேய்ச்சல் நிலம் எவ்வளவு, அதே நேரத்தில் சென்னை மாநிலத்தில் இருக்கின்ற மேய்ச்சல் நிலம் எவ்வளவு, சென்னை மாநிலத்தில் இருக்கின்ற மேய்ச்சல் நிலம் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால், டென்மார்க் நாட்டில் உள்ளதை விட நம்முடைய சென்னை மாநிலத்தில் நிலைமை நன்றாகத்தான் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

ஆஸ்டிரேலியா நாட்டிலே 425 கோடி ரூபாயும், டென்மார்க் நாட்டிலே 300 கோடி ரூபாயும், நியூஸிலேந்து நாட்டிலே 200 கோடி ரூபாயும், ஆர்ஜென்டைனாவிலே 150 கோடி ரூபாயும், நெதர்லாந்து நாட்டிலே 135 கோடி ரூபாயும் ஆண்டொன்றும் ஒன்றுத் தொழிலிலே கிடைக்கிறது. டென்மார்க் நாட்டின் நிலப் பரப்பு 16,577 சதுர மைல்கள். சென்னை மாநிலத்தின் நிலப் பரப்பு 50,174 சதுர மைல்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ சென்னை மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்கு தான் டென்மார்க் நாட்டின் அளவு இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜனத்தொகை . . . .

SRI C. N. ANNADURAI : ஜனத்தொகையைப் பொறுத்த வரையில் நான் அந்தக் கணக்கை எடுக்கவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுதான் தப்பு.

SRI C. N. ANNADURAI : நிதி அமைச்சருடைய வாதம் எனக்குத் தெரியும். எது இல்லையோ அது தப்பு என்று சொல்லுவார். (சிரிப்பு) அது கூட ஆசிரியர்களுடைய பழக்கம் தான்—ஆசிரியர்களுடைய பண்பு தான். ஒரு பையன் எல்லாவற்றையும் சரியாகச் செய்திருப்பான்—எல்லாவற்றையும் செய்திருந்தாலும் கூட, காப்பி நோட்டு எங்கே என்று கேட்பார். அதற்கு அந்தப் பையன் இல்லே என்றால், பெஞ்சியின் மேல் ஏறு என்று சொல்வார். இதைப் போலத் தான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.

THE HON. SRI K. KAMARAJ : அன்பழகன் அவர்கள் என் அந்தத் தொழிலே விட்டு விட்டு வந்து விட்டார் ?

SRI C. N. ANNADURAI : நமது முதலமைச்சர் அவர்கள் கனம் அன்பழகனைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அந்தத் தொழில் வேண்டாமென்றுதான் இங்கே வந்து விட்டார்கள். டென்மார்க் நாட்டிலே இருக்கிற

[Sri C. N. Annadurai] [10th March 1959

மேய்ச்சல் நிலத்தைப்பற்றி நான் கணக்குச் சொல்வதிலே இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன்.

"In Denmark, there is no room for extensive pastures and the pastures are not of the best. Nor is the winter mild enough for cattle to graze out of doors all through the year, as they do in England."

கடுமையான குளிர் இருக்கிற காரணத்தினால் ஆடு, மாடுகள் வெளியே போய் மேய முடியாது.

"They must live under cover and be fed by hand. Cows spend most of their time in the stable, going out for air and exercise rather than for food."

மேய்ச்சலுக்கு அவைகளை வெளியே அனுப்ப முடியவில்லை. ஒரே இடத்தில் அந்த ஆடு, மாடுகளை வைத்திருப்பதால் அவைகளை காலாறுவதற்காகவும், காற்று வாங்குவதற்காகவும் மட்டும் வெளியிலே அழைத்துவருகிறார்கள். அந்த முறையில் டென்மார்க் நாட்டிலே 300 கோடி ரூபாய் சம்பாதிக்கிறார்கள். டென்மார்க் நாட்டு அமைச்சர்களை விட நமது அமைச்சர்கள் திறமைசாலிகள் என்று எண்ணுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை.

SRI C. N. ANNADURAI : இல்லையா ? இல்லை என்று சொன்னால் நான் வருந்துகிறேன். டென்மார்க் நாட்டிலே 300 கோடி ரூபாய் சம்பாதிக்கிற இந்தத் தொழிலை இங்கே நடத்தினால் என் லாபம் வராது என்று கேட்கிறேன். நம்முடைய சர்க்கார் தந்திருக்கிற கணக்குப்படி பார்த்தாலும், இப்போதே கூட இந்தியா பூராவும் எடுத்துக் கொண்டால் நம் மாநிலத்திலே தான் அதிக அளவு கறி சாப்பிடுகிறார்கள் என்று இருக்கிறது.

"The average annual per capita consumption is 5·6 pounds the highest compared to other States in India."

இங்கேதான் அதிகம் கறி சாப்பிடுகின்றவர்கள் இருக்கிறார்கள். சராசரி ஆண்டொன்றுக்கு ஒருவர் சாப்பிடுகிற அளவு 5.6 பவுண்டுகள். ஆர்ஜெண்டைனாவில் 266 பவுண்டு சாப்பிடுகிறார்கள், உருகுவே நாட்டில் 282 பவுண்டு சாப்பிடுகிறார்கள், ஆஸ்டிரேலியாவில் 244 பவுண்டு சாப்பிடுகிறார்கள். அந்த அளவுக்கு நாம் போக வேண்டாம். எனென்றால் இந்த நாட்டிலே நாம் இரண்டு கட்சிகளாகப் பிரிந்திருக்கிறோம். ஒன்று எங்களைப் போன்ற பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள், இன்னொன்று காமராஜர் போன்ற பிரபுக்கள் இருக்கிறார்கள். ஆகையால் இப்போது நாம் அதிகம் சாப்பிட முடியாது. நான் சொல்வது, இந்திய தூணை கண்டத்திலே, சென்னையிலே தான் அதிக அளவு நாம் சாப்பிடுகிறோம். அது மட்டுமல்ல, இங்கே இருக்கிற மதிப்பு

"The meat produced is estimated at Rs. 27 crores per annum",

என்று இருக்கிறது. ஆனால், அது அப்படியேதான் வளருகிறதே, வளரட்டும் என்று சொல்லலாம். இந்த கசாப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் சாதாரணமாக எழ்மை நீலையில் உள்ளவர்களும், அதிகக் கல்வி அறிவு இல்லாதவர்களும், சுகாதார முறைப்படி காரியத்தைச் செய்ய முடியாதவர்களும்தான். நான் குறிப்பிட்ட அந்த நாடுகளிலே என் அந்த அளவு லாபம் வருகிறது என்று சொன்னால்

"The Central Slaughter House, cold storage facilities, marketing facilities, transport facilities."

10th March 1959] [Sri C. N. Annadurai]

இது அத்தனையும் சர்க்கார் தந்திருக்கிறார்கள். நம் சர்க்கார் அதைத் தருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தந்தானும்கூட, கோல்ட் ஸ்டோரேஜ் வசதி பெற்றுக் கொண்டு இந்தத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுமானால் சர்க்கார் இந்தத் தொழிலை எடுத்துக் கொண்டால் அதிக லாபம் கிடைக்கும்—வருவாய் கிடைக்கும்—என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member has already taken 45 minutes. Anyway, I shall give him another five minutes.

SRI C. N. ANNADURAI : ஆகையால், இந்தத் தொழிலை எடுத்து நடத்துவதால் இழிவு என்று கருதத் தேவையில்லை. அதேபோல், பஸ் தொழிலை எடுத்து நடத்தலாம் என்ற மற்றொரு திட்டம் நான் பேசும் போது சொன்னேன். அதோடு, நாட்டிலே இருக்கும் எல்லாச் சினிமாக் கொட்டகைகளையும் எடுத்து நடத்தலாம் என்று சொன்னேன். அதிலே வரும் வருவாய் இருக்கிறது. இப்படி வருவாயைப் பெருக்குவதன் மூலம் நாட்டு மக்களுக்கு ஓரளவு நீங்கள் வரிச் சலுகை அளிக்கலாம், வரியைக் குறைக்கலாம்.

முதல் ஆண்டிலே நான் நிதி அமைச்சரிடம் சொன்னேன்—' உணவுப் பொருளுக்குப் போட்டிருக்கும் வரியைக் குறையுங்கள் ; சாப்பிடும்போ தெல்லாம் மக்கள் வாழ்த்துவார்கள் ' என்று சொன்னேன். அப்பொ முது அவர் பேசியிருப்பதை நான் மறுபடியும் படித்துப் பார்த்தேன். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு கவனிக்கலாம் என்று சொன்னார்கள். அடுத்த ஆண்டு கவனித்தாரா என்றால், அடுத்த ஆண்டும் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால், அவர் ஒரு வாதத்தை அளித் திருக்கிறார்கள். ' உணவுப் பொருளுக்கு வரி போடுகிறோம் என்றும் சொன்னா லும், உணவுப் பொருள்களில் 25 சத விகிதம் தான் வரி கொடுக்கத் தக்க அளவு வருகிறது ; மற்றப்படி உணவுப் பொருள்கள் கிராமத்தில் கைமாறிக்கொண்டு போகின்றன ; ஆகையால் விற்பனை வரி இல்லை ' என்று சொன்னார்கள். இது என்ன இவ்வளவு சாதுரியமாக வாதாடு கிறாரே என்று ஆச்சரியப்பட்டேன். அவர் இந்தக் கருத்தை எத்தனை காலமாக வைத்திருக்கிறார் என்று பார்த்தேன். 1953-இலே அவர் இங்கே பேசியிருக்கிறதைப் பார்த்தேன். அவர் பேசியபின் கடைசியில், அப்பொ முது முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரி அவர்கள், ' நிலைமை கொஞ்சம் சரியானால் விற்பனை வரியைக் குறைப்பதுபற்றி கவனிக்கலாம் ' என்று கூறினார்கள். நிலைமை சரியாகியிருக்கும் இந்த நேரத்தில், இந்த நிதி நிலை அறிக்கையிலே உணவுப் பொருள் மீது விதித்திருக்கும் வரியை ரத்து செய்திருப்பார்களானால், உண்மையிலேயே நாட்டு மக்களை நீங்கள் மதிக்கிறீர்கள் என்று பொருள். நாட்டு மக்களை மதிக்கின்ற காரியத்தில் உங்களை ஈடுபடுத்துவதற்கு எனக்குத் திறமை இல்லை.

நாட்டு மக்கள் அனைவரும் கூடி, புலவர் குழாங்கள் கூடி, ஆசிரியர் குழாங்கள் கூடி, ஜமீன்தார் மன்றங்கள் கூடி, இந்த மாநிலத்திற்கு " தமிழ்நாடு " என்று பெயர் வைக்க வேண்டுமென்று கூறினார்கள். " எங்களுக்குப் பிடித்தம் இல்லை ; ஆகையால் வேண்டாம் " என்று சொல்லிவிட்டார்கள் ஆட்சியில் இருப்பவர்கள். " தமிழ்நாடு " என்று பெயர் வைக்கவேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்தவரைப் பற்றி முதலமைச்சர் அவர்கள், ' வெட்ட வெளிச்சத்தில் பட்டினி கிடந்து சாகிறார் ' என்று கூறினார்கள். அந்த பக்கத்துக்கு அடிக்கடி போய் வந்த முதலமைச்சர் அவர்கள், ' அவர் இன்னும் சாகவில்லை ' என்பதுபோல் சொன்னாரே தவிர, ' தமிழ் நாடு ' என்று பெயரை மாற்றுகிறோம் என்று சொல்ல முன்வரவில்லை.

THE HON. SRI K. KAMARAJ : அவர் செத்துவிட்டார்.

10th March 1959]

SRI C. N. ANNADURAI: நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எனக்குத் தகவல் தருகிறார், 'அவர் பட்டினி கிடந்து செத்துவிட்டதாக. செத்து விட்டவரைப் பார்க்க நான் விருதுநகருக்குப் போய்விட்டு வந்தேன் செத்துவிடுகிறார் என்று தெரிந்திருந்துங்கூட, 'எங்களுக்கு இஷ்டம் இல்லை; ஆகையால், பெயரை மாற்றமாட்டோம்' என்று இருந்து விட்டார்கள்.

அது போல் தான், 'உதகமண்டலத்திற்கு எல்லாக்கட்சிகளும் எற்றுக் கொண்டால்தான் போவோம்' என்று சொன்னார்கள். 'அங்கு போக வேண்டாம்' என்று நாங்கள் சொன்னோம். 'நீங்கள் வேண்டாம் என் றீர்கள்; ஆகையால், வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒட்டலில் சாப்பாடு எப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு தடவை போய்விட்டு வந்தே காட்டுகிறோம்' என்று போகிறீர்கள். தாராளமாகப் போங்கள்.

ஒன்று நான் இந்த ஆட்சியாளருக்குச் சொல்வேன். மக்களுடைய மனப்போக்கை அறிந்து நடப்பதற்கு ஒரு ஜனநாயக நாட்டில், எவ்வளவு பலம் பொருந்திய கட்சியாக இருந்தாலும், முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். வலிவு இருக்கும் காரணத்தாலே மக்களுடைய மனப் போக்கை அறியத் தேவை இல்லை என்று நீங்கள் கருதுவீர்களானால், நிச்சயமாக இந்த வலிவு எந்த எந்த வகையிலே பெற்றபட்டது எனபதை நான் அறியாமல் இல்லை. இந்த வலிவு எந்த எந்த வகையிலே பெறப் பட முடியும் எனபதும் எங்களுக்குப் புரியாமல் இல்லை. இந்த வலுவை எப்படி எப்படிப் பெறுவது என்று நாங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளா மலும் இல்லை. ஆகையால், நான் இன்றையதினம் சொல்வது—இப் பொழுது கிடைத்திருக்கும் வருவாயை வைத்துக் கொண்டு, நீங்கள் மக்க ளுடைய எண்ணத்தைப் புறக்கணிக்கக் கூடாது எனபதை நான் சொல்லிக் கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கை பொதுவாக வடநாட்டுக்கும் தென் னாட்டுக்கும் இடையே இருக்கும் இந்தப் பூசல் களம்பியிருப்பதை மறைப் பதற்காகவும், மறப்பதற்காகவும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிக அழகாக வாதாடியிருக்கும் ஒரு பெரிய வழக்கறிஞர் செய்திருக்கும் வேலை என்று கருதுகிறேன். இது அவரை டில்லிக்கு அழைத்துச் செல்லு மானால் நான் திருப்திப்படுவேன். இதற்கு பிறகும் அவர் டில்லிக்குப் போக வாய்ப்பு கிடைக்க வில்லையானால், அவர் அடுத்த தடவையாவது 'சென்னை மாநிலத்திற்கு மத்திய சர்க்காரிலிருந்து உதவி சரியான காலத் தில் கிடைக்காத காரணத்தால் இவ்வளவு பின்தங்கி யிருக்கிறோம்' என்று சொல்லி, இங்கே இருக்கும் மக்கள் இருதயத்திலே கொஞ்சமேனும் நிம்மதி ஏற்படுத்தும் வண்ணம் நடந்து கொள்ளுவார் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: திரு. அண்ணாத்துரை அவர்களுக்கு நான் இங்கு இருப்பது பிடிக்கவில்லையானால் நான் விலகிக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஆனால், அவருக்கே பிடிக்காத வடக்குக்கு என்னைப் போகச் சொல்லவேண்டாம்.

SRI C. N. ANNADURAI: நிதி அமைச்சரைப் போகச் சொல்கிற நேரத்தில் நானும் அங்கு வருவதாகத்தான் இருக்கிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF: Sir, I wish to say a few words by way of personal explanation. May I draw the attention of the hon. Leader of the Dravida Munnetra Kazhagam and tell him that what I said was that before the demands are put up or made by the Labour leaders, they should examine and find out whether the particular industry could withstand those demands. The margin of profit nowadays is very small. Now, if unreasonable demands are made and if the industry concerned could not meet those demands, there will be difficulty. If, however, they were compelled to meet those demands, they would be forced to incur higher

expenditure and naturally this would lead to the cost of production being increased. When once the cost of production is increased, the prices of articles will go up, and when the prices go up, there will again be demand for higher wages to meet the increased prices of articles. So, the whole thing will work in a vicious circle. I was only referring to this aspect.

MR. SPEAKER : The hon. Member should be brief when he speaks by way of personal explanation. He cannot make a second speech.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் 12 மணிக்குப் பதில் அளிக்க ஆரம்பிப்பார். அதுவரைக்கும் கனம் அங்கத்தினர்கள் பேசலாம். ஒவ்வொருவரும் 15 நிமிஷங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, சென்ற மாதம் நான் என்னுடைய தொகுதியிலே 69 ஊர்களில் 72 பொதுக் கூட்டங்களை நடத்திவிட்டு வந்தேன். பொதுக் கூட்டங்களிலே பேசியபோது 'புது வரி போடுவார்களா ?' என்று சபையில் உள்ளவர்கள் என்னைக் கேட்டார்கள்.

(Deputy Speaker in the Chair.)

நானும் நமது நிதி அமைச்சர் பிரதி நிதியாக அங்கு மாறி, 'நிச்சயமாகப் புது வரி இல்லை' என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். என்றாலும், என் அல்தியிலே ஊரம் கண்டுகொண்டேயிருந்தது. நான் கூறியதற்கு மாறுக, எதேனும் புதிய வரி விதித்து விடுவார்களோ என்னமோ, அப்பொழுது பொது மக்கள் என்ன நினைப்பார்கள் என்று நான் பயந்து நடுங்கிக் கொண்டே இருந்தேன். நல்ல வேளையாக நான் நினைத்தது சரியாக இருந்தது. புது வரி என்றும் இல்லாத ஒரு பட்ஜெட் சபையில், வந்திருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அது மாத்திரம் அல்ல. சென்ற செப்டம்பரில் நிதி அமைச்சர் அவர்கள், 'அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இனிமேல் புது வரி போடமாட்டோம்' என்று கூறினார்கள். அதையே அவர்கள் ஏற்று, புது வரி இல்லாமல் அடுத்துவரும் பட்ஜெட்டையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது தவிர, விலைவாசியைப்பற்றி இங்கு அதிகமாகப் பேசப்பட்டது. 'விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது, கேரளாவுக்கு நெல், அரிசி செல்கிறது' என்று எல்லோரும் கூறினார்கள். நான் கேரள எல்லையில் இருப்பவன். பத்து மைலுக்குள்ளாக இருப்பவன். என்னுடைய தொகுதியில் நான் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, என்னுடைய தொகுதியில் உள்ளவர்கள் 'கேரளாவுக்கு அரிசி செல்வதைத் தடுக்க வேண்டாம்' என்று தெரிவித்தார்கள். சட்டசபைக் கருத்துக்கு மாறுக எங்கள் தொகுதி மக்கள் கருத்து இருக்கிறது. 'கேரளாவுக்கு அரிசி, நெல் செல்லுவதனால் அங்கே அதிக விலை கொடுத்து அதை வாங்கிக் கொள்ளுகிறார்கள் ; அதனால் விவசாயிக்கு ஊக்கம் ஏற்படுகிறது. ஆகையால், அரிசி, நெல் கேரளாவுக்கு போவதைத் தடுக்கும் முயற்சியை நிறுத்த வேண்டும்' என்று எங்கள் தொகுதியினர் கூறுகிறார்கள்.

கேரள எல்லையில் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் இருக்கின்றன. அந்த இரண்டு தாலுகாக்களில் உள்ளவர்கள் பெரியகுளம் தாலுகாவில் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், பெரியகுளம் தாலுகாவுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. நெல், அரிசி கேரளாவுக்குக் கொண்டு போவதைத் தடுக்கக்கூடிய வகையில் எதுவும் செய்யக்கூடாதென்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள்.

விலைவாசி உயருகிறது, உயருகிறது என்ற கூக்குரல் ஆங்காங்கு இருந்து கொண்டிருக்கிறது. விலைவாசி உயருவது பற்றிய கூக்குரல் நாட்டிலுள்ள இருபது சதவிகித மக்களிடத்திலிருந்து வருகிறது. ஆனால், எண்பது சத

[Sri N. R. Thiagarajan] [10th March 1959

விதத மக்கள் நிலத்தில் பாடுபட்டு உற்பத்தி செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அந்த எண்பது சதீ விதத மக்களுக்கு, நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களுக்குச் சாதகமாக அரசாங்கம் இருப்பதுதான் ஜனநாயகமேமதவிர, இருபது சத விதமாக பெரும்பாலும் நகரங்களிலே இருக்கும் மக்களுக்குப் பரிந்து, வீலவாசி உயருகிறது, உயருகிறது என்ற கூக்குரலே கேட்டு அரசாங்கம் வீலவாசியைக் கட்டுப்படுத்தும் முயற்சியை எனனுடைய தொகுதியிலுள்ள சாதாரண பாமர ஏழை ஜனங்கள் விரும்பவில்லே. அந்தப் பேச்சைக்கூட அவர்கள் எதிர்க்கிறார்கள். எழுபத்திரண்டு கூட்டங்களில் பொது மக்களுடைய குறைகளைக் கேட்ட காலத்தில் அவர்கள் இந்தக் கட்டுப்பாடுகளே யெல்லாம் எதிர்க்கிறார்கள். வீலவாசி கூடியிருந்தால்தான் விவசாயிகளுக்கு நல்லது, ஒரு எக்காவில் பயிர் செய்வதோடு நில்லாமல், ஐந்து ஏக்காக்களில் பயிர் செய்ய முடியும்; பத்து கலம் வீளைச்சல் கண்டு கொண்டிருந்த இடத்தில் 20 கலம் வீளைச்சல் காணலாம், அப்படியெல்லாம் உற்சாகம் ஏற்படும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

'வீலவாசி உயருகிறது, சம்பளம் கட்டுப்படியாகவில்லே' என்று கூறுகிறவர்கள் அப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டு வேலே செய்ய வேண்டிய அவசியம் இல்லே; கட்டுப்படியாகாத அந்த வேலேயை ராஜினமா செய்துவிட்டு, அதிகமான பலன் கொடுக்கக்கூடிய என்று நினேக்கிறார்களே அந்த விவசாயத் தொழிலேச் செய்து முன்னேறட்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, விவசாயிகளுக்குக் கஷ்டம் கொடுக்கும் அளவுக்கு நகரத்தில் உள்ளவர்கள் 'வீலவாசி எறுகிறது, எறுகிறது' என்று கூச்சல் போட்டுக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, கட்டுப்படியாகாது என்று சொல்லுகிற தங்களுடைய தொழிலே விட்டுவிட்டு கிராமங்களில் வந்து, விவசாயத் தொழிலே மேற்கொள்வது நல்லது என்றுதான் பொது மக்கள் கருதுகிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே வீலவாசிபற்றி பேசிக்கொண்டிருந்து, அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, ஜனங்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். 1952-ம் ஆண்டு கண்டோல் காரணமாக ஜனங்கள் எவ்வளவு அதிருப்தியுற்றார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவுக்குப் பயன்படக்கூடிய திட்டம் மேல் பெரியாறு திட்டமாகும். இந்தத் திட்டம் பற்றி ராமாத்து இலாகா அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, "பதினொன்று கோடி ரூபாயில் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சலாம்" என்று சொன்னார்கள். அது மிகக் குறைந்த செலவாகும். பரம்பிக்குளத் திட்டத்திற்கு முப்பது கோடி ரூபாய் செலவாகிறது. ஆனால், இரண்டரை லட்சம் ஏக்காக்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, பரம்பிக் குளத்தைவிட மேல் பெரியாறு திட்டம் லாபகரமானது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மாத்திரம் அல்ல. வேறு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களேவிட மேல் பெரியாறு திட்டம் தான் லாபகரமான திட்டமாக இருக்கிறது. இதைப்பற்றி கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதோடுகூட, ஸோனல் கவுன்சிலிலும் பேசி, மேல் பெரியாறு திட்டத்தை அடுத்த ஆண்டுக்குள்ளாக வேலே ஆரம்பிப்பதற்கான சூழ்நிலேயை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது தவிர, என்னுடைய தொகுதியிலே பெரும்பாலான பகுதிகள்—கண்டமநாய்க்கனூர், எழுமலே, சேத்தூர் முதலியவை—ஜமீன் பிரதேசங்களாக இருக்கின்றன. எழுபத்தைந்து சத விதக் கிராமங்கள் ஜமீன் பிரதேசமாக இருந்திருக்கின்றன. நூற்றைம்பது ஆண்டுகளாக ஜமீன் பகுதியில் குளங்கள் மராமத்து செய்யப்பட வில்லே. புதிய ரோடுகள் போடப்படவில்லே; புதிய சீர்திருத்தங்கள் செய்யப்பட வில்லே. கண்டமநாய்க்கன் பகுதியிலே பழைய பாண்டியர் காலத்திலே கட்டப்பட்ட பெரிய ஒரு அணை உடைந்து கிடக்கிறது. அது இன்னும் செப்பனிட்டப்படாமல் இருக்கிறது. முதல் அமைச்சரும் அதைப் பார்வையிட்டு வந்தார். அதைச்

10th March 1959] [Sri N. R. Thiagarajan]

செப்பனிடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செப்பனிட்டால் பத்தாயிரக்கணக்கான ஏக்கரா நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு, அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது தவிர சமுதாய நலத் திட்டங்கள் சில இடங்களில் நடைபெற்று வருகின்றன. அதைப்போலவே என்னுடைய தொகுதியிலும் ஒன்று அல்லது இரண்டு இடங்களில் நடைபெற்று வருகின்றன. அவைகள் செவ்வனே நடப்பதாக இல்லை என்று பொது மக்களும் சொல்லுகிறார்கள், என்னுடைய அபிப்பிராயமும் அதுவேதான். ஆனால் ஸ்தல அபிவிருத்தி திட்டங்கள் என்று சில இடங்களில் நடைபெற்று வருகின்றன. அவைகள் நல்ல முறையில் நடப்பதாகத் தெரிய வருகிறது. மக்களும் அதையேதான் கருதுகிறார்கள். ஸ்தல அபிவிருத்தித் திட்டம் நல்ல வெற்றி அடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது. பட்ஜெட் அறிக்கையில் ஸ்தல அபிவிருத்தி திட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று நமது கனம் நிதி அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால் நேற்றைய தினம் பத்திரிகையில் பார்க்கும்போது அதற்கு மாறுபட்ட கருத்து வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதன் அர்த்தம் என்ன என்று புரியவில்லை. பத்திரிகையில் வந்தது உண்மையா என்பது புரியவில்லை.

சாலை மராமத்து விஷயமாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஜில்லா போர்டு கையின் கீழ் இருந்தபோது பல சாலைகள் மராமத்து செய்யப்படாமலேயே இருக்கிறது. அதனால் ஜில்லா போர்டுக்கு எழுதியோ அல்லது அரசாங்கமே அவைகளை எடுத்துக்கொண்டு மராமத்து செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆண்டிபட்டி ரோடு, தெப்பம்பட்டி ரோடு கடமலைக்குண்டு ரோடு, எழுமலை மங்கல் ரேவு போன்ற சாலைகள் மராமத்து செய்யப்படாமலேயே இருக்கின்றன. வைகை நதி உற்பத்தியாகக் கூடிய இடத்திற்குப் போக சாலை வசதி இல்லை. அதனால் அந்தச் சாலைகளையும் மராமத்து செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இவைகளுக்கு அதிகப்படியாக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி விஷயமாக நாம் எவ்வளவோ முன்னேற்றம் கண்டிருக்கிறோம். மற்ற ராஜ்யங்களில் நாம் கல்விக்கு என்று ஒதுக்கிய பணம் அளவு ஒதுக்கியதாகவே இல்லை. மற்ற ராஜ்யங்களை விட நாம் கல்விக்கு என்று அதிகப்படியாக பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். அது ரொம்பவும் வரவேற்கத்தக்க விஷயம். இது பெருமைப்படக்கூடிய விஷயம். பொதுப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய இடங்கள் இல்லை. புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய இடங்கள் இல்லை. இப்பொழுது பெரிய பெரிய அணைக்கட்டுகள் கட்டியிருக்கிறார்கள். அதாவது சாத்தனூர், கிருஷ்ணகிரி, ஆரணி, லோயர் பவானி, அமராவதி போன்ற பெரிய அணைக்கட்டுகளைக் கட்டியிருக்கிறோம். அதற்கு என்ற ஏராளமாக கட்டிடங்களையும் கட்டியிருக்கிறோம். அப்படிப்பட்ட கட்டிடங்களை பள்ளிக்கூடங்களுக்கு என்று உபயோகப்படுத்திக் கொள்ளலாம். புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டிய தேவை இல்லை. இது என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஆஸ்பத்திரிகளுக்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பது புரியவில்லை. ஆஸ்பத்திரிகள் விஷயமாக பல குறைபாடுகள் இருக்கின்றன. சில இடங்களில் ஆஸ்பத்திரி வசதி சரியாகக் கிடைப்பது இல்லை. என்னுடைய தொகுதியில் மூன்று லட்சம் பேர்களுக்கு இரண்டு ஆஸ்பத்திரிகள்தான் இருக்கின்றன. சில இடங்களில் 25 மைல்களுக்கு ஆஸ்பத்திரிகள் கிடையாது. அதனால் இப்படிப்பட்ட இடங்களுக்கு அரசாங்கம் ஆஸ்பத்திரிகளை அமைத்துக் கொடுக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri N. R. Thiagarajan] [10th March 1959

இது தவிர கூட்டுறவு இலாகா சம்பந்தமாக புதிய விதிகளைக் கொண்டு வரப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு என்று கூடிய சீக்கிரத்தில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறி தொழில் சம்பந்தமாக குறிப்பிடும்போது விசைத்தறிகள் வைக்கும் சம்பந்தமாக, மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு உதவி வரப்போவதாகத் தெரிய வருகிறது. அதை அனுசரித்து கைத்தறி இல்லாத இடங்களில் விசைத்தறிகளை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் அண்ணுதுரை அவர்கள் கசாப்பு கடையை ஏன் வைத்து நடத்தக்கூடாது என்று கேட்டார். அப்படி மேல் நாட்டில் வைத்தால் அது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். மாட்டு இறைச்சி கடையை இங்கு வைத்தால் ஒருவரும் அதை விரும்ப மாட்டார்கள். இங்கே அப்படி வைக்க வேண்டும் என்று பேசுவார்களே தவிர அவர்கள் அங்கே சென்று அதை வாங்க மாட்டார்கள். கனம் ஆசைத்தம்பி போன்றவர்கள் அதைப்பற்றி இங்கே பேசுவார்களே தவிர அதை வாங்கிச் சாப்பிட மாட்டார். அவர்கள் சாப்பிடுவதற்கு தயாராக இருந்தால் அதை வைப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். கசாப்பு கடை வைத்தால் நிச்சயமாக பணம் வரும், ஆனால் மக்கள் அதை விரும்ப மாட்டார்கள். ஒருக்கால் ஆசைத்தம்பி அவர்கள் வாங்கிச் சாப்பிடுவாரோ என்னமோ ?

அடுத்தபடியாக கனம் அண்ணுதுரை அவர்கள் பேசும்போது ஒன்றை குறிப்பிட்டார். கனம் ஸ்ரீ சுப்ரமண்யம் அங்கத்தினராக இருந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டார் என்றும் அமைச்சராக இருப்பதால் தான் இப்படியெல்லாம் பேசுகிறார் என்றும் குறிப்பிட்டார். நான் சொல்லுவேன் கனம் அண்ணுதுரை அவர்களும் அமைச்சராக இருந்தால் இப்படி யெல்லாம் பேசமாட்டார் ஆனால் அவர் அமைச்சராக மாட்டார், அந்த சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்காது என்று இருப்பதால் தான் அவர் இப்படியெல்லாம் பேசுகிறாரோ என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. தான் அதிகாரத்திற்கு வரப்போவதில்லை என்ற காரணத்தினாலோ என்னமோ அவர் இதே மாதிரி பேசி பழகி வருகிறார் இப்படிப்பட்ட புள்ளி விவரங்களைக் கண்டு குறை கூறிக் கொண்டே வருகிறார். இப்படிப் பேசியே அவருக்கு சகஜமாகிப் போய் விட்டது. அதைப்பற்றி அதிகமாக பேசுவதற்கு எனக்கு காலம் இல்லை, இருக்கக்கூடிய காலம் வீணுகப்போகிறது. அதற்கு அமைச்சர் அவர்களே பதில் சொல்லிக்கொள்ளுவார் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : On a point of personal explanation.

DEPUTY SPEAKER : How does it arise? The hon. Member has not mentioned anything about you.

SRI A. V. P. ASAITHAMBI : என்னைப்பற்றி கனம் அங்கத்தினர் தியாகராஜன் பேசினார். நான் மாட்டு இறைச்சி சாப்பிடுவதாக கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். நான் எந்த இறைச்சியையும் சாப்பிடுவது கிடையாது. நேற்றைய தினம் நானும் கனம் தியாகராஜனும் ஒரு ஹோட்டலுக்குச் சென்றிருந்தோம். அங்கே அவர்தான் மாட்டு இறைச்சியை சாப்பிட்டார். அதை மறைப்பதற்காக என்னை சாப்பிடச் சொல்லுகிறாரோ என்னமோ, அதைக்கண்டு நான் வருத்தப்படுகிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி நான் சொல்வதற்கு முன்னால் இந்தச் சபையில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. கோவிந்தசாமி அவர்கள் பேசும் சந்தர்ப்பத்தில் சில விஷயங்களைப்

10th March 1959] [Sri P. G. Karuthiruman]

பற்றிக் குறிப்பிட்டார். அவர் என்னைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய காரணத்தால் அதைப்பற்றிப் பேச வேண்டியதாக இருக்கிறது. மற்றும் கனம் அண்ணாதுரை அவர்கள் பேசிய காரணத்தாலும் நான் நிச்சயமாகப் பேசித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நீலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் பேசியபோது சில புள்ளி விவரங்களை வைத்து பேசுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் பேசிய சமயத்தில் சில புள்ளி விவரங்களை வைத்து ஆதாரம் இல்லாமல் பொறுப்பு இல்லாமல் இந்த சட்ட சபையில் பேசியிருக்கிறார்கள். அப்படி பேசியிருப்பது சரியல்ல என்பதை எடுத்துக்காட்டி பேச வேண்டும் என்று விரும்புகிறேன். நண்பர் கோவிந்தசாமி பேசியபோது என்னுடைய தலைமையில் நடத்தப்பட்ட சமையல் வேலை கூட சரியாக நடத்தப்படவில்லை என்றும், அதன் மூலம் 4,300 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

SRI A. GOVINDASAMY : அங்கத்தினர்கள் பொறுப்பு இல்லாமல் பேசுகிறார்கள் என்று சொல்வது சரியா ?

DEPUTY SPEAKER : The House Committee is in charge and not the hon. Member.

SRI P. G. KARUTHIRUMAN : இப்படி 4,300 ரூபாய் நஷ்டப்பட்டிருக்கிறது என்று எந்த இடத்தில் இந்த பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதைக் காண்பித்து குறிப்பிட்டிருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன். அல்லது தனிப்பட்ட முறையில் என்னை வந்து கேட்டிருந்தால் நிச்சயமாக புள்ளி விவரங்களுடன் அவருக்குத் தகவல் கொடுத்திருப்பேன். ஒரு ஹாலில் ஒரு இடத்தில் நடந்தது மாதிரி என்று பேசுவது சரியல்ல. குறைபாடுகளை எடுத்து நிரூபித்தால் நான் ராஜினாமா செய்யவும் தயாராக இருக்கிறேன். ஆகவே இவ்வளவு பொறுப்பு இல்லாமல் பேசுவது சரியல்ல. இந்தப் பொறுப்பு யாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டது? கனம் உதவி சபாநாயகர் அதற்கு தலைவர். அந்த நீலையில் யார் அதற்கு பொறுப்பு என்று சொன்னால் அந்தக் கமிட்டி பூராவும் தான் பொறுப்பு. வேறு ஒன்றுமே இல்லை. அதோடு மட்டுமல்ல. இருக்கிற கணக்கைப் பார்த்துச் சொல்ல வேண்டும். அதை சாலஞ்சு பண்ணுவதாக இருந்தால் அதைப்பற்றிக் கேள்வி போட்டு கேட்க வேண்டும். கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

DEPUTY SPEAKER : The hon. Member need not challange. He may speak.

SRI P. G. KARUTHIRUMAN : அதோடு கூட டி.எம்.கே. கட்சி அங்கத்தினர் கூட அந்தக் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருக்கிறார். அந்த நீலைமையில் அவரும் தான் அதற்கு பொறுப்பு. அந்தக் கமிட்டியில் நிதி மந்திரி இருக்கிறார். முதல் மந்திரியும் இருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் எவ்வளவு சப்சிடி வேண்டுமானாலும் கொடுக்க தயார் என்றும் சொல்லி இருக்கிறார்கள். நல்ல சாப்பாடாக சாப்பிடுங்கள் எவ்வளவு உதவி வேண்டுமானாலும் கொடுக்கத் தயார் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அப்படியெல்லாம் சொன்னதற்கு இதுதானா பரிகாரம் என்று கேட்கிறேன். அந்த உணவு கமிட்டிக்கு கனம் அர்தநாரீஸ்வர கௌண்டர் தலைவர். வேண்டிய உதவி செய்கிறேம் என்று கூட சொல்லியிருக்கிறார்கள். நல்ல உணவு போடப்பட்டிருக்கிறது. இரண்டரை ரூபாய்க்கு விஜிடேரியன் உணவு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் " நான் விஜிடேரியன் " சாப்பாட்டிற்கு மூன்று ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். நல்ல உணவாகக் கொடுக்க வேண்டும் என்றுதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. எதிர் கட்சியிலுள்ள கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கூட நல்ல சாப்பாடு போடப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார். அதைக்கண்டு அவர் சந்தோஷப்பட்டுகொண்டிருக்கிறார். இந்த நீலைமையில் புகார் சொல்வதைக் கேட்க ஆச்சர்யமாக

[Sri P. G. Karuthiruman] [10th March 1959

இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் இப்படி பொறுப்பற்ற நிலையில் பேசுவது என்றுல் வருத்தமாகத்தான் இருக்கிறது. ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்படியெல்லாம் நடத்தப்பட்டது. அப்படி இல்லாமல் மினர்வா ஹோட்டலுக்குச் சென்று சாப்பிடுவது என்றுல் அது ஒத்துழைப்பாக ஆகுமா என்று கேட்கிறேன். உணவு கமிட்டி நல்ல முறையில் நடைபெறக் கூடாது என்பதற்காக எதிர் அசசாங்கம் நடத்துவது போல் வேறு ஹோட்டலுக்குச் சென்று சாப்பிடுவது என்பது சரியல்ல. மற்றும் பிச்சைக்காரர்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். பிச்சை எடுப்பதற்கும் சமர்த்தியம் வேண்டும். ஒரு ஊரில் ஒரு பிச்சைக்காரன் வந்தான், வந்து பிச்சை கேட்டான். பிச்சை போடவில்லை. அதற்கு அவன் அந்த ஊரில் செய்தது போல் செய்து விடுவேன் என்று சொன்னுன். உடனே அவனைக் கூப்பிட்டு அவனுக்கு ஆகாரம் போட்டு உபசரித்தார்கள். அதன் பிறகு அவனைக் கேட்டார்கள் "அந்த ஊரில் பண்ணியது போல் பண்ணு வேன் என்று சொன்னுயே, அந்த ஊரில் என்ன செய்தாய்" என்று கேட்டார்கள். அதற்கு அவன் என்ன பதில் சொன்னுன் என்றுல், "அந்த ஊரில் பிச்சை கேட்டேன்; பிச்சை இல்லை என்று சொன்னுர்கள், உடனே பட்டினி இப்பது என்று தீர்மானம் செய்து படுத்துக்கொண்டு விட்டேன்" என்று சொன்னுன். அதைக் கேட்டவுடன் அவனுக்கு சாப்பாடு போட்டவன் என்ன நினைத்துக்கொண்டிருப்பான் என்பதை நான் சொல்ல வேண்டாம், நீங்களே தெரிந்து கொள்ளலாம். அதற்கு பிறகு அவனுக்கு என்ன வரவேற்பு இடைத்திருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே அந்த முறையில் மக்களிடத்தில் இப்படி பிரசாரம் செய்வது சரியல்ல. அந்தப் பிச்சைக்காரனுடைய நிலைமைதான் ஏற்படும் என்று உரை வேண்டும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

11-00 a.m அதோடு சில புள்ளிவிவரங்களைச் சொன்னர்கள். உணவு தானியங்கள் விலை ஏறிவிட்டது என்று கூறினர்கள். நாங்கள் பேச ஆரம்பித்தால் 400, 500 எக்கர் நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள் என்று கூறுகிறார்கள். பூமி இல்லாதவர்கள் பேச ஆரம்பித்தால் பொறுப்பில்லாமல் பேசுகிறார்கள் என்று கூறுகிறார்கள். நடுத்தர விவசாயிகு விலை நிர்ணயம் செய்வதைப்பற்றி விவசாயி என்ற முறையில் சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1939-ம் வருஷத்தில் மக்களுடைய வாழ்க்கைப் புள்ளி 100 ஆக இருந்தது என்று வைத்துக் கொண்டால் அதற்கு மேல் இன்று எத்தனை புள்ளி அதிகரித்திருக்கிறது. வாழ்க்கைப் புள்ளி 300-க்கு மேல் உயர்ந்து விட்டது. முந்நூற்று ஐம்பத்து எட்டு ஆக உயர்ந்து விட்டது என்று கூறுகிறார்கள். அதே சமயத்தில் 1939-ம் வருஷம் விவசாயம் செய்ய ஆகும் உற்பத்திச் செலவின் புள்ளி விவரத்தை 100 ஆக வைத்துக்கொண்டு இப்பொழுது உற்பத்திச் செலவு புள்ளி விவரத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் இப்பொழுது நிர்ணயிக்கப் பட்டிருக்கும் விலை நியாயமானது என்று சொல்ல முடியாது. 1939-ம் வருஷத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் உற்பத்திச் செலவு 50 ரூபாய் என்றுல் இன்றைய தினம் சர்க்கார் கணக்குப்படி 300 ரூபாய் ஒரு ஏக்கருக்கு உற்பத்திச் செலவு ஆகும். 1939-ம் வருஷத்தில் வாழ்க்கைச் செலவு புள்ளி 100 ஆக இருந்தால் இன்றைய தினம் 600, 700 ஆக உயர்ந்திருக்கிறது. 1939-ல் இருந்த தானிய விலை இன்றைக்கு ஆறு பங்கு உயர்ந்திருந்தாலும் அதை உற்பத்திச் செலவோடு பார்க்கும்போது நியாயமான விலையாக இருக்க முடியாது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதோ விவசாயி 50, 100 ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு இப்பொழுது பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அதிகமான விலைக்கு விற்கிறார்கள் என்று சொல்லுவதில் நியாயம் இல்லை. புள்ளி விவரங்களைக் கணக்குப்போடும்போது விவசாயியின் உற்பத்திச் செலவை மட்டும் கணக்குப் போட்டுப் பார்த்தால் போதாது. வாழ்க்கைச் செலவுப் புள்ளியையும் கவனித்துப் பார்க்க வேண்டும். 1939-ம் வருஷத்தில் வண்டிப் பட்டம் 1½ ரூபாய்க்கு போடலாம் என்றுல், இன்று விலை 10 ரூபாய் அப்பொழுது ஒரு ஜதை மாடு 110 ரூபாய்க்கு வாங்கலாம் என்றுல் 800 ரூபாய்க்குக் குறைந்து இப்போது வாங்க முடியாது. "இரண்டு ரூபாய்க்கு

10th March 1959] [Sri P. G. Karuthiruman]

விற்ற பருத்திக்கொட்டை விலை இன்று 15 ரூபாய். அப்பொழுது ஒரு ரூபாய்க்கு 8 படி அரிசி கிடைத்தது ; இப்பொழுது ஒரு ரூபாய்க்கு 1படி அரிசிதான் கிடைக்கிறது " என்று கூறினார்கள். நானும் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு ரூபாய்க்கு 8 படி அரிசி வாங்கிய சமயத்தில் 2 அணு, 3 அணு கூலி வாங்கிக் கொண்டு ஒரு நாளைக்கு 9 மணி நேரம் வயலில் வேலை செய்து வந்தார்கள். ஆனால் இன்றோ 1½ ரூபாய்க்கு மேல் கூலி வாங்கிக்கொண்டு 3 மணி நேரத்திற்கு மேல் வயலில் வேலை செய்வதில்லை. எத்தனை சதவிகிதம் உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு ரூபாய்க்கு 8 படி அரிசி கிடைத்திருக்க லாம். அந்தக் காலத்தில் 9 மணி நேரம் வேலை செய்து 3 அணு கூலி பெற்றுக்கொண்டு உண்மையாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று 1½ ரூபாய் கூலி வாங்கிக்கொண்டு சரியாக வேலை செய்வதில்லை. நம் முடைய தோழர்கள் இருக்கவே இருக்கிறார்கள்—உழுபவனுக்கே நிலம் சொந்தம் எனகிற இளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டு ; அதனால் வேலைத் திறமை குறைந்துவிட்டதோடு மட்டுமல்லாமல் உற்பத்திச் செலவு 10, 15 மடங்கு அதிகமாகி இருக்கிறது எனபதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள் கிறேன். இந்த அடிப்படையை நான் எப்பொழுதானும் நீளு பிக்கத்தயாராக இருக்கிறேன். 1939-ம் வருஷத்தை விட இன்று 7, 8 மடங்கு அதிகரித்திருக்கிறது. இவைகளையெல்லாம் கணக்கிட்டு நியாய விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்பது நியாயந்தான். அதிகமாக விலை இருக்கக்கூடாது. அதே நேரத்தில் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை இருக்கவேண்டும். இதற்கு நான் ஒரு ஆலோசனை கூறு கிறேன். மில்காரர்களிடத்தில் வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். விவசாயியிடத்தில் போகக் கூடாது. போனால் அவ்வளவு நன்றாக இருக்காது, என்ற நிலையில் சர்க்கார் யோசிக்கின்றனர். முன்பு " கம்பல்சரி ப்ரொக்யூர்மெண்ட் " கட்டாயக் கொள்முதல் இருந்தது. அப்பொழுது மக களுக்கும் விவசாயிகளுக்கும் இருக்கும்படியான நிலை என்ன ? இந்தக் கட்டாயக் கொள்முதலில் எமாற்றுபவன் எமாற்றிக்கொண்டே இருப்பான். நியாயமாக நடப்பவன் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகவேண்டியே இருக் கும். குறிப்பாக அண்ணன் தம்பி இரண்டு பேருக்கும் 20 எக்கர் நிலம் இருந்தால் அண்ணனுடைய 10 எக்கர் நிலத்தைப் பொறுத்த வரை அதன் விளைவு குடும்பச் செலவுக்கே தான் இருக்கும் என்ற கணக்கை எழுதி வைத்திருப்பார்கள் தம்பி வேண்டாதவனுக இருந்தால் இவன் இவ்வளவு மூட்டை கொடுத்தாகவேண்டுமென்ற கணக்கையும் எழுதி வைத்திருப்பார்கள். இப்படித் தங்கள் போக்கில் கணக்குகள் தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்றார் போல எழுதி வைத்த கணக்கை " வெரிபை" பண்ண வழி இல்லாமல் இருந்தது. அதனால் விவசாயிகளிடத்தில் அதிகமான அதிருப்தி உண்டாகி இருந்தது. கட்டாயக் கொள்முதல் நியாய மாக நடக்கவில்லை. அதற்காகத் தான் நமது நிதியமைச்சர் அவர்கள் பொருளாதார மாறுதல் இருக்கும்படியான சமயத்தில் கட்டாயக் கொள் முதல் வேண்டாம், லெவி கொள் முதல் ஆகலாம் என்றார்கள். அப்படி லெவி கொள்முதல் கொண்டு வந்தபோது கோவையில் மிக மிக வெற்றிகரமாக நடந்து வந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது லெவி கொள் முதல் என்று கொண்டு வந்தால் அதிகாரிகளுக்கும் அலுவலியமான வேலைகள் இருக்காது. நோடிபிகேஷன் முதலியவைகள் எழுதும்படியாகவும் இருக்காது. சர்க்கார் இப்பொழுது 2 லட்சம் டன் தானியம் கொள்முதல் செய்வது என்று தீர்மானித்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் எத்தனை எக்கர் நிலங் களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது என்ற விவரம் நம்மிடம் இருக் கிறது. இந்த அடிப்படையில் ஒரு எக்கருக்கு 2 மூட்டையோ 4 மூட்டையோ விவசாயிகள் கொடுத்துவிட்டு பாக்கியுள்ளதை அவர்கள் வைத்துக்கொள்ள லாம் என்று செய்துவிட்டால், இதை விவசாயிகள் எல்லோரும் வர வேற்பார்கள். சாதாரணமாக அவர்கள் 2, 3 வருஷங்களுக்காவது தானி யங்களை வைத்திருக்கவேண்டும். இந்த வருஷ அறுவடையில் அடித்த வருஷ சாகுபடிக்குத் தேவையான விதைகளையும், சாகுபடிச் செலவுக்கான தானியத்தையும் வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு

[Sri P. G. Karuthiruman] [10th March 1959

நாம் நிர்ணயிக்கிற அளவு தானியத்தை லெவி முறையில் சந்தோஷமாகச் சர்க்காருக்குக் கொடுத்து விட்டு மீதி தானியத்தை கிராமத்திலுள்ள நிலைக்குத் தகுந்தவாறு, கூலிக்குத் தகுந்தவாறு அவர்கள் இஷ்டம் போல் செலவிட்டுக்கொள்ள முடியும். வேண்டுமானால் அதற்கும் உயர்ந்த பட்ச விலையை நிர்ணயிக்கலாம். இவ்வாறு லெவி முறை கொண்டு வருவதுதான் விவசாயிகளிடத்தில் அதிருப்தி ஏற்படாதவாறு இருக்கு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய மனம் அவ்வளவு பக்குவப்பட்டு நாட்டுக்காக உதவி செய்ய முன் வந்திருக் கிறது. மற்றதை நீங்கள் கேரளத்திற்கு அனுப்பினாலும் சரி, ஆந்திராவில் இருந்து வரவழைத்துக் கொண்டாலும் சரி அதைப் பற்றிக் கவலே இல்லே. 1939–ம் ஆண்டு உற்பத்திச் செலவு என்ன புள்ளி இருந்தது, இன்றைக்கு என்ன புள்ளி இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நியாயமான விலேயை நிர்ணயித்துக்கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும். மில்காரர்களிடம் வாங்கிக்கொள்வது என்பது நியாய மில்லே. அவர்களுக்கு பாங்கும் எர்ளமாகக் கடன் கொடுப்பதனுல் அதைக் கொண்டு விவசாயிகளிடத்தில் குறைந்த விலேயில் அறுவடை சமயத்தில் தானியத்தைக் கொள்முதல் செய்து மூட்டை மூட்டையாகச் சேமித்து வைத்துக் கொண்டு உயர்ந்த விலேக்கு மற்ற காலங்களில் அவர்கள் விற்று வந்ததன் காரணமாக இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான விவசாயி களாகிய நாங்கள் பலருடைய குற்றச்சாட்டுக்கு ஆளாகிறோம். ஆகவே பாங்குகள் அவர்களுக்குக் கடன் கொடுப்பதையும் நிறுத்த வேண்டும். லெவி முறையில் ஒரு எக்கருக்கு இத்தனே மூட்டைகள் கொடுங்கள் எனறுவிட்டால் ஏழை விவசாயிகள் எந்த இடத்தில் வேண்டுமானாலும் கொண்டு வந்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இன்றைக்கு ஓரளவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் போட்டிருக்கக்கூடிய திட்டங்கள் இல்லே. உணவுப்பொருளுக்கு இது வரை யில் கணிசமாக விலே கிடைத்து வந்தது என்பதுதான். ஆகவே நல்ல தொரு நியாயமான உயர்ந்தபட்ச விலேயை சர்க்கார் நிர்ணயித்துக் கொடுப்பார்களேயானுல் உழைப்புக்கு, சாகுபடிச் செலவுக்கு ஏற்றபடி அமைத்துக்கொடுத்தால் அவர்கள் நூற்றுக்கு நூறு உற்பத்தியை அதிகப் படுத்திக் காட்டுவார்கள் என்று விவசாயிகளின் சார்பாகச் சொல்லிக் கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : சட்ட மன்றத் துணேத்தலேவர் அவர்களே, திரு. கருத்திருமன் நான் குறிப்பிட்ட விஷயத்தை மறுத்துப் பேசுகின்ற போது பொறுப்பில்லாமல் பேசிவிட்டேன் என்றும், புள்ளிவிவரம் இல்லாமல் பேசிவிட்டேன் என்றும் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். சர்க்கார் கொடுத்திருக்கிற இந்த பட்ஜெட் புத்தகத்தில் 93-ம் பக்கத்தில் "charges for running Legislators' Mess in Government Estate, Mount Road, Madras—Revised Estimate—1958–59—Rs. 4,300" என்று போடப் பட்டிருக்கிறது. இவர்கள் இப்போது சொல்வது அதில் லாபம் வந்திருப்பதாக. (ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் நஷ்டம் நீங்கள் சொன்னதுபோல இல்லே). நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தைத்தான் நான் சொன்னேன். அப்போது அவர்களும் சபையில் இருந்தார்கள். அதை அவர்கள் மறுக்காமல் அங்கத்தினர்கள் சாப்பிட்டுவிட்டுப் போய் விட்டார்கள் என்றார்களேயொழிய வேறு எதுவும் அப்போது மறுத்துச் சொல்லவில்லே. ஆகவே நான் சொன்னதில் தவறில்லே. கொடுத்திருக்கக் கூடிய புள்ளிவிவரம் வேண்டுமானுல் தவருக புரிந்து கொள்ளும்படி செய்திருக்கலாம். (ஸ்ரீ. பி. ஜி. கருத்திருமன் எழுந்திருந்தார்.)

DEPUTY SPEAKER : Let me explain that it is only advance.

SRI A. GOVINDASAMI : It is not stated so here.

DEPUTY SPEAKER : Let there be no discussion about it.

10th March 1959]

*SRI THIRUMALAI MUTHU VEERASAKKAYA THIRUVENKADASAMI NAICKER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே நிதி அமைச்சர் அவர்கள் நமது அரசாங்கம் சோஷலிஸ முதாயத்தை அமைப்பது என்கிற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்கு வறுமை மிகுந்த இந்த நாட்டில் எல்லோரும் ஒத்துழைத்தால்தான சாத்தியமாகும். ஆகவே மக்கள் இன்னும் அதிகமான தியாகத்தைச் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்ற சர்க்கார் முதலாவதாக நாட்டு மக்களுடைய வருவாயில் இருக்கும் அதிகமான ஏற்றத்தாழ்வுகளைக் களைய வேண்டும். சிப்பந்திகளுக்குச் சம்பளமாகக் கொடுப்பதில் கூட அதிகமான ஏற்றத்தாழ்வு இல்லாதவாறு செய்யவேண்டும். இன்றைக்கு அமைச்சர்கள் மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் சம்பளமாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதே சந்தர்ப்பத்தில் சாதாரண விவசாயியோ, ஒரு கூலியாளோ மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் அல்லது 80 ரூபாய் தான் சம்பாதிக்கமுடிகிறது. இவ்வளவு மாறுபாடான நிலைமையில் உள்ள மக்களைப் பார்த்து அமைச்சர் அவர்கள் "நீங்கள் எல்லாம் தியாகங்களும் செய்யத் தயாராய் இருக்கவேண்டும்" என்று சொல்வது பொருத்தமாக இல்லை. வறுமை மிகுந்த இந்த நாடு முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காக அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைத்துக்கொண்டு மற்றவர்களையும் பார்த்து தியாகம் செய்யுங்கள் என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கது. அதைச் செய்யத் தவறிவிட்டு, வாழ்க்கையின் உயர்ந்தபடியில் இருந்து சர்க்காரை நடத்துகிற அமைச்சர் அவர்கள் வாழ்க்கை வசதி மிகவும் குறைந்த நிலையில் மிகவும் பிற்போக்கான நிலைமையிலுள்ள மக்களைப் பார்த்து எல்லாத் தியாகங்களும் செய்யும்படியாக சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க ஒத்துழைக்கும்படி அழைப்பது மிக்க ஆச்சரியமாக இருக்கிறது.

பல வருஷங்களாக கிராமங்களிலே குடிதண்ணீர் வசதி கூடக் கிடையாது. பெரும்பாலான கிராமங்களுக்கு சுகாதார வசதியை ஏராவது, செய்து கொடுத்து, குடிதண்ணீர் வசதியையும் செய்து கொடுத்திருந்தால் மக்கள் ஓரளவாவது சந்தோஷம் அடையக் காரணமாக இருந்திருக்க முடியும். சமுதாய நலத்திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் போன்றவைகள் எல்லாம் மிகவும் வளமான பகுதிகளில் தான் ஆரம்பிக்கப்படுகிறது. பெரும் பாலான கிராமங்களில் வசிக்கக் கூடிய மக்கள் உயிர்வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாததாகிய குடிதண்ணீர் வசதி கூடக் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் வரவுசெலவுத் திட்டத்தில் கணிசமான தொகை குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்தத் தொகையானது பூராவாகச் செலவழிக்கப்படுகிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். முன்னேக்காட்டிலும் அதிகக் கிணறுகள் வெட்டப்படவில்லை. அசாங்கம் இத்தறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மக்களிடத்தில் இருந்து வரி வாங்கக் கூடிய சர்க்கார் மக்களுடைய இன்றியமையாத தேவையான இதைச் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் இந்த ஆண்டு பருவ மழை சரியாகப் பெய்யாமல் போனதாலும், பூச்சிகளின் தொல்லையாலும் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டாலும் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று சொல்கிறார். அதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிற புள்ளிவிவரங்களைஞல் ஒத்துக்கொள்கிறோம். என்றாலும் கூட அப்படி உயர்ந்திருப்பதற்குக் காரணம் இரசாயன உரம், பொறுக்குவதை முதலிய வற்றை வழங்கினதன் காரணமாகத்தான் உற்பத்தி பெருகியிருக்கிறது. ஆனல் இந்த ஆண்டில் பொறுக்கு வதைப் பண்ணைகள் சிலவற்றைக் கைவிடும்படியாக வந்திருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டில் ஆரம்பித்து இருக்கிற 8 பண்ணைகளும் கூட தொடர்ந்து நடக்குமா? நல்ல விதைகள் அவற்றிலிருந்து

[Sri Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker] [10th March 1959

இடைக்குமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை? போதிய பலன் கிடைக்காததும், நிலம் வளமுள்ளதாக இல்லாததும், நீர்ப்பாசன வசதி இல்லாததும், அவைகள் மூடப்பட்டதற்கான காரணங்கள் என்று கனம் நிதி அமைச்சர் சொன்னார். ஒரு சாதாரண விவசாயி நிலத்தை வளமுடன் செய்யவில்லை என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கலாம் ஆனால் அரசாங்கத்தாரால் நடத்தப்படும் ஒரு விதைப் பண்ணையில் நில வளத்தை ஏற்படுத்த முடியவில்லை என்று சொல்வது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. விதைப் பண்ணைகளுக்காக நிலங்களை எடுத்துக் கொள்வதற்கு முன்பு அவைகளைத்தகுந்த முறையில் ஆராய்ந்திருந்தால், அவைகள் நல்ல நிலவளம் பொருந்தியவை தானு, நீர்ப்பாசன வசதிகள் உளளவை தானு என்றெல்லாம் ஆராய்ந்திருந்தால், அரசாங்கத்தார் மீண் விரயமாக இவ்வளவு ரூபாயைச் செலவழித்திருக்க வேண்டி யிருக்காது. அவ்வாறு ஆராய்ந்த பிறகு நிலங்களைத் தேர்ந்தெடுத்திருந்தால் இவ்வாறு அனுவசியமாகப் பணம் செலவழிக்க வேண்டியிருந்திருக்காது; அவ்வாறு செய்யாததால் பொறுக்கு விதைகள் இடைக்காமல் போனதோடு மக்களின் பணமும் விரயமாகியிருக்கிறது. பட்ஜெட் மதிப்பீட்டில் விதைப் பண்ணைகள் என்ற தலைப்பின் கீழ் 10 லட்ச ரூபாய் நில ஆர்ஜிதத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் "இனிமேல் நாங்கள் நிலங்களை வாங்கப் போவதில்லை, "சிலிங்" வந்த பிறகு உபரியாகக் கிடைக்கும் நிலங்களில் விதைப் பண்ணைகளை அமைக்கத் தீர்மானித்திருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார். நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். விதைப் பண்ணைகளுக்கு நிலங்கள் வாங்குவதாக இருந்தால், அவைகள் நீர்ப்பாசன வசதிகள் உள்ளனவாகவும் நில வளம் உள்ளனவாகவும் இருக்கின்றனவா என்பதையெல்லாம் கவனிப்பதுடன், அந்த வட்டாரத்தில் 6, 7 வருடங்களுக்கு முன் அவைகள் என்ன விலை மதிப்புள்ளனவாக இருந்தன என்பதையும் கவனித்து அந்த விலை மதிப்பை அனுசரித்தே அவைகளை சர்க்கார் வாங்கவேண்டும். அவைகளை, ஒரு வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட ரெயப் பத்திரங்களின் மதிப்பை அனுசரித்து வாங்கக்கூடாது; அவ்வாறு வாங்கினால் மக்களின் வரிப்பணம் வீணாக தனிப்பட்ட நபர்களுக்குக் கிடைத்ததாக ஆகும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சாலைகளைப் பொறுத்த அளவில், முக்கிய ஜில்லா போர்டு ரோடுகள் சர்க்காரின் நேரடிப் பராமரிப்பிற்குக் கொண்டுவரப் படும் என்று கனம் நிதி அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். இது மிகவும் சந்தோஷமான செய்தி தான்.

Sri A. V. P. ASAITHAMBI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை; இந்த மன்றம் நடப்பதற்கு வேண்டிய "கோரம்" எத்தனை பேர்? இங்கு இப்போது "கோரம்" குறைவாக இருப்பதாகத் தெரிகிறதே?

DEPUTY SPEAKER: 21 பேர் இருக்க வேண்டும். இங்கே இப்போது 21 பேர் இருக்கிறார்களா என்று பார்த்தீர்களா?

Sri A. V. P. ASAITHAMBI: 11 பேர் தான் இங்கே இப்போது இருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER: இல்லை 21 பேர் இருக்கிறார்கள்.

* **Sri THIRUMALAIMUTHU VEERASAKKAYA THIRUVENKADASAMI NAICKER:** பெரும்பாலான ஜில்லா போர்டு சாலைகள் பழுதுபார்க்கப் படுவதில்லை. என் தொகுதியாகிய வட மதுரையில் 4-5 வருடங்களுக்கு முன் சில பாலங்கள் பெருமழையினால் சீர்கேடடைந்தன. அந்தப் பாலங்களிலிருந்த சிமெண்டுக் குழாய்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. 4-5 வருடங்களுக்கு முன்பு வெள்ளத்தில் பாழடைந்த இந்தப் பாலங்கள், ஒரிரு மாதங்களுக்கு முன்பு, அந்தப் பகுதிகளில் கனம் முதல் அமைச்சர்

[Sri Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker]

10th March 1959]

சுற்றுப் பிரயாணம் செய்யப்போவதாக ஒரு அறிக்கை அங்கே வந்ததும், செப்பனிடப்பட்டன. கனம் அமைச்சர் அங்கே வருவதற்கு 4-5 நாட்களுக்கு முன், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சிமெண்டு குழாய்கள் முன்பு இருந்த இடத்திற்கே திரும்பவும் கொண்டுவந்துவைக்கப்பட்டு பாலங்கள் செப்பனிடப்பட்டு அங்கே மீண்டும் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன் கவனிக்கமுடியாத, கவனிக்க அக்கறை கொள்ளாத அதிகாரிகள் கனம் அமைச்சர் அங்கே வருகிறார் என்று தெரிந்தவுடன் இரண்டு-மூன்று நாட்களுக்குள் அந்தப் பாலங்களைச் செம்மைப் படுத்தி அங்கே போக்குவரத்து வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து, அதிகாரிகள் மந்திரிகளிடம் தாங்கள் பெயர் வாங்குவதற்காகவும் மந்திரிகளுக்கு நல்மைகள் செய்வதற்காகவும் தான் வேலை செய்கிறார்களே தவிர, மக்களுக்கு யாரிடமிருந்து வாங்கப்படும் வரிப் பணத்திலிருந்து அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அவர்களுக்கு —நல்மைகள் செய்வதற்காக வேலை செய்வதில்லை என்பது தெரிகிறது என் பதை இந்தச் சபைக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எல்லா முக்கிய ஜில்லா போர்டு ரோடுகளும் அரசாங்கத்தின் நேரடி மேற்பார்வைக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "எல்லா முக்கிய" என்ற அடைமொழிகளே பயன்படுத்திக்கொண்டு பாரபட்சம் காண்பிக்கக் கூடாது. இப்போது ஸ்ராம ரோடுகளில் சில விஸ்தீரணம் செய்வ தற்கு, நிலங்கள் ஆஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அவைகளில் இன்னும் வேலை ஆரம்பிக்கவில்லை ஆனல். அவைகளில் சிலவற்றில் மெட்டல் சரளைகள் குவித்தவைக்கப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் சர்க்காரின் நேரடி மேற் பார்வைக்கு வரவேண்டும். அவைகளை ஜில்லா போர்டு நிர்வாகத்திற்கே விட்டுவிடக்கூடாது என்று மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். என் தொகுதி யாகிய வட மதுரையில் நத்தத்திலிருந்து தெற்தரை போகும் பஸ் ரூட் இருக்கிறது. அந்தப் பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அங்கே பாலங்களே இல்லை. ரோடு மேடும் பள்ளமுமாக இருக்கிறது. அதைப்பழுதுபார்க்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் பலமுறை சொல்லப் பட்டிருந்தும் அது இன்னும் பழுதுபார்க்கப்படவில்லை. இந்த நிலையை இன்னும் நீடித்தால் பஸ் சொந்தக்காரர்கள் அங்கே பஸ்விடப் பயந்து, பஸ் ரூட்டுகள் "கான்ஸல்" செய்யப்படும் நிலமை ஏற்படக்கூடும். ஆகையால் அந்த பஸ்ரூட்டை செம்மைப்படுத்த வேண்டும் என்று அரசாங் கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பின்தங்கிய வகுப்பினர்களுக்கு கல்விச் சலுகைகள் அளிக் கப்படுகின்றன. இந்தச் சலுகைகள் ஜாதி அடிப்படையில் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முறையை நிறுத்தி இதை வருமான அடிப்படையில் கொடுத்தால் உரிய எழை மக்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கும்.

ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் கட்டப்படும் வீடுகள் மிகவும் குறைந்த செலவில் கட்டப்பட்டுகின்றன. 750 ரூபாய் செலவில் கட்டப்படும் அந்த வீடுகளல் பெரும்பாலானவை ஹரிஜனங்கள் குடியேறுவதற்கு லாயக்கான நிலையில் இல்லை. அந்த மாதிரியான வீடுகளை விட, அவர்கள் ஏற்கெனவே இருந்துவரும் வீடுகள் நல்ல வீடுகளாக இருக்கின்றன. அந்த மாதிரி யான விடுகளைக் கட்டிக் கொடுப்பதைக் காட்டிலும் அவர்கள் ஏற்கெனவே இருந்துவரும் இடங்களில் சுகாதார வசதிகளையும் இதர வசதிகளையும் செய்துகொடுத்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும். இந்த வீடுகளைக் கட்டும் வேலைகளை காண்டிராக்டர்களிடம் கொடுக்கும்போது இந்த மாதிரி யான ஊழல்கள் நடக்கின்றன. ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் இன் னும் அதிக ரூபாய் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்க வழி வகைகள் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாய நலத்திட்டங்கள்.

DEPUTY SPEAKER : உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. இப்போது கனம் அங்கத்தினர் ஸ்ரீ சதாசிவம் பேசலாம்.

[10th March 1959

11-30 p.m.

SRI S. SADASIVAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைக்கொண்டு வந்திருக்கும் கனம் நிதியமைச்சர் அவர்களுடைய பாராட்டியும், இந்தச் சமயத்தில் எனது பகுதியைப்பற்றி ஒரு சில குறிப்புகள் கொடுப்பதற்கு வாய்ப்பு தந்திருக்கும் உங்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பல ஆண்டுத் திட்டங்களுடைய பார்த்து எங்கிக் கிடந்த மக்களுக்கு இந்த ஆண்டு அறிக்கையைக் கண்டு அதில் எந்த விதமான வரியும் இல்லாததைக் கண்டும், அதேநேரத்தில் நல்ல முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்ட அவைகளுக்கு நல்ல முறையில் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதையும் கண்டு இந்த அறிக்கையை வரவேற்காமல் இருக்க முடியாது. சில ஆண்டுகளாக போடப்பட்டு வந்திருக்கும் வரிகள் காரணமாக, அதன் மூலம் முன்னேற்றத்திற்கு கொண்டு வரப் பட்டிருக்கும் திட்டங்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் தொகைகளைக் கொண்டும் நாம் முன்னேறுவதற்கு வழியில் சென்று கொண்டிருக்கிறோம். ஆகவே, நாம் முன்னேறுவதற்கு உதவிகரமாக அமைந்திருக்கும் இந்த அறிக்கையைக் கண்டு நான் மகிழ்கிறேன். இந்த ஆண்டு வந்திருக்கும் உபரித் தொகையைக்கொண்டு கடைநிலை ஊழியர்களுக்கு சம்பளக் கூடுதல் வழங்க உத்தேசித்திருப்பதும், இராம அதிகாரிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிக்க முன் வந்திருப்பதும் பாராட்டத் தக்கதேயாகும். அடுத்தபடியாக, இந்த ஆண்டு பருவமழை தவறியிருப்பதை பல புள்ளி விவரங்கள் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதில், எனது ஜில்லாவாகிய திருச்சி ஜில்லா முதல் இடம் பெற்றிருக்கிறது. எனது பிரதேசமாகிய திருச்சி ஜில்லாவிலுள்ள கரூர் தாலுகா பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதனை எங்கள் மாவட்ட தண்டல் நாயகம் அவர்கள் மூலம் எடுத்துச் சொல்லியும், நேரில் அவர்களை பல விடங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தும், ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம் மனுக்கள் கொடுத்தும் நாங்கள் எங்கள் முறையீடுகளைத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இது சம்பந்தமாக இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது கண்டு வருத்தப் படுகிறேன். இருந்தாலும் இதற்கு ஒரு பரிகாரமாக எங்கள் பிரதேசத்தை பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக விலைவாசிகள். விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் கையாண்டு வரும் முறைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே சமயத்தில் விவசாயிகளின் நிலைமையையும் நாம் உணர்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று விவசாய உற்பத்திக்கு மிகவும் இன்றியமையாதிருக்கும் பொருள்களின் விலைகளும் உயர்ந்து தான் இருக்கிறது. ஆக, இன்றிருக்கும் விவசாய உற்பத்திப்பொருள்களின் விலைவாசி உயர்வு விவசாயத்தை நல்ல முறையில் பெருக்குவதற்கு ஏற்றதாகயில்லை. ஆகவே இன்று உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முயலும் நாம், விவசாய உற்பத்திக்கு அவசியமாக இருக்கிற பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்தவேண்டும். இன்று விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு போதிய ஊதியம் கிடைக்காத காரணத்தினால் நகரப்புறங்களை நோக்கி வந்துவிடுகிறார்கள், அப்படி வருகிறவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, சிறுநில விவசாயிகள் கூட ஊதியக் குறைவு காரணமாக நகரப்புறங்களுக்கு வந்து விடுகிறார்கள். ஆகவே விவசாயம் செய்வதற்கு போதிய ஆட்கள் இப்பொழுது கிடைப்பதில்லை. அதோடு கூட, எங்கள் பிரதேசம் போன்ற வறண்ட பிரதேசங்களில் கேணிப்பாய்ச்சல்தான் முக்கியமான விவசாய சாதனமாக இருந்து வருகிறது. எங்கள் பிரதேசங்களில் போதிய அளவில் ஆட்கள் இல்லாததின் காரணமாகவும் மின்சாரம் போதிய அளவில் இல்லாத காரணத்தினாலும், அங்கு ஆயில் என்ஜின்களை வைத்து இறைத்து பாசனவசதி செய்து வந்தோம். ஆனால் சென்ற ஆண்டு நாம் டீஸல் ஆயிலுக்கு போட்ட வரி காரணமாகவும், இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் மேலும் அதற்கு விதிக்கப்பட இருக்கிற எண்ணை வரி காரணமாகவும் கணிசமாக டீஸல் எண்ணையின் விலை உயர்ந்ததின் காரணமாகவும் விவசாய உற்பத்தி பாதிக்கப்படிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தில் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது மத்திய அரசாங்கம் விவசாயத்திற்கு வேண்டிய டீஸல் ஆயிலுக்கு

10th March 1959] [Sri S. Sadasivam]

உள்ள வரியைக் குறைத்துக் கொடுக்கப்போவதாக, பத்திரிகையில் பார்த்தேன். சென்ற ஆண்டு நமது நிதியமைச்சர் அவர்கள் கூட விவசாயத்திற்கு வேண்டிய டீஸலிற்கு உள்ள வரியை குறைத்துக்கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் அப்படி ஒன்றும் செய்யப்படவில்லை. இனிமேலாவது அதற்கு வேண்டிய வழிவகைகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பருவ மழை தவறியிருந்தபோதிலும் விவசாய உற்பத்தி ஓரளவு உயர்ந்திருக்கிறது என்பதை இவரு கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் மூலம் நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இது மிக மிக உண்மையே. பருவநிலை பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட, ஆரம்ப காலத்தில் மழை சரியாக பெய்ததால் ஆங்காங்குள்ள விவசாயிகள் விவசாயத் துறையில் ஈடுபட்டார்கள். ஆனால் பின்னால் பருவ மழை தவறிவிட்டது. ஆனால் முன்பே விவசாயம் ஆரம்பித்ததின காரணமாக நிலப்பரப்பின் அளவு கூடுதலாக சேர்க்கப்பட்டிருந்தாலும் உற்பத்தியின் தரம் உயர்ந்திருக்கிறது. நாம் போடக்கூடிய திட்டங்கள் இரண்டு வகைகளாக இருக்கின்றன. ஒன்று, கைத்தொழில் வகையில் செய்யக்கூடியது, இன்னொன்று, விவசாயத் துறையில் செய்வது. கைத்தொழில் உற்பத்தி காரணமாக நாம் உடனடியாக பலன் பெற முடியும். ஆனால் விவசாயத் துறையில், நீர்ப்பாசன வசதிகள் போன்றவைகளினால் உடனடியாக நாம் பலன் அடைய முடியாது, என்பதை விவசாய பெருங்குடி மக்கள்தான் நன்கு அறிவார்கள். பாசனத் திட்டங்கள் அமைத்து, தண்ணீர் பாய்ச்சி, நிலம் பக்குவமான பிறகுதான் பயிரிட்டு பலன் பெற முடியும். அதற்கு பல வருடங்கள் பிடிக்கும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்பட்ட திட்டங்களின் பலனையும், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் முதல்பகுதியில் போடப்பட்ட திட்டங்கள் மூலமாகவும் இன்று நாம் ஓரளவு உற்பத்தியை அதிகமாக பெருக்குவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆக, அடுத்த ஆண்டுகளில் பருவ மழை தவறுமானும், நாம் போட்டிருக்கும் திட்டங்கள் பலன் தர ஆரம்பித்தால் நாம் நிச்சயமாக உற்பத்தியை இன்னும் கனிசமான அளவிற்குப் பெருக்க முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அத்துடன் சென்ற ஆண்டு உணவுப் பொருள்களின் விலை ஓரளவு கூடியிருந்ததன் காரணமாக விவசாயத்தை நவீன விஞ்ஞான முறைப்படியும், உரப் பொருள்களை தாராளமாக போட்டு உற்பத்தி செய்ததாலும் உற்பத்தியை ஓரளவு பெருக்க முடிந்தது. ஆகவே, உரங்கள் போன்ற உற்பத்தி பொருள்களின் விலை விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய முறையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அடுத்தபடியாக, விதைப் பண்ணைகளைப்பற்றி ஒரு வார்த்தை. விவசாய உற்பத்திக்கு விதைகள் மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே, விதைப் பண்ணைகளை நிறுவ திட்டமிட்டோம். ஆனால் அந்த விதைப் பண்ணைகள் சரியானபடி பலன் கொடுக்கவில்லை என்று தெரிந்தவுடன் அதை நிறுத்திக்கொண்டும், ஆனால் அதே நேரத்தில் மாற்றுத் திட்டங்களை கண்டு பிடித்து விதை உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டமிட்டிருப்பது கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். கிராமப்புறங்களில் மிக முக்கியமாக விளங்கிவருவது சமுதாய நல அபிவிருத்தித் திட்டமும், தேசிய விஸ்தரிப்புத் திட்டமுமாகும். இந்தத் திட்டங்கள் மூலம் மிகவும் வெற்றிகரமாக நடந்து வருவது, விவசாயப் பகுதிகளில்தான். ஆகவே, இத் திட்டப் பகுதிகளுள் நல்ல பகுதிகளை தேர்ந்தெடுத்து அங்குள்ள தலைசிறந்த விவசாயிகளை பொறுக்கி யெடுத்து, அங்குள்ள விவசாய அதிகாரிகளைக் கொண்டு அவர்களுக்கு சன்மானம் கொடுத்து நல்ல பொறுக்கு விதைகளை தயார் செய்வார்களேயானால் விதைப் பண்ணைகள் மூலம் தயாரிக்கும் விதைகளைவிட உயர்ந்த ரகமும், குறைந்த விலையிலும், போதிய அளவிலும் தயாரிக்க முடியும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே ஒரு சிலயிடங்களிலாவது இதை பரீட்சார்த்தமாக வைத்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, உர வகைகளை எடுத்துக்கொண்டால் விவசாயிகளுக்கு உரங்கள் வேண்டியது மிகவும் அவசியமாகும். சென்ற ஆண்டு விநியோகித்த ரசாயன உரத்தைவிட இந்த ஆண்டு அதிகமாக விநியோகிக்க ஏற்பாடு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. ரசாயன உரத்தை மட்டும் கொண்டு விவசாயத்தை பெருக்கிவிட முடியாது. இயற்கை

[Sri S. Sadasivam] [10th March 1959

உரங்களும் நமக்கு தேவையாக இருப்பதால் அதையும் தயாரிப்பதற்கு நகரசபைகளிலும், மேஜர் பஞ்சாயத்துக்களிலும் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய நாட்டிலே ஏராளமாக சிறிய பஞ்சாயத்துகள் இயங்கி வருகின்றன. அந்த பஞ்சாயத்து எல்லைகளுக்குள் ஏராளமாக பசுந் தழைகள் விளைகின்றன. கொழுஞ்சி, ஆவாரை, எருக்கலே போன்ற பசுந்தழைகள் புறம்போக்கு நிலங்களில் ஏராளமாக உற்பத்தியாகின்றன. இவைகளினுடைய பராமரிப்பு இப்பொழுது ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருந்துவருகிறது. அவர்கள் இதை சரியானபடி கவனிக்காமல் இருப்ப தினால் அவைகள் அழிக்கப்படுகின்றன. அதனால் விவசாயத்திற்கு எந்தவிதமான நன்மையும் இல்லாமல் போகிறது. ஆகவே, இந்த புறம்போக்கு நிலங்களிலுள்ள தழைகளை பராமரிக்கும் வேலையை கிராமப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்துவிட்டால் அவைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, விவசாயத்திற்கு பயன்படும். கம்போஸ்டு உரத்திற்கு வேண்டிய சாணி கிராமப்புறங்களில் அதிகமாக கிடைப்பதால் அதையும் பசுந்தழைகளையும் கொண்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்க கிராமங் களில் ஒரளவுக்கு பிரசாரம் செய்தால் நகர்ப்புறங்களில் உற்பத்தி செய்வதை விட அதிகமான கம்போஸ்ட் உரத்தை, பலமடங்கு தரமானதாக உற்பத்தி செய்ய முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நாம் பல புதிய திட்டங்களை போட்டு விவசாயி களுக்கு நல்ல முறையில் நீர்ப்பாசன வசதிகளை செய்துகொடுத்திருக் கிறோம். பரம்பிகுளத் திட்டத்தையும் நாம் தீட்டியிருக்கிறோம். என் னுடைய பகுதியைப் பொறுத்தவரையிலும், அமராவதி, பவானி ஆகிய இரண்டு திட்டங்களில் கடைப் பகுதியிலுள்ள எங்கள் தாலுகாவானது இதுவரையிலும் எற்படுத்தப்பட்ட எந்தத் திட்டத்தின்மூம் பயன் அடைந்ததாகக் காணப்படவில்லை. ஆனால் இப்பொழுது வரப்போகும் பரம்பிகுளத் திட்டத்தின்மூலம் எங்களுக்கு எதாவது ஒரு சில நன்மைகள் கிடைக்குமோ என்று எதிர்பார்த்திருந்த மக்கள், இந்த அறிக்கையில் கண்டபடி அந்தத் திட்டத்தினால் எங்கள் பகுதிக்கு யாதொரு பலனும் இல்லாதது கண்டு மிகவும் வருந்துவார்கள் என்பதை இந்த சமயத்தில் சொல்ல விரும்புகிறேன். இருந்தாலும், எங்கள் பகுதிக்காக ஒரு சில திடங்களை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். பவானி, அமராவதி திட்டங்களின் மூலம் பாய்ச்சப்படுகின்ற நிலங்களிலிருந்து வரும் கழிவு நீர் (வீவேஜ் வாடர்) அமராவதி, நொய்யல் ஆறுகளிலிதான் வந்து சேருகிறது. இந்தக் கழிவு நீரையாகிலும் இப்பொழுது வருக்கப்பட்டிருக்கும் புதிய திட்டங்களுக்குரிய பகுதிகளிலேயே பயன்படுத்தாமல் இமே உள்ள கரூர் தாலுகாவிற்கு, வரண்ட பிரதேசமான அந்தத் தாலுகாவுக்கு பயன்படும் வகையில் புதிய பல திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நொய்யலில் உங்காம்பாளையம் பக்கத்தில் ஒரு ரிஸர்வாயர் கட்டி அதிலே தண்ணீரை தேக்கி பாய்ச்சல் வசதி செய்துகொடுத்தால், சுமார் 10,000 எக்கருக்கு பாய்ச்ச முடியும். அந்தத் திட்டத்தை என்ஜினியர் இலாகாவினர் மிகவும் நிறமையாகவும், மிகவும் துரிதமாகவும் சர்வே செய்துகொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அதன் அருகிலுள்ள பவானி வாய்க்காலின் பாசன ஆதாரங் களிலிருந்து வருகின்ற கொரங்கன் பள்ள கழிவு நீரையும் அதற்கு மேல் சமீபத்தில் கொஞ்ச தூரத்திற்கு வெட்டி வாய்க்கால் மூலம் இந்த அணைத் திட்டத்தில் கொண்டுவந்து சேர்த்தோமானால் 15,000 முதல் 20,000 எக்ருக்கு கொஞ்சம் அதிகச் செலவிலே சுலபமாக பாய்ச்ச முடியும் என்று சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் மாமாமத்து இலாகா அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அவர்களே பார்த்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் இந்தத் திட்டங்களே எற்படுத்தி எங்களுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

10th March 1959] [Sri S. Sadasivam]

அமராவதியில் நாகப்பள்ளி என்ற இடத்தில் ஒருபழைய அணைக்கட்டு, உடைந்து போயிருந்தது. அது புராதன காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இப்பொழுது அந்த அணையினுல் பாசன வசதி எதுவும் இல்லாமல் இருக்கிறது. அந்த இடத்திலே அந்த அணையை புதுப்பித்துக் கட்டி பாசன ஆதாரங்கள் செய்துகொடுத்தால், எங்கள் பகுதியில் உள்ள விவசாயி களுக்கு அனுகூலமாக இருக்கும் என்பதை பல முறை கேட்டதை உத்தேசித்து எங்கள் ஜில்லா சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின்கீழ் இதை எடுத்து சர்வே செய்திருக்கிறார்கள். நல்ல உகந்த திட்டமாக உளது, ஆனல் அமராவதி ஆற்றின் நீர் நிலைமையை ஆராய்ந்து அதற்கு மேல்தான் இந்தத் திட்டத்தை எடுக்க முடியும் என்று நிறுத்திவைத்தி ருக்கிறார்கள். இந்த ஆண்டில் மழை இல்லாத காரணத்தினுல் அமரா வதியில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. ஆனல், சென்ற ஆண்டில் ரிஸர்வாயில்கூட ஏராளமான தண்ணீர் இருந்தது. முதலே போகம் சம்பாவுக்கு எந்த விதத்திலும் தடைஇல்லாமல் பாய்ந்தோடு, இரண்டாவது போகமும் பயிர் செய்யலாம் என்று அரசாங்கம் அறிக்கை விடுத்திருந்தார்கள். இவைகளை ஆராய்ந்து இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, கதர் திட்டத்தைப்பற்றி சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

* Sri B. K. LINGA GOWDER : Mr. Deputy Speaker, Sir, it is my pleasure and privilege to express my satisfaction over the Budget presented by our Hon. Minister for Finance. One of the laudable features of the Budget is the absence of any new taxation. The surplus Budget reflects the care and caution exercised by our Hon. Minister in the management of the financial affairs of our State. He deserves to be heartily congratulated on this. Those who carry with them an open mind and fairness in judgment, will certainly welcome the Budget. It is not in the best interests of the administration to pick holes and find small mistakes here and there and magnify them and criticise them. Our State has already made a name as the best administered State in the whole of India. This is due to the hard and honest work of our Ministers. May God give them more strength to guide the destiny of our State for many more years.

Sir, in this connection, I may be permitted to bring to the notice of the Government the urgent problems of my district. First of all there is the acute problem of soil erosion. The poor ryot has to fight the ravages of soil erosion year in and year out. Though certain soil conservation measures have been adopted to check it, the progress is very slow. The reason for this is that sufficient number of tractors is not available to cope with the demand. Of the 13 tractors allotted for the district, 11 tractors remain idle for want of spare parts. Even labour is not available for terracing the lands. Eighty per cent of them have been absorbed by the Kundah Scheme. So the Government must make some special arrangements either to get the spare parts manufactured in India or import them from abroad.

Then there is the rice problem.

[Sri B. K. Linga Gowder] [10th March 1959

(Mr. Speaker in the Chair.)

As you all know, Nilgiris depends for its requirements of rice on other districts. We always pay a higher price for rice than in any other district. It is therefore necessary that the Government should open large number of fair price shops and large stocks of rice should also be made available to last four months. This is an urgent need of the district and I would request Government to pay immediate attention to this.

Thirdly I wish to express to the House the difficulties experienced by the small tea cultivators, in the Nilgiris district. These growers who own 100 acres and less are able to manufacture only common tea, that is tea which is not exportable. These are sold internally and also locally to big Companies like the Brooke Bonds and Liptons. Whatever price these companies offer these small tea cultivators have to accept and therefore the companies offer very low prices as there is no other outlet for the tea. The prices are so ridiculously low that at times it is not even one-fourth of the price of the exportable tea. The reason is the small cultivators cannot afford to establish individually a modern factory equipped with new machinery. My suggestion is that the problem could be solved by having at least five modern factories with new machinery run on co-operative basis. The scheme would I understaand cost about Rs. 15 lakhs. I also understand that large amounts are available with the Tea Board and I therefore reqeust the Government to approach Tea Board and ask them to make the amount available for the purpose of establishing these factories on a co-operative basis.

There is another burden to these small growers. The Central Excise Duty on tea was enhanced from 2 naye paise to 10 naye paise some months ago, with the result that people have lost the incentive to produce more. Their difficulties were represented to the Central Government and I understand that they have given some relief but that is not adequate. So, I would request the Government to take up this matter with the Central Government and see that the relief asked for is granted so as to give the people the incentive to produce more.

I am glad to say that the potato seed farms in the Nilgiris district are working fairly well and a few additional farms and the present imported quantity of seeds would solve the improved potato seed problem.

I hail the proposal of the Government to start more multi-purpose societies to supply chemical fertilizers, improved seeds and agricultural implements. I suggest that the entire quantity of the chemical fertilizers should be made available to the ryots only through co-operative institutions. Private companies who are in this line are really exploiting the poor people and these chemical fertilizers must be made available to the ryots in time so that they may step up production.

10th March 1959] [Sri B. K. Linga Gowder]

Regarding industries, the Nilgiris district has no major industry. The proposal to start a Raw Film industry is still hanging fire. I understand that negotiations are still going on with the East German Republic for this purpose and I do not know when it is going to materialise. So, I request the Government to take up this matter urgently and see that it materialises very soon.

I have more than once suggested to this House that there is scope for setting up a Children Food Factory in the Nilgiris district. About 17,000 acres of pasture land are available in the Wenlock Downs. I understand that there is some negotiation with a Swiss firm regarding this matter and I want the Government to pursue it.

I understand that recently a Japanese Team visited the Nilgiris district to find out the possibility of locating a Rayon Pulp Factory. I am glad to say that raw materials like Blue Gum and bamboos are available in abundance and I request the Government to recommend the location of this factory in the Nilgiris district.

Lastly, I thank the Government for extending the educational facilities now enjoyed by the children of non-gazetted officers to the children of village officers also. Thank you, Sir.

* Sri M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, வரும் ஆண்டு நிதிநிலை அறிக்கை மிகவும் வரவேற்கத்தக்கதாய் அமைந்திருக்கிறது. அழகான சொற்களினாலோ, அன்பான உபசார வார்த்தைகளினாலோ இந்த ராஜ்ய மக்களின் பசியையும் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியாது. திட்டமிட்டுதான் நமது பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும். கழிந்த ஆண்டிலிருந்து இந்த ஆண்டுக்கு கூடுதலாகவே செலவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நமது பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள முடியும். திட்ட அளவைவிட நாலரைக் கோடி ரூபாய் கூடுதலாக செலவு செய்யப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்த ராஜ்யம் தன்னந்தனியாக நின்று தன்னுடைய பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள முடியாது. இந்த ராஜ்யம் பரந்த தேசமாக இருக்கின்ற பாரத தேசத்தின் ஓர் அங்கம் என்ற முறையில் இருக்கின்ற வரை பொருளாதார துறையில் நாம் பிரிந்துகொண்டு முன்னேற முடியாது. ஒன்றாக இருந்தால்தான் உதவுபடியாக இருக்கும். அதல்லாமல் யார் யார் எந்தெந்த சதி செய்தாலும் அதன் மூலம் இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை தடைப்படுத்த முடியாது. அதோடு வரும் ஆண்டு திட்டங்களுக்காக 35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நமக்கும் மத்திய சர்க்காருக்கும் இருக்கிற உறவு முறை ஒப்பந்த திருமணம் அல்ல, கட்டாய திருமணமும் அல்ல, அன்பின் காரணமாக வளர்ந்த ஒரு தொடர்பு, ஒரு இணைந்த குடும்பமாக திகழ்ந்து வருகிறது. இவ்விதம் இணைந்த குடும்பமாக வாழ்வு நடத்தி வருகின்ற ஒரு குடும்பத்தில் விஷத்தை கலப்பதற்கு ஓராயிரம் அண்ணன்மார்களும், ஒன்பதினுயிரம் தம்பிமார்களும் நினைத்தாலுங்கூட இந்த குடும்பத்தில் ஏற்பட்டிருக்கின்ற உறவு முறையை கெடுத்துவிட முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டின் பொருளாதாரம், அமெரிக்க நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார முன்னேற்றத்தைப்போல் உயர முடியவில்லைதான். அமெரிக்கா 170 வருடங்களாக சுதந்திரமாக முன்னேற்றமடைந்த ஒரு நாடு, அதே போல் தான் ரஷ்யாவின் வளர்ச்சி 42 வருடகால கட்டுண்ட வளர்ச்சி—கடுமையாக உழைத்து—war has bleased in disguise என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாற்ற மடைந்திருக்கும் நாடு. அந்த பயங்கரமுறையில் நம்முடையநாட்டை முன்னேற்றக்

மாக்க முடியாது. ஆனால் நமது நாட்டைப் பொறுத்தவரையில் கூட்டுறவு முறையில்தான் நமது விவசாயத்தை பெருக்கமுடியும் என்று ஒப்புக்கொண்டு அதற்கான வகைகளில் வேலைகளையும் செய்து வருகிறோம். அதே முறையில் தான் கமர்ஷியல் லேனிலும், இண்டஸ்டிரீஸ் லேனிலும் கூட்டுறவு முறையில் பல திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறோம். இந்த நாட்டில் கூட்டுறவு என் பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இயல்பாகவே நம் நாட்டில், கிராமங் களில் குடிமராமத்து வேலைகள் எல்லாம் கூட்டுறவு முறையில் வந்திருக் கின்றன. அதே போன்று நீர்ப்பாசன வேலைகளும் கூட்டுறவு முறையில் நடந்து வந்திருக்கின்றன. இப்போது விளைவு எடுப்பதில் தான் இந்த கூட்டுறவு முறையை விஸ்தரிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இதை தான் நம்முடைய நாட்டில் கொண்டுவரவேண்டியிருக்கிறது. நம் முடைய நாட்டில் இப்போது ஒருங்கிற விவசாயத்தைப் பொறுத்தமட்டில் வந்துகொண்டிருக்கும் சிந்திரி உரமும், வரவிருக்கும் நெய்வேலி உரமும் மாத்திரம் நம் தேவையை பூர்த்தி செய்யாது. இப்போது கிடைத்து வரும் உரவசதி போதுமானதாக இருக்கும் என்று நினைப்பதற்கில்லை. வரும் ஆண்டில் நமக்கு இயற்கையாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடிய 1,342 டன் தழை உரம் நமக்கு போதுமானதாக இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதோடு நாம் போதுமான அளவுக்கு இயற்கை உரத்தை தயார் செய்ய வேண்டியிருக்கிறது. இம்மாதிரி உரங் களை தயார் செய்வதில் பல நாடுகள் முன்னேறியிருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் ஐந்து வருடத்தில் 1,000 கோடி ரூபாய் பெறுமான சாணம் உரத்தையும் தயார் செய்ய முடியும் என்று தெரிகிறது. இப் போது இருக்கின்ற கோசாலைகளின் மூலம் நல்ல அளவில் இந்த உரத்தை தயார் செய்ய முடியும். அதோடு மேலும் அதிகமாக கோசாலைகளை ஏற்படுத்தி அதன் மூலம் உரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீர்ப்பாசனம் சம்பந்தமாக கோயம்புத்தூர் மற்றும் ஜில்லாக்களுக்கு மேல்திசையில் ஓடக்கூடிய நதிகளிலிருந்து நீர் பாசனம் கிடைப்பதற்காக வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று மதுரை, திருநெல்வேலி, ஜில்லாக்களுக்கு கேரள பிரதேசத்திற்குச் செல்லக் கூடிய தண்ணீரை திருப்பி விடுவதற்கு முயற்சி செய்யப்படும் என்று காணப்படும் வார்த்தைகள் மிகவும் ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருக்கி றது. அந்த முறையில் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை ஜில்லாக் களுக்கு பயன்படக் கூடிய வகையில் கீரியாறு, சோலையாறு, பம்பையாறு முதலிய நதிகளை பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் நல்ல விதமாக உற்பத்தியை பெருக்க முடியும் என்று நம்புகிறேன். அதோடு திருநெல்வேலி ஜில்லாவில் பல பகுதிகளுக்கும் பாபநாசம் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படுகிறது. இப்போது இந்த தேக்கம் மின்சார இலாகாவில் கீழ் இருந்து வருகிறது. இந்த தேக்கத்தி லிருந்து தண்ணீர் அதிகமாக தேவைப்படுகிற நேரத்தில் குறைவாகவும் குறைவாக தேவைப்படுகிற நேரத்தில் அதிகமாகவும் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த தேக்கத்திலிருந்து தண்ணீரை மின்சாரத் திற்கு உபயோகிப்பதுதான் முக்கியம் என்று கருதி இவ்விதம் நடத்தப் பட்டு வருகிறது என்று தெரிகிறது. இந்த நிலை மாறவேண்டுமானால் பாபநாசம் நீர் தேக்கம், இப்போது மின்சார இலாகாவிலிருப்பதை மாற்றி நீர்ப்பாசன இலாகாவின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சாத்தியமாகுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய
12 வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்த இனத்தில் இருக்கக்
noon. கூடிய குந்தா திட்டத்தின் மின்சாரம் ஒருபகுதி அக்டோபர் மாதத்தில் உபயோகத்திற்கு வரும் என்று அறிக்கையிலே காணப்படுகிறது. வருகிற சில காலத்திற்குள்ளாக பெரியாறு திட்டத்தின் 3-வது, 4-வது ரீச்சஸ் கூட (பகுதிகள்) கட்டி முடிக்கப்பட்டு மின்சாரம் மிகுந்த அளவுக்குக் கொடுக்கப்பட இருப்பதால் பாபநாச நீர்த்தேக்கத்தை நீர்ப்பாசன இலாகா விற்கு உரியதாக ஆக்குவதிலே என்ன தவறு இருக்கிறது என்று யோசிக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு பாபநாச நீர்தேக்கத் திட்டம் பாசனத் திற்காக விவசாயிகளுக்குப் பயன்படவேண்டுமென்று, அவர்களுக்கு அதிக அளவு தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று ஆரம்பத்திலே அரசாங்கத்தினால் வேறு இடத்தில் அணை கட்ட திட்டமிட்டது. இதை மின்சாரத்திற்கு உபயோகப்

10th March 1959] [Sri M. S. Selvarajan]

படுத்த வேண்டுமென்று இன்றைய தினம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிக அளவும் மின்சார உபயோகத்திற்கு வந்துகொண்டிருக்கிற நிலையில் விவசாயிகளுக்கு ஆரம்பத்தில் யாருக்காக இந்தத் திட்டத்தைப் போட்டோமோ அவர்களுக்குப் பூர்ண பலன் கிடைக்கக் கூடிய முறையில் தற்போதை அணையை இடம் மாற்றி அமைக்கும் சாத்திய வழி வகைகளைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

மணி முத்தாறு திட்டத்திற்கு வரும்போது இந்தத் திட்டத்தினால் பலன் அடையக் கூடியது என்று திட்டமிட்டிருக்கக் கூடிய 20,000 எக்கருக்கு மேல் ஒரு ஸெண்டுக்குக் கூட அவசரமாக பெட்டர்மெண்ட் டாக்ஸ் போடக் கூடாது. வேண்டுமானால் நீர் அதிகமாக இருந்தால், முதலில் பர்மிஷன் கொடுத்து, பர்மிஷன் மூலமாக பல ஆண்டுகளாக தண்ணீர் பாய்ச்ச அனுமதி கொடுத்துப் பார்த்து பிறகு பெட்டர்மெண்ட் டாக்ஸ் போடலாம். மணிமுத்தாறு திட்டத்திற்கு முன்பே தாம்பிரவருணியினால் பயனடையக் கூடிய நிலம் ஒரு லட்சம் எக்கராக உயர்ந்திருக்கிறது. புஞ்சை நஞ்சையாக மாறியிருக்கிறது. ஒரு போக நஞ்சை இரு போக நஞ்சையாக இரண்டு மடங்கு சாகுபடியாகிறது. மணிமுத்தாறு திட்டம் நிறைவேறியதும் தண்டத் தீர்வை நிவர்த்திக்கப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த போது 10 வருஷ காலம் கவனிக்க வேண்டுமென்று பதில் கொடுத்தார்கள். நிச்சயமாக எந்தக் காரணத்தினாலும் புஞ்சை நிலத்திற்கு (விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை) நஞ்சை நிலத்திற்கு விதிக்கப்படும் தீர்வைக்கு மேற்படாதவாறு, பார்த்துக்கொள்ள வேண்டும். தண்டத் தீர்வை நிவர்த்தியை காருண்யத்தோடு கவனிக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் திட்ட வருஷத்தில் 14 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. வட்டிக்கு மாத்திரம் 4 கோடி 60 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 சதவிகிதத்திற்குக் கட்டுப்படியாகாத திட்டமாக இருக்கிறது என்று பல திட்டங்களை ஒப்போது விட்டு விடுவதால் வட்டி வீதத்தைக் குறைத்தால் தான் இந்த ராஜ்யம் பூராவிலும் மின்சாரத்தைப் பரப்ப முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனக் காலனிகளுக்கு மின்னிணைப்புக்கு ஹரிஜன நல நிதியிலிருந்து மானியமளிப்பதுபோலே இந்த வருஷத்திலாவது அல்லது வருகிற வருஷத்திலாவது மீனவர் நிதி இலாகா நிதியைப் பயன்படுத்தி கடலோரத்தை அடுத்துள்ள மீனவர் பகுதி மக்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும்.

ரஸ்தாக்கள் அமைப்பதிலே பெரிய ரஸ்தாக்களை ஜில்லா போர்டு, பஞ்சாயத்து முதலியவைகள் அமைக்கின்றன. இணைப்பு ரஸ்தாக்களை அமைப்பதிலே பல கஷ்டங்கள் இருப்பதால், கடலிலிருந்து சரக்குகளை கொண்டு போக இணைப்பு ரஸ்தாக்களை அமைப்பதிலே மீனவர் இலாகா முழுப் பொறுப்பு எடுத்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

நம் தொழில் இலாகா சமீபகாலமாகத்தான் கவர்ச்சியுடன் இயங்கிவருகிறது. எண்ணெய் பொறுத்த மட்டில், வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், அங்கெல்லாம் அவர்களுக்கு நல்ல விதமாக கடன் கொடுத்து உதவி செய்து தொழில் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இலங்கையிலிருந்து வந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஆயிரக் கணக்கான மக்களுக்கு இது போன்ற வசதிகளைச் கொடுத்து, தொழிலில் ஈடுபடுத்த அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டுக்குப் பல வகைகளில் எடுத்துக் காட்டாக ஜப்பான் நாட்டிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. குடிசைத் தொழில் இல்லாவிட்டாலும், ஸ்மால் இன்டஸ்ட்ரீஸைப் பொறுத்த மட்டில் நம் ராஜ்ய அளவிலாவது, தேசிய அளவிலாவது ஒரு தூதுக்குழு சென்று தொழில் முறைகளைக் கற்று பயன்படுத்தினால் நல்லது, அதை கவனிக்க

[Sri M. S. Selvarajan] [10th March 1959

வேண்டும் என்று நினைக்கிறேன். கூட்டுறவு முறையில் நடத்தப்படுகிற பால் பண்ணைகளுக்கு உதவி, உபகரணங்கள் கொடுப்பது போல, தனிப் பட்டவர்கள் வைத்து நடத்தும் பால்பண்ணை தேனீ வளர்ப்புக்கு உதவி கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

நம் ராஜ்யம் முழுவதிலும் இலங்கையிலிருந்து வந்த இந்தியர்களில் பாதிப்பேர் திருச்செந்தூர் தாலுகாவிலும் நாங்குனேரி தாலுகாவிலும் இருக்கிறார்கள். கிண்டி இதர இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் மிக அழகாக நடக்கின்றன என்று திரு. மனுபாய் ஷா அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு திருச்செந்தூர் வந்திருந்தார்கள். தொழில் துறையில் இந்த அளவு வர்ணிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிற ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை 25 யூனிட்டுகளுடன் இலங்கையிலிருந்து நாடு திரும்பியிருக்கும் மக்களுக்காக ஸ்பெஷலாக அனுமதியளிப்பதாக வாக்களித்தார். இலங்கையிலிருந்து திரும்பி கஷ்டப்படுகிற மக்களுக்கு உதவியாக இருப்பதற்கு வேண்டிய தொழில் வாய்ப்புக் கொடுக்கக் கூடிய அளவில் ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டைக் கட்ட அனுமதி பெற்று கட்டிக்கொடுத்தால் நல்லது.

நமது பாரத பிரதமர் அவர்கள் கிராமந்தோறும் வைத்திய வசதி பெருக வேண்டுமென்று சொல்லி வைத்தியக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவுடன் அவர்கள் 4 அல்லது 5 வருஷங்கள் கிராமங்களில் வேலைக்கு அமர்த்தப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதிலே ஒரு விளக்கம் தேவை என்று நான் நினைக்கிறேன். கிராம மக்களின் உயிரின் மீது பரீட்சை செய்யும் அளவுக்கு, அவர்களுடைய உயிரைப் பணயம் வைக்கக் கூடிய அளவுக்கு அவர்களை கிராமத்தில் வேலை செய்யவேண்டுமென்றில்லாமல், ஜில்லாவில் தலைமை ஆஸ்பத்திரியில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டு ஆண்டுகள் பயிற்சிக்கு இடம் அளித்துப் பிறகு அவர்களை கிராமங்களில் போடவேண்டும். இந்த அளவுக்குப் புதிய வைத்திய முறையில் நம்பிக்கை இருக்கிறது என்று இருந்தாலும், சித்தம், ஆயுர்வேதம், யுனானி போன்ற வைத்தியங்களில் கூட நம்பிக்கை வைத்து கிராமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

ஹரிஜன இலாகாவிற்கு ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு இந்த ஆண்டு 28 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 28 லட்சம் ரூபாய் போதுமென்று நான் நினைக்கவில்லை. இப்போது ஒரு வீட்டிற்கு 750 ரூபாய் என்றிருப்பதை 1,000 ரூபாய் என்று வைத்தால்தான் குறைந்த பட்ச அளவுக்கு தேவைகளைப் பூர்த்து செய்யக் கூடியதாக இருக்கும். அந்த அளவுக்கு அதிகப்படுத்திக் கொடுக்கலாம். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெவின்யு இலாகாவிலே இன்னும் பழைய செட்டில்மென்டே இருக்கிறது. எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டுள்ள போதிலும் புதிதாக செட்டில்மென்ட் செய்யப்படவில்லை. எல்லாவித பிரச்னைகளுக்கும் இதுதான் பிரதானமாக இருக்கிறது. இனாம் நிலத்தை சர்வே செய்வதிலே சுணக்கம் இருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் நிலத்தை சர்வே செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யவேண்டுமென்பதை அரசாங்கம் உணர்வார்கள் என்று நினைக்கிறேன்.

இன்று எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றினாலும் கிராமத்தில், இந்த ராஜ்யத்திலிருக்கும் 75,000 குக்கிராமங்கள் முழுவதிலும் குறைந்த பட்சம் குடி தண்ணீர் வசதி இல்லாத கிராமங்கள் இல்லை என்ற நிலை ஏற்பட வருகின்ற வருஷத்திலாவது வேண்டுவன செய்ய வேண்டும். இதற்கு 10 ஆண்டு காலம் தேவை என்று நான் நினைக்கவில்லை.

கிராம அதிகாரிகளுக்கு என்.ஜி.ஒ.க்களுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகையைக் கொடுப்பது மிகவும் வரவேற்கத் தக்கது என்றாலும் கிராம அதிகாரிகளின் பிரச்னை என்று தீருகின்றதோ அன்றுதான் நாட்டின் சுபீட்சத்தை உணர முடியும். நாட்டின் வளர்ச்சியைப் பற்றி, நாட்டின்

10th March 1959] [Sri M. S. Selvarajan]

நலத்தைப் பற்றி தெரிந்து கொள்ளக் கூடிய இடம், மக்கள் கண்கூடாக புரிந்து கொள்ளக் கூடிய இடம் தாலூக்கா ஆபீஸ் போன்றவைகள்தான். அங்கே இருக்கின்ற மேஜைகளெல்லாம் வாய் திறந்து பேசக் கூடாது. வாயை மூடிக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். கிராம அதிகாரிகளிடத்தில் எந்த மாற்றம் காண்கிறோம், அவர்களுடைய நிலையை எந்த அளவுக்கு உயர்த்துகிறோம் என்பதில்தான் நாட்டின் சுபீட்சம் இருக்கிறது.

வரும் ஆண்டில் 35 லட்சம் ரூபாய் லோக்கல் டெவலப்மெண்டு திட்டத்திற்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வராத பகுதிகளுக்கு லோகல் டெவலப்மெண்ட் என்பது ஒரு மாற்று மருந்தாக வேலை செய்கிறது. இதற்கு 35 லட்சம் ரூபாய் போதும் என்று நான் நினைக்கவில்லை. சென்ற வருஷம் போட்ட திட்டங்களுக்குத்தான் போதுமானதாக இருக்கும். மேலும் இந்தத் திட்டத்திற்கு பணம் ஒதுக்க வேண்டும்.

தேசிய அபிவிருத்தித் திட்டம் பற்றி ஒரு வேண்டுகோள். சட்ட சபை தொகுதிகள் எல்லாவற்றிற்கும் பரவலாக இருக்கக் கூடிய முறையில் இந்த தேசிய அபிவிருத்தித்திட்டத்தை அமைத்தால் பயன் பரவலாகக் கிடைத்து, பூர்ணமாகத் தொடர்ந்து மக்கள் அனுபவிக்க முடியும், அதற்குப் பரவலாக இருக்க ஒரு வழி அமைத்துக் கொடுத்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

சிறு சேமிப்பு நிதி மத்திய சர்க்காருக்கு போய் 3 கோடி ரூபாய் நமக்கு இப்போது வந்திருக்கிறது. சிறு சேமிப்பைப் பொறுத்த மட்டில் நாமே இந்தப் பணத்தை நேராக வருவித்துக் கொள்ளலாம். ஆகையால் இந்தத் திட்டத்தை நாமே நடத்தலாம் என்பது எனனுடைய பணிவான கருத்து. திராவிடம் என்ற தீராத விஷம் தீண்டாமல் பாதுகாக்குமிது.

THE HON. SRI C. SUBRAMANIAM: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விவாதம், 76 மெம்பர்கள் அதிலே பங்கெடுத்துக்கொண்டு நடைபெற்றிருக்கிறது. சென்ற ஆண்டைவிட குறைவான எண்ணிக்கையாக இருந்தாலும்கூட, ஒவ்வொரு அங்கத்தினரும் அதிகமான நேரம் பேசுவதற்கான வாய்ப்பு இடைத்திருந்தது. அத்துடன் பல அங்கத்தினர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களுக்கு மறுப்புச் சொல்கிற முறையிலே புள்ளிவிவரங்களைப்பற்றி யோசனை செய்ய வேண்டிய வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைத்தது மிகவும் வரவேற்கத்தக்கது என்று நான் நினைக்கிறேன். அந்தப் புள்ளி விவரங்களைத் தவருக உபயோகப்படுத்தினாலும்கூட, முதலாவது தவருக உபயோகப்படுத்தித்தான் பிறகு சரியாக உபயோகப்படுத்த முடியும் என்று கருதுகிறேன். 12–19 p.m.

அதிலே பலவிதமான தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. எனென்றால் புள்ளி விவரங்கள் தயாரிப்பதிலே பல நுணுக்கங்கள் இருக்கின்றன என்பதை நாம் தெரிந்திருந்தால்தான் அந்தப் புள்ளிவிவரங்களிலே இருக்கும் மாறுதலேயும், ஏன் அந்த மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதையும் நாம் ஓரளவு புரிந்துகொள்ள முடியும். நம்முடைய பட்ஜெட்டிலே இருக்கும் புள்ளி விவரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். முதலிலே "எஸ்டிமேட்" என்று ஒரு வருஷத்திற்குக் கொடுகின்றோம். அதற்குப் பிறகு "ரிவைஸ்ட் எஸ்டிமேட்" என்று கொடுக்கின்றோம். கடைசியில் "பைனல் அக்கவுண்ட்ஸ்" என்று கொடுக்கின்றோம். ஒரு வருஷத்தைப் பொறுத்த மட்டிலே நமக்கு மூன்று புள்ளி விவரங்கள் கிடைக்க இருக்கின்றன. இவைகளை வைத்துக்கொண்டுதான் வருஷா வருஷம் பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது. ஆனால், "இது எதோ மாறுட்டம் மாதிரி இருக்கிறது; புள்ளி விவரங்களிலே நம்பிக்கை வைக்க முடியாது" என்று சொன்னால் அது சரியான கருத்து என்று எடுத்துக் கொள்ள முடியாது.

[Sri C. Subramaniam] [10th March 1959

அதே மாதிரிதான் புள்ளிவிவரங்களைப்பற்றி, அதிலும் முக்கியமாக மொத்த விலையைப்பற்றி, வாழ்ககைக் குறியீட்டு எண்ணைப்பற்றியெல்லாம் என்னுடைய சகா, கனம் திரு. வெங்கடராமன் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். அந்த மொத்த விலையிலும் கூட பல்வேறு பொருள்களுக்கு தனித் தனியாக விலை கொடுத்திருக்கிறார்கள். உணவுத் தானியத்திற்கு மொத்த விலை, "இண்டஸ்ட்ரியல் ரா மெட்டீரியல்ஸ்" என்று தனியாக விலை, "மானுபாக்சர்ட் குட்ஸ்" என்று தனியாக விலை என்று அப்படி எல்லாவற்றுக்கும் சேர்த்து மொத்த விலை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் எல்லாப் பண்டங்களுக்கும் இருக்கும் மொத்த விலை கொடுத்திருக்கிறது. அப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கும் அந்த எண்களை எடுத்துக்கொண்டு விவாதம் நடத்தியிருக்கிறோம். மொத்த தானிய விலையோடு ஒத்திட்டுப் பார்ப்போமானால் ஒன்றும் திட்டம் ஒத்து வராது. இந்த நுணுக்கங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தால்தான் என் மாறுதல் ஏற்படுகிறது என்பதை தெரிந்துகொள்ள முடியும்.

அதே மாதிரி எடைக்கணக்கில் சிலவற்றைக் கொடுக்கிறோம்; அளக்கின்ற அளவைக் கணக்கில் வேறு சிலவற்றைக் கொடுக்கிறோம். அதிலுள்ள மாறுதலைத் தெரிந்துகொண்டால்தான், அதிலே ஒன்றுக்கொன்று நாம் சீர்தூக்கிப் பார்க்க முடியும்.

உதாரணமாக, கனம் அங்கத்தினர் அண்ணுமலை அவர்கள், "நெல்லிலே இருந்து எப்படி மூன்றில் இரண்டு பங்கு அரிசி கிடைக்கும்? நெல்லை அறைத்தால் பாதியாய் விடுகிறது" என்று சொன்னார்கள். படி அளவு பார்த்தால் பாதிதான் வரும். எடைக் கணக்கில் பார்க்கும்போது, அரிசிதான் முக்கியமாக எடை உள்ளது, மூன்றிலிரண்டு பங்கு அரிசி வரும் என்று எல்லோரும் சுலபமாக ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். இதை மேலாகப் பார்த்தால் எமாற்றுவதற்குக் கணக்குக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் வந்துவிடும் என்று நாம் பார்க்கிறோம். ஆகவே, புள்ளிவிவரங்களைக் கையாளுவதிலே நாம் எந்த எந்த இனத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டால்தான் அதிலே என்ன மாறுதல் இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அதிலே குற்றம் குறை இருந்தால் அதை எடுத்துக் காட்டலாம். புள்ளி விவரங்கள் முழுதுமே வேத வாக்கியம் என்று நான் சொல்லவில்லை. வேதவாக்கியத்தைக் கூட இப்பொழுது நம்புவது இல்லை. அப்படியிருக்கும் போது, இதிலே இருப்பதெல்லாம் அப்படியே சரியானது என்று யாரும் சொல்ல வரமாட்டார்கள். அதிலே சில தவறுகள் இருக்கலாம். உண்மையான தவறு இருந்து, அதை எடுத்துக் காட்டும்போது, அதை ஏற்றுக் கொள்ளவேண்டியதாகத் தான் இருக்கும்.

அதுமாதிரி, எத்தனை எக்காரக்களில் நெல் விளைக்கப்பட்டது, அதிலே மிருந்து உற்பத்தியானது எவ்வளவு என்பதுபற்றி மாறுதலான புள்ளி விவரங்கள் கொடுத்திருப்பதாக எடுத்துச் சொல்லி, அதை எப்படி நம்புவது என்று கேட்டார்கள். இதிலே மூன்று விதம் இருக்கிறது. அப்பொழுது இருக்கும் பருவ நிலையை வைத்துக்கொண்டு இவ்வளவு விதைக்கப்படலாம், இவ்வளவு உற்பத்தியாகலாம் என்று "Preliminary forecast" என்று முதலில் கொடுக்கிறார்கள். அதற்குப் பிற்பாடு "Preliminary account" என்று வருகிறது. அதற்கு பிற்பாடு "Preliminary final" என்றும், கடைசியாக "Final Final" என்று வருகிறது. சில இடங்களிலே கொஞ்சம் பருவ நிலை தவறிப் போனால் அந்த நேரத்தில் விதைத்து இருக்கமாட்டார்கள். இரண்டுமாதம் கழித்து விதைப்பார்கள். அது பின்னால்தான் கணக்கில் வந்து சேர வேண்டியதாக இருக்கிறது. அதிலும் முக்கியமாக விவசாயத் துறையிலே பல புள்ளி விவரங்கள் கொடுக்கும்போது பல மாறுதல்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அதை வைத்துக்கொண்டு, "புள்ளி விவரங்களை ஒத்துக் கொள்ளத் தயாராயில்லை; எமாற்றுவதற்காக கொடுக்கப்பட்டிருக்கின்றன" என்று சொல்லுவார்களானால், அதைப்பற்றி என்ன சொல்வது? அந்தப் புள்ளி விவரங்களை அந்த முறையிலேதான் தயார் செய்யமுடியும்.

10th March 1959] [Sri C. Subramaniam]

1957-58க்கு கொடுக்கப்பட்ட "Preliminary final accounts" ஐப்பற்றி சொல்கிறார்கள். இது அதிலே மாற்றியமைக்கவேண்டுமென்றால், இன்னும் இரண்டு ஜில்லாக்களிலிருந்து வந்துசேரவேண்டியதால், அடுத்த ஆண்டு வரும்போது போன வருஷம் கொடுத்ததைவிட மேலும் அதிகமாகக்கொடுத்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது. அவ்வப்போது எந்த முறையிலே இந்தப் புள்ளிவிவரங்களைத் தயாரிக்கிறோமோ அந்த அடிப்படையில்தான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சேகரித்துக் கொடுக்கின்றார்கள். நாம் இன்றைக்குப் படிக்கும்போது இன்றைக்கு எந்தப் புள்ளிவிவரங்களைக் கடைசியாக வைத்திருக்கிறோமோ அதை சபை முன்னால் வைத்து, அந்த அடிப்படையிலே விஷயங்களை எடுத்துச் சொல்கிறோம். இதை மனதில் அவர்கள் வைத்துக்கொண்டால், இதிலே எற்படும் பல்வேறு மாறுதல்கள் ஏதோ அங்கத்தினர்களையும் சபையையும் ஏமாற்றுவதற்காக அல்ல, புள்ளிவிவரங்களைத் தயாரிக்கிற முறையிலே ஏற்படுகிறவை என்பதை ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆனால், விவசாயத் துறையிலே அதையெல்லாம் ஒருபுறம் வைத்து விடுங்கள். ஒதுக்கிவைத்ததுவிட்டு, இன்றைக்கு விவசாயத் துறையிலே முன்பு இருந்ததைவிட அதிகமான உற்பத்தி ஏற்பட்டிருக்கிறதா, இல்லையா என்று சொன்னால், ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கும் குடியானவர்களைக் கேட்டால் ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்வார்கள், முன்னைவிட இப் பொழுது அதிகமாக உற்பத்தி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வார்கள். அதற்குப் புள்ளிவிவரங்கள் கொடுக்கும் முறையிலே, இந்த முறையிலே நாம் முன்னேறிக்கொண்டு வருகிறோம் என்று காட்டும் முறையிலேதான் புள்ளிவிவரங்கள் அமைந்திருக்கின்றன. 1,300 பவுண்டு என்றால், சரியாக அத்தனை பவுண்டுதான் அதற்குமேல் ஒரு ராத்தல் கிடையாது என்று சொல்ல முடியாது; கொஞ்சம் ஏற்றத்தாழ்வு இருக்கலாம். ஆனால், எந்தத் திசையை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதை ஓரளவு காட்டக்கூடிய முறையிலே புள்ளிவிவரங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமேயொழிய, முழுக்க முழுக்க இதுதான் கடைசி வார்த்தை, என்று புள்ளிவிவரங்களைப்பற்றி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆகையால், இன்றைக்குப் பல புள்ளிவிவரங்களை சபை முன்னால் வைக்க முயற்சி செய்யப்பட்டதென்றால், எந்தத் திசையிலே நாம் சென்றுகொண்டிருக்கிறோம்—பிற்போக்காகப் போய்க்கொண்டிருக்கிறோமா, நம்முடைய பொருளாதார நிலை கொம்பசீர்க்குலைந்திருக்கிறதா, அல்லது கொஞ்சத்திற்குக் கொஞ்சம் சீர்ப்பட்டு வருகிறதா என்று எடுத்தக் காட்டும் முறையிலே புள்ளிவிவரங்களை உபயோகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன் இந்த விவாதத்திலே பேசும்போது, திரு. அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள்—"அரசியல சட்டதிருத்தைய ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்கின்றீர்களே, அது எந்த முறையிலே வேண்டியதாக இருக்கிறது, வேண்டியபோது நாங்கள் ஒத்துழைப்பு கொடுக்கவில்லையா?" என்றெல்லாம் பேசினார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் நான் எந்த அளவு ஒத்துழைப்பு வேண்டுமென்று விரும்புவது—இப் பொழுது அவர்களுக்கு இருக்கும் கொள்கைகளையெல்லாம் விட்டுவிட்டு, காங்கிரஸினுடைய கொள்கை முழுவதையும் ஏற்றுக்கொண்டு, எல்லா விஷயங்களிலும் வந்து ஒன்றுக கலந்துகொள்ள வேண்டும் என்று நான் கூப்பிடவில்லை. அவரவர்களுக்கு எற்பட்ட கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கை தவறு என்று உணர்ந்து அவர்கள் மாற்றிக்கொள்ளும் வரையிலே அந்தக் கொள்கையை விட்டுவிடவேண்டும் என்று சொல்வதற்கு எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அவரவர்கள் செய்வது தவறு, சரியா என்பதைப்பற்றி முடிவு செய்யவேண்டிய பொறுப்பு, உரிமை அவரவர்களுக்கு விடப்பட்டிருக்கிறது. ஆகையால், அவர்கள் கொள்கையை விட்டுகொடுக்கவேண்டும் என்று சொல்வதற்காக இந்த ஒத்துழைப்பைக் கோரவில்லை. ஆனால், பல விஷயங்கள் இருக்கின்றன. அந்தக் கொள்கை ஒருபுறமிருக்க, பல முக்கியமான திட்டங்களை நிறைவேற்றுவதிலே மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. அப்பேர்ப்பட்ட திட்டங்

[Sri C. Subramaniam] [10th March 1959

கீளையாவது மாறுபட்ட கருத்துக்கள் இல்லாத அளவிலே நாம் நிறைவேற்ற ஒத்துழைக்க முடியுமா என்பதைத்தான் நாம் முக்கியமாக யோசீன செய்யவேண்டியதாக இருக்கிறது. பல திட்டங்கள் இங்கு வந்து, விவாதித்து, முடிவு செய்யப்படுகின்றன. மக்கள் ஒத்துழைத்து, மக்களால் நிறைவேற்றப்படும்போதுதான் அவை பலன் எற்படக்கூடியதாக அமையும். மக்களுடைய சக்தியைத் திரட்டி, மக்கள் எல்லோரும் திட்டங்கீள நல்ல முறையில் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலீயை எற்படுத்தும்போதுதான் திட்டத்தில் வெற்றி காண முடியும். ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்கீளப்பற்றி கூட வெளியிலே சென்று, "இந்தத் திட்டம் எதற்குமே பிரயோஜனம் இல்லீ, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதினுலே பலன் எற்படாது" என்று மக்களிடத்திலே பேசும்போது, அவர்கள் மனதிலே குழப்பமான நிலீமை எற்படுகிறது. பாமர மக்களிடம் பேச்சு வன்மை உள்ளவர்கள் ஒருவித மாகப் பேசினுல், "இவர் பேசுவதும் சரியாகத்தான் இருக்கிறது" என்று நம்பிவிடுகிறார்கள். இன்னொரு கட்சி இன்னொரு விதமாகப் பேசினுல், "இதுவும் சரியாகத்தான் இருக்கும்போல் இருக்கிறது" என்று மக்கள் நீனைக்கிறார்கள். அப்படியெல்லாம் அவர்கள் மனதிலே குழப்பம் எற்பட்டு எந்த முறையிலே நாம் இயங்கவேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்ய முடியாத நிலீமை எற்பட்டுவிடுகிறது என்பதைப் பல இடங்களில் பார்க்கிறோம். ஆகையால், எந்த எந்தத் திட்டங்கீள நிறைவேற்றினுலும் சரி, அந்தத் திட்ட அளவுக்காவது எழை எளிய மக்கள் ஒத்துழைக்கும்படியாகவும் அவர்களிடத்திலே குழப்பம் இல்லாத அளவுக்கும் பிரசாரம் வைத்துக்கொள்ளலாகாதா என்பதை நாம் யோசித்துப் பார்க்கலாம். இது தான் உண்மையான ஒத்துழைப்பு. பேச்சு அளவுக்கு ஒத்துக்கொள்வது என்றல் சுலபமாக ஒத்துக்கொண்டுவிடலாம். பத்து பேர் பேசும்போது ஒத்துக்கொண்டுவிட்டு, வெளியிலே சென்று வேறு விதமாகப் பிரசாரம் செய்வது—நம் கட்சி முன்னேறவேண்டுமென்பதற்காக,—அதற்கு இப்போது ஆட்சியிலே இருக்கும் கட்சியைக் குறை கூறினுல்தான் நம்முடைய கட்சி வனுப்பெறமுடியும் என்பதற்காக, நாம் ஒத்துக்கொண்டுவிட்ட திட்டங்கீளப் பற்றிக்கூட மக்களிடத்தில் குழப்பமான முறையிலே பிரசாரம் செய்யும்போதுதான் ஒத்துழைப்புக் குறைவு என்று நான் கருதுகிறேன்.

அதே சமயத்தில் குற்றங்கீள எடுத்துச் சொல்லும்போது சரியான குற்றங்கீள எடுத்துச் சொல்ல வேண்டும். சரியான குற்றங்கீள எடுத்துச் சொன்னுல் அதை எற்றுக்கொள்ளலாம். அதுதான் நல்ல ஒத்துழைப்பு. அதுதான் உண்மையான ஒத்துழைப்பு. அப்படி இல்லாமல், சரியான குற்றங்கீள எடுத்துச் சொல்லாமல் இருந்தால் அது சரியான ஒத்துழைப்பு அல்ல, அது ஐந்தாம் படை வேலீ என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையான குற்றங்கீள எடுத்துச்சொல்ல வேண்டியதுதான் முக்கியம். அதுதான் எதிர் கட்சியினுடைய கடமை. குற்றங்கள் செய்திருந்தால் அதை யார் வேண்டுமானுலும் எடுத்துச்சொல்லலாம். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அதை எடுத்துச் சொல்லலாம். இது கட்சி பிரச்னை அல்ல. தவருகீள யார் எடுத்துச் சொன்னுலும் அதை திருத்திக் கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம். அந்த முறையில்தான் இங்கே வாதங்கள் நடைபெற வேண்டும். அந்த முறையில்தான் விவாதம் செய்ய வேண்டுமே தவிர உண்மையான குற்றங்கீள எடுத்துச்சொல்லாமல் எல்லாவற்றிற்கும் குறைகீளச் சொல்லிக்கொண்டே இருப்பது என்பது சரியல்ல. இப்படி எல்லாவற்றிற்கும் குறை சொல்லிக்கொண்டே இருந்தால் உண்மையான குற்றங்கீள எடுத்துச் சொல்லும்போதும் அதை நம்ப முடியாமல் இருக்கிறது. ஏனென்றல் இவர்களுக்கு இதுதான் வேலீ சதா குற்றம்தான் சொல்லிக்கொண்டிருப்பார்கள் அதனுல் இப்பொழுது சொல்லப்படும், அதாவது உண்மையாகச் சொல்லப்படும் குற்றமும் சரியான குற்றம் இல்லீ என்றுதான் கருதவேண்டியதாக இருக்கும். இல்லாத குற்றங்கீள மிகைப்படுத்தி சொல்லும்போதுதான் உண்மையான குற்றங்கீளயும் நம்ப முடியாமல் போய் விடுகிறது. அதற்கு கவனம் செலுத்தாமலும் இருக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மனேபாவம் எற்பட்டுவிடுகிறது. எதிர் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் உண்மையான குறைகீள எடுத்துச் சொன்னுல் அதை எற்றுக்கொள்ள

10th March 1959] [Sri C. Subramaniam]

தயாராக இருக்கிறேன். அப்படி ஏற்றுக்கொண்டு திருத்திக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறேம். அப்படிப்பட்ட குறைகளை நாங்கள் வரவேற்கவும் செய்கிறேம். அந்த முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உண்மையான குறைகளை எடுத்துச் சொன்னால் உண்மையான ஒத்துழைப்பு இருக்கும். எதிர் கட்சிக்கு எப்படி பொறுப்பு இருக்கிறது என்றால் ஆட்சிப் பொறுப்பை எடுத்து நடத்தக்கூடிய பொறுப்பு இருக்கிறது அவர்களுக்கு. உண்மை இல்லாத குறைகளை எடுத்துச் சொல்வதை அவர்கள் தவிர்க்க வேண்டும். இதை அவர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாங்கள் ஒரு திட்டத்தை அமைத்து அதைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். திட்டம் போடும்போது எல்லாம் நல்ல முறையில் தான் நடக்கும் என்ற அடிப்படையில் திட்டம் போடப்படுகிறது. சாதாரணமாக விதைப் பண்ணையைப்பற்றி எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். முதலில் 360 விதை பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதில் எதோ சிலவற்றில் நடந்து விட்டது. நம்முடைய நிதியுடன் மத்திய அரசாங்கத்தினுடைய நிதியை வைத்துக் கொண்டும் நடத்த ஆரம்பிக்கப்பட்டது. அவற்றில் எதோ சிலவற்றில் நடந்தவிட்டது. அது தெரிந்தவுடன் அதை தொடர்ந்து நடத்தக்கூடாது என்றும் அதை தொடர்ந்து நடத்தாமல் அதை பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதைப் பரிசீலனை செய்த பிறகு அதில் என்ன தவறுகள் நடந்திருக்கிறது, அதை எப்படி திருத்துவது என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக அதைத் தொடர்ந்து நடத்தாமல் விட்டுவிட்டிருக்கிறது. மேலும் தவறுகள் நடைபெறக்கூடாது என்பதற்காக்தான் விட்டு விடப்பட்டிருக்கிறது. அதை அறிக்கையில்கூட ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர் கட்சியினிடமிருந்து எனன் எதிர்பார்க்கப்பட்டது என்றால் அந்த தவறுகளை திருத்துவதற்கு எந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம் என்றும் அதற்கு வேண்டிய யோசனைகள் வரும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் எதிர் கட்சியில் பேசியவர்கள் எல்லோரும் ஏற்கெனவே ஏற்பட்ட தவறுகளையேதான் எடுத்து திரும்பத் திரும்ப சொல்லி வந்தார்களே தவிர நாங்கள் எதிர்பார்த்தபடி அதற்கு வேண்டிய யோசனைகளைச் சொல்ல முன் வரவே இல்லை. நாங்கள் என்ன தவறு செய்தோம் என்பதையேதான் திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். உங்களுக்குத் தெரிந்த யோசனைகளைச் சொன்னால் அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றுதான் எதிர் பார்த்தோம். அந்த அளவில் யோசனைகள் வரவில்லை. அதற்கு பதிலாக ஏற்கெனவே ஏற்பட்ட குற்றங்களைத்தான் திருப்பித் திருப்பச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். சர்க்கார் ஒன்றும் பண்ண முடியாது என்ற எண்ணத்தை உண்டுபண்ணக்கூடிய அளவில் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். பஸ் சர்வீசை எடுத்துக்கொண்டால் அதிலும் எவ்வளவோ குற்றங்கள் இருக்கிறது என்றுதான் சொல்லுகிறார்கள். சர்க்கார் எடுத்து நடத்தும் எந்த தொழிலை எடுத்துக்கொண்டாலும் இப்படித்தான் குற்றங்கள் நடைபெறும் என்கின்ற அளவில் மக்களிடத்தில் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சர்க்காரால் என்ன செய்ய முடியும் ஒன்றையும் செய்ய முடியாது என்று எண்ணக்கூடிய அளவில் மக்களிடத்தில் பேசுகிறார்கள். இப்படியெல்லாம் எதிர் கட்சியில் சொல்லிக்கொண்டு வருவதால் அவர்கள் உண்மையாகவே சொல்லுகிறார்களோ அல்லது மாறுகச் சொல்லுகிறார்களோ என்பது புரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு சந்தேக சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

SRI C. N. ANNADURAI : கனம் அமைச்சர் அவர்கள் விதைப் பண்ணையை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு பிரசனையைக் கிளப்பிய நேரத்தில் சில யோசனைகளைக் குறிப்பிட்டோம். விதைப் பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்காக வீலை கொடுத்து நிலத்தை வாங்கக் கூடாது, குத்தகைக்கு நிலங்களை வாங்க வேண்டும் என்று யோசனையைச் சொன்னோம். அதிகப்படியாக நிலங்களை வைத்துக்கொண்

[Sri C. N. Annadurai] [10th March 1959

டிருக்கிறவர்களிடமிருந்து நிலத்தை வாங்கி விதைப் பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒரு யோசனையைக் கூறினேன். அந்த யோசனைகள் புறக்கணிக்கப்பட்டது. அதனால் மறுபடியும் யோசனைகள் சொல்ல வேண்டியது அவசியம் இல்லை, தேவையில்லை என்று சொல்ல வில்லை. வேறு யோசனைகளைச் சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்வார் களோ அல்லது மாட்டார்களோ என்ற காரணத்தால்தான் சொல்ல வில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் எடுத்து நடத்தும் ஒவ்வொரு தொழிலும் இப்படித்தான் நடக்கிறது என்று எண்ணும்படியாக மக்களிடத்தில் சொல்லப்படுகிறது. அது சரியல்ல, இன்றைக்கு எவ்வளவோ பெரிய திட்டங்களை எடுத்து சர்க்கார் நடத்துகிறார்கள். அவைகளில் சில குற்றங்கள் நடைபெறத்தான் செய்யும். அப்படிப்பட்ட குறைகள் ஏற்படாமல் நடத்துவதற்கு யோசனைகளைச் சொல்ல வேண்டுமே தவிர குற்றங்களையே எடுத்துச்சொல்ல வேண்டியது இல்லை. மாற்று யோசனைகள் சொன்னால் அவைகளை எடுத்துக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறோம். திருத்திக்கொள்வதற்கும் முயற்சி எடுத்துக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறோம். சர்க்கார் எடுத்து நடத்தும் தொழில்களில் குற்றங்கள் நடைபெறுகின்றன என்பதற்காக தொழில்களை எல்லாம் நடத்தாமல் முன் வரவேண்டாம் என்று சொல்வதும் சரியல்ல. ஒன்று மட்டும் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு திறமையான கட்சி வந்து அரசாங்கத்தை நடத்தினாலும் குற்றங்குறைகள் இல்லாமல் நடத்தவே முடியாது என்பதை மனதில் கொள்ளவேண்டும். குற்றங்கள் இல்லாமல் நிர்வாகத்தை நடத்தவே முடியாது. குற்றங்கள் இல்லாமல் நிர்வாகம் நடைபெறுகிறது என்று சொல்வதற்கு இடமே இல்லை. எவ்வளவு ஜாக்கிதையாக வனும் செலுத்திப் பார்த்தாலும் குற்றங்கள் இருக்கத்தான் செய்யும். அதிகப்படியாக திட்டங்களை எடுத்து நடத்தும்போது அதிகப்படியான குற்றங்கள் இருக்கத்தான் செய்யும். குற்றங்களை பயன்படுத்திக்கொண்டு பிரசாரம் செய்வதில் பயன் இல்லை. குற்றங்களை திருத்திக்கொள்வதற்கு யோசனைகளைச் சொல்ல வேண்டும். குற்றங்களைத் தெரிந்து கொண்டு அதை திருத்திக்கொள்ளாமல் இருப் பதில் அபாயம் இருக்கிறது. குற்றங்களைத் தெரிந்து கொண்டு அது தெரியாமல் இருப்பதாகக் கருதி அதை மறைத்துக்கொண்டிருப்பதிலும் அபாயம் இருக்கிறது. குற்றம் இருப்பதை குற்றம் இல்லை என்று நினைத்துக் கொண்டிருப்பதில் அபாயம் இருக்கிறது. எற்பட்டிருக்கக்கூடிய குற்றங்களை ஒப்புக்கொள்ளாமல் அதை மறைப்பதற்கு முயலுவதுதான் பெரிய ஆபத்து. குற்றங்களை மாற்றிக்கொள்ள திறமை வேண்டும். அப்படி மாற்றிக்கொள்ள முடியவில்லையென்றால் பின்னால் ஏராளமான கஷ்டம் ஏற் படும். சாத்தியமான முறையில் அவைகளை திருத்திக்கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அந்த முறையில் இன்றைக்குப் பார்த்தால் விதைப் பண்ணையை மட்டும் எடுத்துச் சொல்வதற்கு இல்லை. அதில் பல குறைகள் இருக்கலாம். அவைகளை நான் ஒப்புக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறேன். நாம் செய்யும் எந்தக் காரியமும் குற்றம் இல்லாமல் செய்ய முடியாது. எல்லாம் சரிவர நடக்கும் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. உண்மையான குற்றங்களை எடுத்துச்சொன்னால் அங்கங்கே அவைகளை எடுத்துக்கொண்டு திருத்திக்கொள்வதற்கும் வேண்டிய வாய்ப்பும் ஏற் படுகிறது. மொத்தமாக எல்லாம் ஊழல் மயம், எல்லாம் லஞ்ச மயம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. எல்லா காரியங்களும் இப்படித் தான் என்று சொல்வது சரியல்ல. மொத்தமாகச் சொல்லாமல் இரண் டொரு விஷயங்களை எடுத்துச்சொன்னால் அதைப்பற்றி பரிசீலனை செய்து பார்க்கலாம். மொத்தமாக சொல்லுவதில் எந்தவிதமான பிரயோசன மும் ஏற்படப் போவதில்லை. மொத்தமாகச் சொன்னால் நாம் எதிர் பாராத முறையில் பலன் ஏற்படலாம் என்பதை மட்டும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

10th March 1959]

Sri A. GOVINDASAMY: விதைப் பண்ணைகள் சம்பந்தமாக சர்வ கட்சி அடங்கிய எஸ்டிமேட் கமிட்டி கொடுத்திருக்கிற ரிப்போர்ட்டில் சில யோசனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை சர்க்கார் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறார்களா ? எந்த அளவில் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதில் சில யோசனைகள் கொடுக்கப்பட்டிருப்பதை திருப்ப திருப்ப வலியுறுத்த விரும்புகிறேன். அதைப்பற்றி விவசாய டிமாண்டு வரும்போது அதைப்பற்றி வலியுறுத்தி பேசுகிறேன். கமிட்டி செய்த சிபாரிசை சர்க்கார் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறார்களா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: அந்த கமிட்டி ரிப்போர்ட்டை நான் படித்துப் பார்த்தேன். எவ்வளவோ விரிவான ரிப்போர்ட்டை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த ரிப்போர்ட் இப் பொழுது பரிசிலனையில் இருக்கிறது. அதன் பிறகுதான் எந்த எந்த யோசனைகளை எற்றுக்கொள்ளலாம் என்றும் எந்த எந்த யோசனைகளை விட்டு விடலாம் என்றும் முடிவு செய்யப்படும் என்று கருத்தை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தப்படியாக நிதி நிலைமை சீர்பட்டிருப்பதைப் பற்றிப் பட்ஜட் உரையில் குறிப்பிட்டிருந்தேன். இது என்ன பிரமாதம் ? இங்கே மட்டுந்தானு நிதி நிலைமை சீர்பட்டிருக்கிறது ? என்று பலர் குறிப்பிட்டார்கள். மற்ற இடங்களில் எற்படாத ஒன்று இங்கே ஏற்பட்டுவிட்டது என்று சொல்லவில்லை. நம்முடைய நிதி நிலைமை சீர்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது அதில் இன்னும் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அங்கத்தினர்கள் இன்னும் கொஞ்சம் மேல் புள்ளிவிவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். 1951-52-ல் ஏற்பட்ட "ரெவினியூ டெபிசிட்"—வரு வாய்க் குறைவு 5 கோடி 1 லட்சம், 1952-53-ல் 9 கோடி 98 லட்சம்; கிட்டத் தட்ட 10 கோடி; 1953-54-ல் 8 கோடி 83 லட்சம்; 1954-55-ல் 3 கோடி 95 லட்சம்; 1955-56-ல் 2 கோடி 46 லட்சம்; 1956-57-ல் 63 லட்சம்; 1957-58-ல் 341 லட்சம். இந்த ஆண்டு—1959-60-ம் ஆண்டு 265 லட்சம் உபரியாக இருக்கிறது. ஆகையால் எவ்வளவு மோசமான நிலைமையில் நம்முடைய நிதி நிலைமை இருந்து வந்திருக்கிறது என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. இந்த வருவாயில் மட்டும் அன்றையதினம் பற்றுக்குறை என்பதல்ல. பல திட்டங்களை நிறைவேற்ற மூலதனச் செலவுக்கு வேண்டிய (காபிடல்) இல்லாதது பெரும் குறையாக இருந்தது என்பதை அங்கத்தினர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 12-30 p.m.

ஆந்திரா பிரிந்து போனபொழுது ரிசர்வ் பாங்க் கணக்கைப் பார்த்த போது அளவுக்கு மேல் 33 கோடி ரூபாய் வாங்கி இருந்தோம். அதன் காரணமாகத்தான் அந்தப் பஞ்சகாலத்தில்கூட பல திட்டங்கள் கொஞ்சம் கூடத் தாமதப்படாமல் நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருந்தது. அப் பொழுது முதல் மந்திரியாக ராஜாஜி அவர்கள் பெருந்துணையாக இருந்த காரணத்தால்தான் அந்த மூன்று வருஷங்களிலும் அவ்வளவு நெருக் கடியான நிலைமையைச் சமாளிக்க முடிந்தது என்று இந்தச் சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரும் நெருக்கடியாகப் போய் பல திட்டங்களை நிறுத்திவிட வேண்டி இருந்திருக்கும். லோயர் பவானித் திட்டம் நாம் திட்டமிடப்பட்டபடி முடிந்திருக்காது. இரண்டு மூன்று வருஷங்கள் கழித்து எடுத்துக்கொண்டிருப்போமோ, மாட்டோமா என்பது நமக்கே தெரியாது. இவ்வளவு வருவாய்க் குறைவு எற்பட்டும் கூட, மூலதன நிதிக் குறைவு ஏற்பட்டுகூட தொடர்ந்து திட்டங்களில் கொஞ்சம்கூட குறைவு இல்லாமல் நடத்தி வந்ததன் காரணமாக, இன்றைக்கு நாட்டின் பொருளாதார நிலைமை கொஞ்சம் சீர்பட்டிருக்கிறது என்று ஓளவை திருப்திப்பட்டுக்கொள்ள முடிகிறது.

[Sri C. Subramaniam] [10th March 1959

அதற்குப் பிற்பாடும்—ஆந்திரா பிரிந்த பிற்பாடும் 3 வருஷ காலமாக எவ்வளவு கஷ்டமான நிலைமை இருந்தது என்பதை அங்கத்தினர்கள் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படி இருந்தும் எந்த விதமான திட்டங்களையும் நாம் குறைத்துக்கொள்ளவில்லை என்பதை நாம் பார்க்கும்போது, டில்லிக்குப் பயந்துகொண்டு திட்டங்களை நிறைவேற்றமல் இருந்துவிட்டோமா ? நிதிக் குறைவு இருந்த போதிலும் சர்வ் பாங்கிலிருந்து அதிகப் பணம் எடுத்து திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இவைகளையெல்லாம் திரு. அண்ணுத்துரை அவர்கள் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்காகப் பார்க்க வேண்டாம். அவர்களுக்காக, கொஞ்சம் உட்கார்ந்து சிந்தித்துப் பார்த்தால் உண்மையில் இங்கு இருக்கக்கூடிய மந்திரிகள் காரியங்களைச் செய்யாமல் விட்டு விட்டார்களா என்பது புலப்படும். இருக்கக்கூடிய நிதி நிலைமையை மீறி இந்தக் காரியங்களைச் செய்து வந்தார்கள் என்கிற புள்ளிவிவரங்களை ஏராளமாவது அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். இதற்கு மத்தியில் அவர்கள் " நீங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எவ்வளவு கேட்டீர்களோ அவ்வளவு தொகையை அவர்கள் கொடுத்தார்களா ? " என்று இங்கு சொல்லுவது மாத்திரமல்ல ; மற்ற இடங்களிலும் சொல்லி வருகிறார்கள். நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டுந்தான் கேட்டதற்குக் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதல்ல ; எல்லா ராஜ்யங்களும் அதிகமாகத்தான் கேட்டன. ஆனால் கேட்ட தொகை எல்லா ராஜ்யங்களுக்கும் கொடுக்கப்படவில்லை. உத்திரப் பிரதேசத்தில் எவ்வளவு தொகை கேட்டார்கள், அவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதைக் கணக்குப் போட்டால், அவர்களுக்குக் கிடைத்ததைவிட நமக்கு அதிகமாகக் கிடைத்திருக்கிறது என்பது தெரியவரும். கேட்கும் போதே நாம் குறைவாகக் கேட்டு மற்றவர்கள் அதிகமாகக் கேட்டிருந்தால் நம்முடைய ராஜ்யத்தில் இவ்வளவுதான் திட்டங்கள் இருக்கிறது என்ற நிலைமை ஏற்படும். ஆகவே ஒவ்வொரு ராஜ்யமும் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு அதிகப்படியான தொகையைக் கேட்கிறார்கள். அவைகளையெல்லாம் வைத்து அங்கு திட்டங்களை ஆராய்கிறவர்கள், இருக்கக்கூடிய வசதிக்கேற்ப ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் ஒதுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்று பங்கு போட்டு கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். அடுத்தபடியாக அண்ணுத்துரையவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு தொகை ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கொண்டு நம்முடைய ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்ட பங்கு ரொம்பக் குறைவு என்று எடுத்துக் கூறினார்கள். " 290 கோடி ரூபாய் தொழில் துறைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதில் நம்முடைய ராஜ்யத்திற்குப் 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கி இருக்கிறார்கள் " என்று குறிப்பிட்டார்கள். உடனே சொன்னார்கள்—" நெய்வேலியில் 70 கோடி ரூபாயும், கோச்பாட்டரியில் 12 கோடி ரூபாயும் முதலீடு செய்திருக்கிறார்கள். இதனால் நமக்கு என்ன நன்மை ? " என்று கேட்டார்கள். அவர்களுடைய கொள்கையை வைத்துப் பேசினாலுகூட அவர்கள் சொன்னது சரியல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் ஒன்று இருக்கிறது. அந்த மத்திய அரசாங்கம் வடக்கே இருக்கக்கூடிய ராஜ்யங்களுக்கு மட்டும் காரியங்களைச் செய்வதற்காக இல்லே. தெற்கே இருக்கக்கூடிய ராஜ்யங்களுக்கும் சேர்த்துத்தான் அவர்கள் காரியங்களைச் செய்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது மற்ற ராஜ்யங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் தொழில்களைவிட இங்கு குறைவாக இருக்கிறதா? மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய சலுகைகளைவிட நமக்குக் குறைந்த சலுகைகள் கொடுத்திருக்கிறார்களா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நெய்வேலித் திட்டத்தில் இடைக்கும் லாபத்தில் நமக்கு 25 சதவிகிதம் கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதே போல் ரூர்கேலா, பிலாய் தொழிற்சாலே ஆகியவைகள் அந்தந்த ராஜ்யங்களில் உருவாக்கும் போது அங்கு எவ்வளவு பங்கு கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தால், இதைப்பற்றி பேசி இருக்கமாட்டார்கள். மற்ற ராஜ்யங்களுக்கு நமக்குக் கொடுத்தாற்போல் பங்கு கொடுக்க வில்லே. திரு. அண்ணுத்துரையவர்கள் தனியாக அதைப்பற்றிய விவரங்களைக் கேட்டால் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். நமக்கு லாபத்தில்

10th March 1959] [Sri C. Subramaniam]

25 சதவிகிதம் கிடைத்ததைப்பற்றி நாம் மகிழ்ச்சி அடையவேண்டும். எதை வைத்துக்கொண்டு இந்த 25 சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள் ? நெய்வேலித் திட்டத்திற்காக முதலீடு செய்வதற்கான நிதி முழுவதும் அவர்கள் பொறுப்பு. அப்படி அவர்கள் கடன் வாங்கி, வட்டி கட்ட வேண்டியது அவர்கள் பொறுப்பு. நஷ்டம் வந்தால் நாம் ஒன்றும் பங்கேற்றுக்கொள்ளவேண்டியதில்லை. லாபம் வரும்போது நமக்கு 25 சத விகிதம் கொடுக்கிறார்கள். எந்த பப்ளிக் கார்ப்பரேஷன் எடுத்திருந்தாலும் அந்த ராஜ்யங்களுக்குப் பங்கு கிடையாது. ஸுர்கேலா, பிலாய் திட்டங்கள் இருக்கிற ராஜ்யங்களுக்குப் பங்கு கிடையாது. பங்கு கிடைத்தது நம்முடைய ராஜ்யத்திற்குத்தான். நெய்வேலியில்தான் நாம் 25 சத விகிதம் வாங்கி இருக்கிறோம். வேறு ஒருவரும் லாபத்தில் பங்கு பெற்ற தில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். (ஸ்ரீ எ. கோவிந்தசாமி : அஸ்ஸாமில்.....) அஸ்ஸாமில் ஒன்றும் கிடையாது. தெரியாமல் பேசவேண்டாம்.

SRI A. GOVINDASAMY : அஸ்ஸாம் மாகாணத்தில் முதல் மந்திரியாக இருந்தவர்தான் இப்பொழுது கவர்னராக இருக்கிறார். எண்ணைத் தொழிற்சாலைக்காக போராட்டம் நடத்தி வெற்றிபெறவில்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதனுடைதான் பாதி அறிவதை விட அறியாமல் இருப்பது மேல் என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் உரிமைக்காக போராடி வெற்றிபெறவில்லை. அவர்கள் எதற்காகப் போராடினார்கள் ? அந்த எண்ணைச் சுத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையைத் தங்களுடைய ராஜ்யத்திலேயே ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகப் போராடினார்கள். அந்த அளவுக்கு வெற்றி பெற்றார்கள். அதில் எந்தவித பொறுப்பும் அவர்களுக்குக் கிடையாது. இப்போது கோவிந்தசாமி அவர்கள் கவர்னரைச் சந்திப்பதில்லை போலும். (ஸ்ரீ எ. கோவிந்தசாமி : எப்பொழுதும் சந்திப்பதில்லை.) ஞானமும் அந்த அளவுக்குத்தான் இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI C. N. ANNADURAI : நெய்வேலி நிலக்கரித் திட்டத்தில் லாபத்தில் நமக்குப் பங்கு இருக்கிறது ; வேறு யாருக்கும் இல்லையென்று சொன்னார்கள். இங்கே கனரகத் தொழில்களே ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறதென்பதையும், அவைகளெயெல்லாம் ஆரம்பிக்க தென்னாட்டுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்படவில்லை என்பதையும் நிதியமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்களா, அல்லது நெய்வேலியில் லாபத்தில் பங்கு கிடைக்கிறது என்று திருப்தி அடைந்து விடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உடனே ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறார்கள். நெய்வேலி திட்டத்தை யார் கையிலோ ஒப்படைத்து விட்டார்கள், அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொன்னார்கள். இன்னொன்று. அங்கே எடுக்கக்கூடிய கரியை வேறு எங்கோ கொண்டுபோகப் போவதில்லை. நமக்கேதான் உபயோகப்படப்போகிறது. அங்கே உற்பத்தி ஆகப்போகிற பொருள்கள் எல்லாம் நமக்குத்தான் உபயோகப்படப் போகின்றன. அங்கே உண்டாக்கப்படுகிற மின்சாரம் வெளி நாட்டுக்காக அல்ல. இப்படிப்பட்ட சந்தேகம் நமக்கு வேண்டியதே இல்லை. மேலும் அப்போழுதே மத்திய அரசாங்கத்தார் சொன்னார்கள். எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் இதற்காகச் செலவிடப்பட்டிருக்கிற பணத்தைக் கொடுத்துவிட்டு இதை ராஜ்ய சர்க்காரே மேற்கொள்ளலாம் என்று. இன்றைக்குத் திட்டம் நிறைவேறி, செல்வம் பெருக வேண்டும் என்பது ஒன்றே நம்முடைய குறிக்கோளே தவிர ராஜ்யத் துறையில் செலவு செய்வதா ? மத்திய அரசாங்கத் துறையில் செலவு செய்வதா என்பது அல்ல. இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும்.

[Sri C. Subramaniam] [10th March 1959

நெய்வேலித் திட்டம், கோச் பாக்டரி ஆகியவை யாருக்குச் சொந்தமாக இருந்தாலும், அங்கு வரும் லாபம் யாருடைய கஜானவுக்குப் போகிறது என்றாலும் அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் நம் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அப்படி வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதே, அதன் மூலமாக ஏற்படக்கூடிய அபிவிருத்திகள் இருக்கிறதே அதுதான் முக்கியம். நெய்வேலியில் உற்பத்தியாகக்கூடிய பொருள்கள் நமக்கு உபயோகப்படப் போகின்றன என்பது மட்டும் அல்ல, பல்வேறு தொழில்களில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு இங்குள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஏற்படுகிறது என்பது மிகவும் முக்கியமானது என்று வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படியெல்லாம் பார்க்கும்போது மத்திய அரசாங்கம் தொழில்துறைக்காகச் செலவிடுகிற 790 கோடி ரூபாயில் நம் ராஜ்யத்திற்கு 10 கோடி ரூபாய்தான் செலவிடப்படுகிறது என்று திராவிடமுன்னேற்றக் கழகத்தார் கொடுக்கிற கணக்கு ஒருவேளை அவர்களுக்குச் சரியாக இருக்கும். ஆனால் சாதாரணமாக இருக்கக்கூடிய எந்தப் பொருளாதார நிபுணர்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அப்படி ஒத்துக்கொள்வதென்றால் எந்த விதமாக வேண்டுமானாலும் கணக்கை மாற்றிக் காண்பித்து ஒன்றுமே நடக்கவில்லையென்று சொல்லிவிடலாம்.

இப்போது இருக்கக்கூடிய அரசியல் அமைப்பு அடிப்படையில்தான் நாம் வேலை செய்யவேண்டும் என்கிற முறையில் நாம் கவனிக்கிறபோது கனரகத் தொழில் நம் ராஜ்யத்திற்குப் போதுமானதாக வந்துவிட்டதா என்று கேட்டார்கள். வந்துவிட்டது என்று யாரும் சொல்லவில்லை. கனரகத்தொழில் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்படவேண்டும். வங்காளிக்குக் கடுக்கன் மாதிரி அமைந்தது என்றால் கடுக்கன் போட்டுக் கொள்ள ஓட்டை இருந்தது. அந்த ஓட்டம் இல்லாவிட்டால் உதட்டில் போட்டுக்கொள்ள முடியுமா ? (ஸ்ரீ. ஏ. கோவிந்தசாமி. மூக்கிலும் போட்டுக்கொள்ளலாம்) அது மூக்கூத்தி. கடுக்கன் இல்லை. ஒன்றை ஏற்படுத்தவேண்டுமானால் அதற்கு இயற்கையான வசதியும் அமைந்திருக்க வேண்டும். வங்காளத்தில் அப்படி இரும்பும், நிலக்கரியும் சேர்ந்து கிடைத்தது. அதனால் தொழிற்சாலை அமைய முடிந்தது. வேறு மந்திரம் இல்லை, மாயம் இல்லை. வடக்கத்தியர்கள் என்றால் இந்தி பேசுகிறவர் களைத்தான் குறிக்குமே தவிர வங்காளியர்களை அல்ல. வங்காளியர்களை தமிழர்களோடு வேண்டுமானால் இணைத்துப் பேசுவார்கள். ஆகவே மத்திய அரசாங்கம் என்னமோ வங்காளத்திற்குத் தனிச் சலுகை கொடுத்துவிட்டதாக யாரும் எண்ண வேண்டாம். அங்கே இயற்கை வசதிகள் இருந்தது. கனரகத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடிந்தது.

நமக்கு இப்போதுதான் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் கிடைத்திருக்கிறது. அதிலும் அங்கே கிடைக்கிற நிலக்கரியை நாம் முதலில் உயர்ந்தரக நிலக்கரியாக மாற்றியமைக்கவேண்டும். உயர்ந்த நிலக்கரி இருந்தால் தான் பல நுட்பமான தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். அப்படி உயர்ந்தரக நிலக்கரி கிடைக்கும்போது என்ன என்ன தொழில்களை ஏற்படுத்தலாம் என்பதை ஆராய்வதற்காகத்தான் இந்தக் குழு. இதற்கு முன்னாலேயே திட்டம் போடவில்லையா என்றால் நிலக்கரி கிடைக்கும் என்கிற உத்தரவாதம் ஏற்பட்டபின்தானே திட்டம் போடமுடியும் ? இன்றைக்கு நிலக்கரி கிடைக்கிறது என்றால் என்ன என்ன திட்டங்களை வகுக்கலாம் என்றும் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஆராய்ச்சியோடும் நின்றுவிட்டால் போதாது. வருஷா வருஷம் நல்ல ஆராய்ச்சி இருந்து கொண்டே இருந்தால்தான் நல்ல வளர்ச்சி ஏற்படுமே தவிர நாம் எல்லாவற்றையும் அறிந்துகொண்டுவிட்டோம் என்று எண்ணிக்கொண்டிருந்தால் அப்படியே இருக்கவேண்டியதுதான். நம் நாட்டில் மட்டும் அல்ல, முன்னேற்றம் அடைந்திருக்கிற எல்லா நாடுகளிலும் இன்னமும் தொடர்ந்து ஆராய்ச்சி ஒவ்வொரு வருஷமும் நடந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது திட்டம் என்று தயாரித்து புத்தகமாகத்தான் கொடுத்து

10th March 1959] [Sri C. Subramaniam]

விட்டோம். இதற்குமேல் என்ன ஆராய்ச்சி வேண்டியிருக்கிறது, மீண்செலவு என்றால் அது நாம் முன்னேற்றப் பாதையில் போகிறோம் என்பதற்கு அடையாளமாகாது. மக்களை ஏமாற்றுவதற்கு வேண்டுமானால் தகுந்த வாதமாக இருக்கும். மக்களை ஏமாற்ற எங்களுக்குத் தெரியாது. அவர்கள் சொல்லிக் கொடுத்தால் தெரிந்து கொள்கிறோம்.

மக்களுடைய வளர்ச்சிக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக புதிய புதிய திட்டங்களை எல்லாம் நாம் நிறைவேற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது. இரண்டாவது திட்டம் முடிந்தவுடன் மூன்றாவது திட்டத்தையும் நாம் துவங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். மூன்றாவது திட்டத்திற்கும் நாம் இப்போதே ஆராய்ச்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதிலும் நமக்கு நெய்வேலிச் சுரங்கத்தில் கிடைக்கிற வெற்றியைக் கொண்டு, அதற்கு அனுசரணையாக எந்த எந்த நுட்பமான தொழில்களை எல்லாம் ஏற்படுத்தலாம் என்பது ஆராய்ச்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அத்தோடு ஐந்து வருஷங்களுக்கு முன்பாக ஒரு தொழிலை எந்த முறையில் செய்து கொண்டிருந்தோமோ அந்த முறை வேறு. இப்போது இருக்கிற முறை வேறு. நாட்டில் தொழில்துறையில் அன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிற தொழில் முன்னேற்றத்திற்கு ஏற்ப, தொழில் துறையில் ஏற்படுகிற மாற்றத்திற்கேற்ப நாமும் நம் தொழில்களை மாற்றி அமைத்துக் கொள்வதற்கும் ஆராய்ச்சி, திட்டம் வேண்டும். இந்த வகையிலும் நாம் என்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஆராயக் கமைப்பட்டிருக்கிறோம். 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்திற்காக நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கொண்டு கணிசமான பெரிய திட்டங்களை எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். இரண்டாவது திட்டம் முடியும் தருவாயிலேயே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு நாம் இப்போதிலிருந்தே ஆலோசனை செய்து நல்லதொரு திட்டத்தை வகுத்துக் கொடுத்து இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் கேட்கலாம். இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்காகத்தான் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் இப்போதே ஒரு விஷயத்தில் நமக்குத் தெளிவு இருக்க வேண்டியது அவசியம். நம்மைப் போலவே இதர ராஜ்யங்களும் தங்கள் தங்கள் ராஜ்யத்திற்காக உருவாக்கி அவற்றுக்கு இவ்வளவு இவ்வளவு தொகை ஒதுக்கவேண்டும் என்றும் கேட்பார்கள். மத்திய சர்க்கார் எல்லா ராஜ்யங்களுடைய திட்டங்களையும் பரிசீலனை செய்து, மொத்தம் முள்ள நிதியை கணக்கில்கொண்டு, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு தொகை நிர்ணயிப்பது என்று முடிவு செய்வார்கள். நம்முடைய நிதி நிலைமைக்கேற்ப எந்த அளவு திட்டத்தை எடுத்துக்கொள்வது என்பது பின்னால்தான் முடிவாக முடியும். அப்படியிருக்க " ஓ! நாங்கள் அப்போதே சொன்னோம். இவ்வளவு திட்டங்களை உருவாக்கிக்கொடுத்தோம். வடக்கத்தி அரசாங்கம் ஒப்புக்கொண்டதா ? " என்பதாக இதையே அரசியல் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்வது என்றால் இப்போது ஒத்துழைப்பது போல ஒத்துழைத்து பின்னால் காலைவாரிவிடக்கூடிய ஒத்துழைப்பாகத்தான் இது இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri C. N. ANNADURAI : மூன்றாவது திட்டத்தில் நம் பங்கைக் கேட்கிற நேரத்தில் நம்முடைய பிற்போக்கு நிலைமைக்கேற்ப கனரகத் தொழில்களை அதிகம் நம் ராஜ்யத்தில் ஏற்படுத்துவதற்குச் சலுகை கொடுக்கப்படவேண்டுமென்கிற கருத்து மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : எந்த அளவுக்கு நாம் பிற்போக்காக இருக்கிறோமோ அந்த அளவுக்கு அபிவிருத்தி வேண்டும் என்று வற்புறுத்தலாம். நம்மைப்போலவே எல்லோருமே பிற்போக்காக இருப்பதாகச் சொல்லிக் கொள்ள முடியும். ஆகவே எல்லா ராஜ்யங்களையும் படிப்படியாக பிற்போக்கு, மிகவும் பிற்போக்கு, மிகமிக

பிற்போக்கு என்பதாக அங்கங்கே இருக்கக் கூடிய நிலைமையை நன்கு கவனத்தில் எடுத்துக்கொண்டு ஒரு பட்டியலைத் தயார் செய்து அந்தப் பிற்போக்குப் பட்டியலின் அடித்தளத்தில் நாம் இருந்தால் அதற்கேற்ற வகையில் அபிவிருத்திக் காரியங்களைச் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்த லாம். நாம் இரண்டாவது மூன்றாவதாக இருந்து நமக்கும் மேலே மிகவும் பிற்போக்கான நிலைமையில் ஏழு எட்டு ராஜ்யங்கள் இருந்தால் அதற்கேற்ற நிலைமையில் வற்புறுத்தலாம். நியாயம் என்றால் நமக்கு மட்டும் ஒரு நியாயம், இன்னொருவருக்கு இன்னொரு நியாயம் என்று இருக்கக் கூடாது. பொதுவாக நியாயமான திட்டத்தை வகுக்கவேண்டுமென்று கேட்பதற்கு உரிமை உண்டு. அந்த உரிமையை யாரும் மறுக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் இந்த மூன்றாவது திட்டத்தை உருவாக்கும் சமயத்தில் நாம் நன்றாக ஆலோசனை செய்யவேண்டுமென்று அடிக்கடி தெரிவித்து வருகிறேன். இன்றைக்கு நம் ராஜ்யத்திற்கு மட்டும் ஒரு திட்டம் போடுவது என்றால் அதில் பல குறைகள் வந்து சேர்ந்துவிடு கின்றன. இயற்கை வசதி எல்லாம் அந்தத் திட்டத்திற்கு நம் ராஜ்யத் திலேயே இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே அப்படிப்பட்ட பெரிய திட்டங்களை மண்டல அடிப்படையில் வகுத்துக்கொண்டால் நல்லது என்கிற கருத்தை நான் வெளியிலும் வற்புறுத்தி வருகிறேன். இங்கும் சொல்கிறேன். இதைத் திட்டக் கமிஷனும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் பார்க்கும்போது நல்லதொரு திட்டத்தை நாம் வகுக்கமுடியும் என்றே நான் நினைக்கிறேன். அவ்வாறு திட்டங்களை வகுக்கும்போது சில அடிப்படையான விஷயங்களில் நமக்கு கருத்துத் தெளிவு இருக்க வேண்டியது அவசியம். என் சிந்தனையின் மூலம் நான் கொண்டுள்ள சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவைகளை என்னுடைய முடிவான கருத்துக்கள் என்று கருதக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். கருத்துக்கள் எப்படி எப்படிச் செல்லும், முடிவான கருத்துக்கள் எவ்வாறு இருக்கும் என்று முதலி லேயே சொல்ல முடியாது. வாய்ப்புக்களுக்கும், புள்ளிவிவரங்களுக்கும், வசதிகளுக்கும் ஏற்ப கருத்துக்கள் மாறலாம். இப்போது நான் கொண்டுள்ள கருத்துக்களை இந்த சபையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு திட்டத்தை வகுக்கும்போது, பல்வேறு வேலைகளைச் சேர்த்து அதை திட்டம் என்று வைப்பதில்லை. ஒரு திட்டம் என்பது, ஒரு லட்சியத்தை அடைவதற்குப் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். அந்த அடிப் படையில் தான் திட்டம் வகுக்க வேண்டும். அவ்வாறு திட்டம் உருவாக்க முற்படும்போது, எந்த லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பது குறித்து நமக்கு தெளிவான கருத்து இருக்க வேண்டும். அப்போது தான் சரியான திட்டம் அமையும், இல்லா விட்டால் சரியான திட்டம் அமையாது. எனவே நமது சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்பது குறித்து நமக்கு கருத்துத் தெளிவு இருந் தால்தான் நாம் திட்டத்தை வகுக்க முடியும். நம் சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்று பார்ப்போம். நம் சமுதாயம் சோஷலிஸ அடிப்படையில் அமைய வேண்டும் என்பது அனேகமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படக் கூடிய கருத்து. சோஷலிஸம் என்பது என்ன என் பதில் சில கருத்து வேற்றுமைகள் இருக்கக்கூடும். ஆனால் நம் சமு தாயம் சோஷலிஸ அடிப்படையில் அமைய வேண்டும் என்ற கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடும். சோஷலிஸ சமுதாயத்தில் யாருக்கும் சில அடிப்படையான, அத்தியாவசியமான வசதிகள் இல்லை என்ற நிலை இருக்கக்கூடாது. எனவே அத்தியாவசியமான வசதிகள் எவை என்பதை வரையறுக்க வேண்டும். அவை இல்லாதவர்கள் சமுதா யத்தில் இருக்கும் நிலைமை இருக்கக்கூடாது. அந்த முறையில் சமு தாயத்தை அமைக்க வேண்டும். அதோடு, சமுதாயத்தில் எல்லோருக்கும் சம வாய்ப்புகள் இருக்கவேண்டும். சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள வர்கள் உயர் நிலைக்கு வருவதற்குரிய முறையில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் இருக்கக்கூடிய முறையில் சமுதாயம் அமையவேண்டும்.

10th March 1959] [Sri C. Subramaniam]

இந்த விஷயத்தில் அடிப்படையான வசதிகள் எவை, எந்த விஷயங்களில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் இருக்க வேண்டும் என்பன போன்ற விஷயங்களில் நம்மிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கக்கூடும். அவைகளை, நாம் எல்லோரும் ஒன்றுக உட்கார்ந்து யோசித்து முடிவுசெய்ய வேண்டும். ஆனால் எல்லோருக்கும் சம வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்பது பற்றி நம்மிடையே யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்காது என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில், அந்த லட்சியத்தை நோக்கிச் செல்லவேண்டுமானால் நாம் எப்படி திட்டத்தை வகுப்பது என்பதை மனதிற்கொள்ள வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். நாட்டில், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால் உற்பத்தி சக்தி பெருகவேண்டும். உற்பத்தி சக்தி பெருக வேண்டுமானால், சாதனங்கள் அமைய வேண்டும். நம்மிடமுள்ள வசதிகளைக் கொண்டு தான் அந்த சாதனங்களை உருவாக்க முடியும். எனவே உற்பத்தி சக்தி மேலும் மேலும் பெருக வேண்டுமானால் மக்களிடம் உள்ள வசதிகள், பொருளாதார சக்தி, அதிகரிக்க வேண்டும். இதற்கு உதாரணம் கொடுக்க வேண்டுமானால், ஒரு தனிப்பட்ட குடும்பத்தையே எடுத்துக்கொள்ளலாம். ஒரு குடும்பத்தினர் தங்களுக்கு மாதாமாதம் வரும் வருவாயை அந்த அந்த மாதத்தில் முழுவதும் செலவழித்து விடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு அவர்கள் செலவழித்தால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுவதற்கு வேண்டிய சக்தி அவர்களிடம் இருக்காது. அந்த சக்தி அவர்களுக்கு இருக்க வேண்டுமானால் அவர்கள் மாதாமாதம் தங்கள் செலவைக் குறைத்துக்கொண்டு கொஞ்சம் சேமிக்க வேண்டும். அவ்வாறு பணம் சேமித்தால் அந்தத் தொகையைக் கொண்டு இன்னொரு தொழில் ஆரம்பிக்கலாம். அத் தொழில் மூலம் இன்னும் பணம் சம்பாதிக்கலாம். இதே மாதிரித்தான் நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை நடத்துவதும். நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை முழுவதும் நாட்டிலுள்ள சமுதாயத்திற்கே பயன்படுத்திவிட்டால் அதிகமான அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நடத்த முடியாது. எனவே உற்பத்தியாகும் பொருள்கள் முழுவதையும் அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்திவிடாமல் அவைகளில் ஒரளவு பங்கை சேமித்து முதலீட்டுக்குப் பயன்படுத்தலாம் என்பதுபற்றி ஆராய வேண்டியிருக்கிறது, அப்படி ஆராயும் போது எல்லாத் துறைகளையுமே நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. வருவதை அவ்வப் போது செலவழிக்கும் சூழ்நிலை இருக்கும்போது, சேமிக்கும் சூழ்நிலை எற்படுவதில்லை. கஷ்டப்படும் எழைகள் எவ்வாறு சேமிக்க முடியும் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ. கல்யாணசுந்தரம் சொல்லினார். எல்லோரும் ஓரளவாவது சேமித்தால்தான் சேமிப்பு அதிகமாகப் பெருகும். எனவே ஏழைக்கும் கூட சேமிக்க வேண்டுமென்ற உணர்ச்சி எற்பட வேண்டியது அவசியம். அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தொழில்களில் வரும் வருமானம் வரையறுக்கப்பட வேண்டும் என்று சொல்லும் போது, அதை மாத்திரம் வரையறுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. உற்பத்தி பெருகும்போது முதலாளிகளுக்குக் கிடைக்கும் அதிக வருமானம் தொழிலாளிகளுக்கே பிரித்துக்கொடுக்கப்படும் நிலையில், முதலாளிகளிடம் சேமிப்பு எற்படுவதில்லை. கஷ்டப்படும் தொழிலாளிகளே அதிகமாக சேமிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. எல்லோருக்கும், சேமிக்க வேண்டுமென்ற உணர்ச்சி எற்பட்டு எல்லோரும் சேமிக்க முயல வேண்டும். ஆகையால் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திற்கு மட்டுமன்றி மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், முதலாளிகளுக்கு வரும் வருமானம் முதலியவைகளுக்கெல்லாம் வரையறை நிர்ணயித்து, சேமிப்பை அதிகப்படுத்தலாம். ஒரு பகுதியில் மட்டும் சேமிப்பு இருக்க வேண்டும், மற்ற பகுதிகளில் சேமிப்பு இருக்கக்கூடாது என்றால், சேமிப்பு போதிய அளவில் எற்படாது. இன்று, முதலாளி மட்டும் சேமிக்க வேண்டுமென்றால் சேமிப்பு போதிய அளவில் எற்படாது. முதலாளிகளிடம் ஒரு பைசாக் கூட இல்லாதபடி அவர்களிடமுள்ள பணத்தை எடுத்துக் கொண்டாலும் கனிசமான அளவில் பணம் கிடைக்காது. ஆகவே சேமிப்பு பரவலாக இருக்க வேண்டும். இன்றைக்குத்தான், மகாத்மாஜீ எவ்வளவு தூரதிருஷ்டியுடன் பல விஷயங்களை எடுத்துச்சொல்லி வந்தார்

என்பது நமக்கு தெளிவாகப் புலனுகிறது. பணக்காரர்கள் எளிய வாழ்க்கை நடத்த வேண்டியதும், அவர்கள் அதிகமாகச் செலவழிக்காமல் இருக்க வேண்டியதும் அவசியம். அவர்கள் சேமித்தால் நாட்டின் பொருளாதாரம் உயரும். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக, செலவுகளைக் குறைக்கவேண்டும். நாம் ஓரளவு முன்னேறிய பிறகு அதிகமாகச் செலவழிக்கலாம். அதுவரையில் நமது செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். யாரும் தங்களாகவே இஷ்டப்பட்டு, சில கட்டுப்பாடுகளை தங்களுக்குத் தாங்களே விதித்துக்கொண்டு, எளிய வாழ்க்கை நடத்திஞல் அது அவர்களுக்குக் கஷ்டமாகத் தோன்றுது. அப்படி இல்லாமல், அவர்கள் எளிய வாழ்க்கை நடத்த வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை சர்க்காரால் உருவாக்கப்படுமானுல், அப்போது அது அவர்களுக்கு மிகுந்த பாரமாகத் தோன்றும். காந்திஜீயின் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலக்கூடியவையாக இருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் செலவைக் குறைத்து வரவை அதிகரித்தால் தான், உற்பத்தியை அதிகப்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் ; நாடு முன்னேற முடியும். எங்கெங்கே எப்படி எப்படி செலவைக் குறைத்து சேமிப்பை அதிகப்படுத்த வேண்டும் என்ற விஷயத்தை நாம் எல்லோரும் ஒன்றுக உட்கார்ந்து ஆராயவேண்டும். அவ்வாறு செய்யாமல், சேமிப்பை அதிகரித்து அதிக வருமானத்தைப் பெறுமல் திட்டத்திற்கு 200 கோடி ரூபாய் வேண்டும் என்றே 300 கோடி ரூபாய் வேண்டும் என்றே சொன்னுல் பணம் கிடைக்காது. பணம் வெறுமனே கிடைக்காது. சேமித்தால் தான் பணம் கிடைக்கும். பணம் நிறையக் கிடைத்தால்தான் திட்டத்திற்கு நிறையப் பணம் ஒதுக்க முடியும். முதலாளிகளின் வருவாய், தொழிலாளிகளின் ஊதியம் ஆகிய எல்லாவற்றையுமே இந்தப் பிரச்னையில் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் பேசுகிறேன். தொழிலாளிகளும் முதலாளிகளும் எவ்வாறு சேமிப்பை அதிகரிக்க முடியும் என்று பார்க்க வேண்டும். இதை தேசிய அடிப்படையில் கவனிக்கவேண்டும். தொழிலாளர்களின் ஊதியத்தை மட்டும் கட்டுப்படுத்த வேண்டும், மற்ற வர்கள் எவ்வளவு வேண்டுமானுலும் சம்பாதித்துக்கொள்ளலாம் என்று நான் சொல்லவில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் கனம் அங்கத்தினர்

1 p.m. ஸ்ரீ. கல்யாணசுந்தரம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் மூன்றுவது திட்டம் வகுக்கும் போது சேமிப்பின் மூலந்தான் சர்க்காரின் வருவாயை அதிகரிக்க முடியும் என்று நம்புகிறார்களா, அல்லது பொதுத்துறையை சக்தி வாய்ந்ததாக ஆக்கினுல்தான் முடியும் என்று நினைக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கடைசியில் பார்க்கும் போது, பொதுத் துறையாகயிருந்தாலும் சரி, அல்லது தனியார் துறையாக இருந்தாலும் சரி, சேமிப்பை வைத்துக் கொண்டுதான் செய்ய வேண்டும். இன்று பொதுத்துறையை எடுத்துக் கொண்டால், ஒரு ஆலை வைத்து நடத்துகிறேம் என்று இருக்கட்டும். அங்கு தொழிலாளர்கள் தலைவர்கள் போய், இவ்வளவு லாபம் வருகிறது, ஆகவே தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது வருகிற வருமானம், தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பதில் சரியாகப் போகிற தென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது எப்படி சேமிப்பு ஏற்படும் ? ஆகவே, பொதுத்துறையிலானுலும் சரி, அல்லது தனியார் துறையிலானுலும் சரி, சேமிப்பு ஏற்பட வேண்டும். ஆகவே, பொதுத்துறையிலானுலும் சரி அல்லது தனியார் துறையிலானுலும் சரி, உற்பத்தியாகும் பொருள்களை எல்லாம் அன்ருடத் தேவைக்கு முழுவதையும் பயன்படுத்தாமல் சேமித்து வைக்கும்போது சேமிப்பு ஏற்படுகிறது. அது, தனியார் துறையில் ஏற்படலாம், பொதுத் துறையில் ஏற்படாமலும் போகலாம். இதுபற்றி தனியாக விவாதித்துக் கொள்ளலாம். இன்று உற்பத்தி செய்யும் போது அதனல் ஏற்படும் பலனை இன்றே அனுபவிக்க விரும்புகிறோமா அல்லது சேமித்து வைத்து பின்னுல் நம்து வாழ்க்கை உயருவதற்காக அதை முதலீடு செய்ய விரும்புகிறோமா என்பதை எல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

10th March 1959]

Sri C. N. ANNADURAI : ஒரு தொழிலில் கிடைக்கும் வருவாயில் பெரும்பகுதியை தொழிலாளர்களுக்கு கொடுத்துவிட்டால் சேமிப்பு இருக்காது என்று சொல்கிறார்கள். தொழிலாளர்களிடம் போகும் பணத்தை ஏன் சேமிப்பிற்கு உபயோகப்படுத்த முடியாது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சேமிப்பு இரண்டு விதங்களில் ஏற்படலாம். ஒருவர், தானாகவே கூடுதல் செலவு செய்யப் போவதில்லை, சிறிது சேமிக்கலாம் என்று சேமிப்பு செய்யலாம். அதுவும் சேமிப்பாகிறது. ஒரு தொழிலாளி தனக்கு கிடைக்கும் வருவாய் அத்தனையையும் அன்றாட வாழ்க்கைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது என்றுதான் நான் சொல்கிறேன். அப்படி அவர்கள் எல்லாவற்றையும் செலவழிக்கும்போது, சேமிப்பு ஏற்படுவதில்லை. வெவ்வேறு கட்டங்களுக்கு அது செலவழிக்கப்படுகிறது. ஆகவே, எப்படி சேமிப்பு ஏற்படுத்துவது என்பதுதான் விஷயம். சேமிப்பு அவசியம் என்பதைத்தான் நான் இப்போழுது வற்புறுத்த விரும்புகிறேன். இதை இரண்டு விதங்களில் செய்யலாம். ஒன்று, தாங்களாகவே சேமிப்பு அவசியம் என்று உணர்ந்து சேமிப்பது. அதிகம் செலவு செய்யாமல் ஒரு பகுதியை சேமிப்புப்பத்திரங்களில் போடலாம், அல்லது சர்க்கார் வரி மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது வழிகளிலோ பலவந்தமாக எடுக்கலாம். ஆகவே, மக்கள் தாங்களாகவே அதிகம் செலவு செய்யாது மிச்சப் படுத்துவார்களா அல்லது சர்க்கார் தலையிட்டு கட்டாயம் சேமித்துத் தான் தீர வேண்டுமென்ற முறையில் சேமிப்பு செய்யவேண்டும் என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கிறது. ஐந்து வருடங்களுக்கு தொழிலாளர்களுக்கு எந்தவிதமான கூலி உயர்வும் இல்லாமல் செய்து விடுவீர்களா என்று கேட்கலாம். அந்த அடிப்படையில் திட்டம் வகுக்க வேண்டியதில்லை. ஒரு 5 சதவீதம் உயர்வு கிடைத்தால் அதில் இரண்டு பெர்ஸன்ட் தன் செலவிற்குப் போக மீதியுள்ள 3 சத விதத்தையே சேமித்து வைக்கலாம். இதை, ஒரு உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். இப்போழுது 60—40 வார முறை அமுலில் இருக்கிறது. 40 வாங்கியவர்களுக்கு 60 என்று திடீரென்று உயர்த்திக் கொடுத்தோம். அவர்கள் அப்பொழுது கிடைப்பதையும் செலவு செய்து விடலாம். அப்பொழுது, 40-ல் இருந்து, 60 ஆகியிருப்பதால் அதில் ஒரு பத்தாவது சேமித்துத்தான வைக்க வேண்டுமென்று சொல்லலாம். அவர்களுக்கு அந்தப் பணத்தில் பூர்ண உரிமை இருப்பதோடுகூட அதை நாட்டின் பொருளாதார உயர்விற்காகவும் உபயோகப்படுத்திக் கொள்ள முடியும். அவர்கள் அந்தப் பணத்தை பின்னல் வட்டியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆக, சேமிப்பு உயருவதின் மூலம் அபிவிருத்தி திட்டங்களையும் நாம் கூடுதல் அளவு எடுத்துக் கொள்ளலாம். அந்த அடிப்படையில் நாம் திட்டமிடக் கடமைப் பட்டிருக்கிறோம்.

Sri A. GOVINDASAMY : சேமிப்பு விஷயத்தில் இப்பொழுது சிறுசேமிப்பு திட்டத்திற்கு வசூல் செய்பவர்கள், பஞ்சாயத்து போர்டுகள் சேர்த்து வைத்திருக்கும் பணத்தையெல்லாம் சிறுசேமிப்புத்திட்டத்தில் கட்டும்படி தாசில்தார்களும், பஞ்சாயத்து ஆபீஸர்களும் வற்புறுத்தி வாங்குகிறார்கள். இத்தனை அவர்கள் திட்டங்கள் பாதிக்கப்படாதா ? அல்லது அவர்கள் திட்டங்களே எடுத்துக் கொள்ளும்போது அதிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சிறுசேமிப்பில் போட்டால் ஒரு வருடத்திற்குப் பின்தான் எடுத்துக் கொள்ளலாம். அது பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். பொது ஸ்தாபனங்களில் உள்ள பணத்தை சிறு சேமிப்பில் போடுவதில் பிரயோஜனம் இல்லை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அது பரிசீலனை செய்து வரப்படுகிறது. பரிசீலனை செய்யப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். பொது ஸ்தாபனங்கள் பணம் நம் கையில்தானே இருக்கிறது ? அதை சிறு சேமிப்பில் போட்டு திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்வது,

[Sri C. Subramaniam] [10th March 1959

அரிசியையும் கல்லையும் சேர்த்துப் போட்டு விட்டு பின்னர் அதை தனித்தனியாகப் பிரித்தெடுத்து, நானும் வேலை செய்கிறேன் என்று சொல்வது போல்தான் இருக்கும், முதலில் அந்தப் பணத்தை சிறு சேமிப்பில் போட்டு விட்டு பின்னர் அதை திருப்பி எடுப்பது. ஆகவே, அதைப்பற்றி பரிசீலனை செய்து கூடிய சீக்கிரம் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். சேமிப்பை எப்படி அதிகப்படுத்த முடியும் என்று எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து ஆலோசித்து திட்டம் வகுக்க முடியுமென்று நான் கருதுகிறேன். சேமிப்பு மட்டும் எற்பட்டால் போதாது. திட்டங்களை பெரிய அளவில் நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லும்போது நிர்வாக அமைப்புகளை ஆங்காங்கு மாற்றியமைக்கவேண்டுமென்று அனுபவத்தில் பார்க்கிறோம். சென்னையில் ஒரு அமைப்பை வைத்துக் கொண்டு இங்கிருந்து உத்தரவுகள் போட்டு அவைகளினுல் கிராமங்களில் காரியங்கள் நடைபெறவேண்டுமென்று எதிர் பார்க்கக்கூடாது என்பதுதான் நமக்கு அனுபவம் மூலம் தெரிய வருகிறது. ஆகவே ஆங்காங்கு, அந்தந்த பகுதிகளில் உள்ள திட்டங்களை விரைவில் நிறைவேற்றுவதற்கு நிர்வாக அமைப்பை மாற்றவேண்டியிருக்கிறது. அதற்காகதான் பஞ்சாயத்து ஆக்டை மாற்றியமைத்திருக்கிறோம். ஆகவே திட்டங்களை நல்லமுறையில் விரைவில் நிறைவேற்றுவதற்கு நிர்வாக அமைப்பில் என்னென்ன மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று யோசனை செய்து, நிர்வாக அமைப்பு எப்படி அமையவேண்டுமென்று ஆலோசனை செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். பொதுத்துறையில் எப்படி தொழில்கள் நடத்த வேண்டும், அதற்கு எப்படி நிர்வாக அமைப்பு இருக்க வேண்டுமென்று ஆராய கடமைப் பட்டிருக்கிறோம். இப்பொழுது இருப்பது போல் மந்திரிகளுக்கு கீழ் உள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பொறுப்பில் அதை நடத்த முடியுமா என்று யோசனை செய்கிறோம். சந்தானம் அவர்கள் ஹிந்து பத்திரிகையில் ஒரு கடிதை எழுதி வெளியிட்டிருந்தார்கள். அதை எல்லா அங்கத்தினர்களும் படிக்க வேண்டும். அவர்கள் சொல்லியிருப்பது ஒரு வழி. பல திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இதை காங்கிரஸ் கட்சிதான் முடிவு செய்யவேண்டும் என்பதல்ல. நாம் எல்லோரும் உட்கார்ந்து கருத்துக்களை பரிமாறிக்கொண்டு முடிவு செய்தால் நல்ல திட்டங்களை உருவாக்க முடியும் என்ற முறையில்தான் உங்கள் ஒத்துழைப்பு இருக்கிறதா என்று கேட்டிருக்கிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை. இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சபை முன் சமர்பிக்க விரும்புகிறேன். இன்று நம் நாட்டில் மக்கள் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. அதில் ஒரு பகுதியினருக்குத்தான் இன்று வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மற்றவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலருக்கு ஒரு சில நாட்கள்தான் வேலை இருக்கிறது. ஆக, மக்களின் சக்தி சேதமாகிக் கொண்டிருக்கிறது. நாட்டின் நன்மைக்கு இந்த மனித சக்தியைப் பயன்படுத்த முடியுமா என்பதற்கு நாம் முதல் இடம் கொடுத்துப் பார்க்கவேண்டும். மற்ற வசதிகள் நமக்கு குறைவாக இருந்தாலும், இன்று சேதமடைந்து கொண்டிருக்கும் மனித சக்தி நமக்கு போதிய அளவில் இருக்கிறது. அதை ஒன்று திரட்டி அந்த சக்தி மூலம் நாம் நிறைவேற்றிக் கொள்ளும் திட்டங்கள் பல இருக்கின்றன. அத்திட்டங்களை நாம் அப்படி நிறைவேற்றிக் கொள்ள முடிந்தால் இன்று அவர்கள் சமுதாயத்திற்கு பெரும் பாரமாக இருப்பதற்கு பதிலாக நம் சமுதாயத்தில் ஒரு பெரிய புதிய சக்தியை வளர்க்க முடியும். இதை எந்த முறையில் செய்யலாம் என்பதைப்பற்றி யோசனை செய்து பார்க்க வேண்டும். சர்வாதிகார முறையில் எல்லோரும் வேலை செய்ததான் ஆக வேண்டும் என்ற முறையில் திட்டம் வகுத்துச் செய்யமுடியாது. இன்னார் இன்னின்ன வேலைகள்தான் செய்ய வேண்டும், சாப்பாடு சாப்பிட வேண்டுமென்றால் கட்டாயம் வேலை செய்ததான் தீர வேண்டுமென்ற முறையில் நாம் காரியங்களைச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். ஜனநாயக முறை தவறிப் போகாமல், இந்த அடிப்படையில் வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து அதன் மூலம் அவர்கள் வாழ்க்கையும் உயர வழிதோடுகூட இன்று சேதமாகிக் கொண்டிருக்கும் மனித சக்தியையும் நாம் பயன்படுத்தி நாடு முன்னேறுவதற்கு வழிகள் காணமுடியும். இது ஒரு பெரிய பிரச்னை. இதற்கு உடனடியாக ஒரு தீர்வு காண முடியாது.

10th March 1959] [Sri C. Subramaniam]

கோடிக்கணக்கான மக்களின் சக்தியை பயன்படுத்தும் ஒரு திட்டத்தை வகுப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. ஆனால் நாம் இந்தத் திட்டத்தை உருவாக்க முடிந்தால் இதன் மூலம் பெரியதொரு சக்தி சமுதாயத்தில் ஏற்பட்டு இன்றுள்ள பல குறைகள் தானாகவே தீரும் என்று நான் நம்புகிறேன். ஆகையினால் தான் இதிலே என்ன செய்ய என்பதைப் பற்றிநாம் யோசித்துப் பார்க்கவேண்டும். மனித சக்தியைப் பயன்படுத்தி ஊருக்குப் பொதுவாக எப்படி பல காரியங்களைச் செய்ய முடியும், ஒவ்வொரு கிராமத்திற்கு வேண்டிய காரியங்களை எப்படிச் செய்ய முடியும், அவர்கள் பொறுப்பிலே எப்படி காரியங்களை அவர்களே செய்துபார்க்க வேண்டும் என்பதைப்பற்றி யெல்லாம் யோசிக்கவேண்டும். இருக்கக்கூடிய வசதிகளை உபயோகப்படுத்தி, இருக்கக்கூடிய மனித சக்தியை உபயோகபடுத்தி எந்த அளவுக்கு பொருள்கள் உற்பத்தி அதிகரிக்கிறதோ அந்த அளவுக்கு நாட்டின் வாழ்க்கைத்தரம் உயர முடியும். பயன்படுத்தாமல் மனித சக்தி சேதமடைவது நாட்டிற்கே பெரிய நஷ்டம் என்பதில் சந்தேகமே இயையாது. மூன்றுவது திட்டத்தை உருவாக்கும்பொழுது இதற்கு முதல் இடம் கொடுத்து, நாம் எல்லோரும் கூடி ஒரு திட்டத்தை கண்டுபிடிப்போமானால், நம்முடைய ராஜ்யத்திற்குமட்டுமல்ல, இந்தியாவுக்கே அது ஒரு புதிய வழிகாட்டி போல் இருக்கும். மகாத்மா காந்தி அடிகள் வகுத்த கொள்கைகளும் பயன்படுமா என்பதைப் பற்றியும் பரிசீலனை செய்து பார்க்கலாம். அம்மாதிரி பரிசீலனை செய்து பார்த்தால் **உண்மையிலேயே நாம் ஒரு திட்டத்தை வகுக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.**

முதலாவதாக கதர் திட்டத்தை எடுத்துக்கொள்ளுவோம். கதர் திட்டத்தைக் கைவிடவேண்டும். கைத்தறிக்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சொன்னார்கள். இந்த விஷயத்தை கொஞ்சம் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கதருக்கு என் இவ்வளவு பணம் செலவு செய்கிறீர்கள், கைத்தறிக்கு செலவு செய்யக்கூடாதா என்று கேட்டார்கள். இன்றைக்கு பார்ப்போமானால், கைத்தறி நெசவாளர்களுக்கு ஓரளவுக்கேனும் வாழ்க்கை நடத்த ஊதியம் கிடைக்கிறது. ஆனால் அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்கு போதிய ஊதியம் கிடைக்கிறது என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்கு ஓரளவுக்கு வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், வேலையே இல்லாமல் இன்றைக்கு பட்டினி கிடக்கக்கூடிய லட்சக்கணக்கான மக்கள் வரட்சி பிரதேசங்களில் வாழ்கிறார்கள். வருஷத்தில் ஒரு மாதம் கூட வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். சதாகிவம் அவர்கள் என்னைப் பார்க்கிறார்கள். அவர்கள் பகுதியிலே அம்மாதிரி மக்கள் நிறைய வாழ்கிறார்கள். காஞ்சிபுரத்திலோ, சென்னையிலோ, கடலூரிலோ அம்மாதிரி நிலைமை பார்க்க முடியாது. தாராபுரம் போன்ற வரண்ட பகுதியிலே இருப்பவர்களுக்குத் தெரியும். அங்கே வாழ்கிறவர்களுக்குத்தான் தெரியும். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 அணு கூட கூலி கிடைப்பதில்லை. அப்படியிருக்கும் பொழுது, ஏதோ முனிசிபல் எலக்ஷனில் வோட்டுகள் கிடைக்கவேண்டுமென்பதற்காக வேண்டுமானால் கைத்தறி நெசவாளர்களுக்கு நாங்கள் தான் உண்மையிலேயே உழைக்கிறோம் என்று காண்பிப்பதற்கு வேண்டுமானால் " அவர்கள் ஏதோ உங்களுக்குக் கொடுக்காமல் கதருக்கு கொண்டுபோய் செலவிடுகிறார்கள். உங்களுக்கு நாங்கள்தான் சாதகமாகப் பேசுகிறோம் " என்ற முறையில் பார்த்தால் இம்மாதிரி வாதம் செய்யலாமே தவிர, உண்மையைப் பார்க்கும்பொழுது இம்மாதிரி சொல்ல முடியாது. மனித சக்தியை எவ்வாறு பயன்படுத்த முடியும், அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வேலை வாய்ப்பு எப்படி வழங்க முடியும் என்பதைப்பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு அரை வயிறு கஞ்சி கிடைப்பவர்களுக்கு ஒரு வயிறு கஞ்சி கிடைப்பதற்கு வேண்டிய வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்கு எதாவது திட்டங்கள் சொன்னால் அதை எடுத்துக்கொள்ளுவதற்குத் தயார். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் கொஞ்சம் பேர்களுக்கு அரை குறையாக வாழ்க்கை நடத்துவதற்கு வாய்ப்பு

[Sri C. Subramaniam] [10th March 1959

